மொழியியல்

தொகுதி 6 ஜனவரி - மார்ச் எண் 3

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

கி. கருணாகரன்

ந. நடராசப்பிள்ளை

அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

1983

T13390

R005A07

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர் :	டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோவில்)
துணைத் தலைவர் :	டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்)
செயலாளர் :	டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)
பொருளாளர் :	டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள் :	திரு ஜி. கிருட்டிணபகவான் (மலேசியா)
	டாக்டர் கே. குத்தாலம்பிள்ளை (திருவனந்தபுரம்)
	டாக்டர் பி. சாம்டேனியல் (அல்ஜீரியா)
	திரு ந. அருணபாரதி (வாரணாசி)
	செல்வி மு. சுசிலா (அண்ணாமலைநகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 200-00	US $ 50-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 300-00	US $ 75-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 20-00	US $ 5-00
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு)	ரூ 30-00	US $ 7-00
ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு)	ரூ 10-00	

மொழியியல் 6, 3, (1982)

பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசை முறை

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

. பழந்தமிழ் நூல்கள்

சங்க இலக்கியங்கள் எனக் கருதப்படும் பத்துப்பாட்டும், ங்க மருவிய நூல்களாக எண்ணப்படும் திருக்குறள், சிலப்பதி ாரம், மணிமேகலை ஆகியவையும் பழந்தமிழ் நூல்கள் எனக் ருதப்படுகின்றன என்பது முன்னர் (மொழியியல் தொகுதி 6 ண் 2, பக். 9) குறிப்பிடப்பட்டது. இந்நூல்கள் தோன்றிய ாலமே பழந்தமிழ்க் காலப்பகுதி என்றும், இந் நூல்களை முன் ழந்தமிழ் நூல்கள் என்றும், பின் பழந்தமிழ் நூல்கள் என்றும் ிரு பிரிவாகப் பிரிக்கலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

பழந்தமிழ் நூல்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அக ானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் முன் பழந்தமிழ் நூல்கள் என்றும், பரிபாடல்,

கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் பின் பழந்தமிழ் நூல்கள் என் ம் பாகுபாடு செய்யப் பட்டன.

இப் பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசைமுறையை ஆராய் வதே இக் கட்டுரையின் நோக்கம். பொதுவாக, நூல்களின் காலத்தை ஆராய்வதற்குப் பலவேறு செய்திகள் பயன்படும். குறிப்பிட்ட ஒரு நூலின் ஒரு கருத்தினை மற்றொரு நூல் கூறுதல், முந்திய நூலை எடுத்தாளுதல், முன் பின்னாகத் தோன்றிய சமு தாயப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றோடு மொழிக் கூறுகளும் துணைபுரியும். சங்க இலக்கியங்களைப் பற்றி ஆராய்கின்ற போது, அதிலும் குறிப்பாக முன் பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசை முறையை ஆராய்கின்றபோது மொழிக்கூறுகள் அதிகமாகப் பயன்படுவதில்லை. முன் பழந்தமிழ் நூல்கள் அனைத்தும் பலவேறு புலவர்களால் பலவேறு காலத்தில் பாடப் பட்ட பாடல்களைக் கொண்டுள்ளன என்பதும், இவை தொகை நூல்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழ் நூல் கள் கி. மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. 4 அல்லது 5-ம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியைச் சார்ந்தவை. இந்நிலையில் எந்த நூலுக்குப் பின்னர் எந்த நூல் தோன்றியது என்பதைக் காணுவதே இக்கட்டுரையின் நோக்கமேயன்றி, எந் தெந்த நூல்கள் எந்தெந்த நூற்றாண்டில் தொகுக்கப்பட்டன என்று காணுவது நோக்கமன்று.

கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட பலவேறு அறிஞர்களின் கருத் துரைகளை மையமாகக் கொண்டு தக்க தடை விடைகளின் மூலம் ஒப்புமைக் காலத்தையே இக்கட்டுரை ஆராய்ந்து நிற்கின்றது.

2. முன் பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசை முறை

2.1 எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை சங்க நூல்கள் எனக் கருதப்படுகின்றன. இவற்றில் எட்டுத்தொகையின்கண் 2360 பாடல்களும் பத்துப்பாட்டில் 10 பாடல்களும் காணப்படு கின்றன. இவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஏறத் தாழ ஐந்நூறு. இவர்கள் அனைவரும் ஒரே காலத்தவரோ

அன்றி ஒரே சமயத்தினரோ அல்லது ஒரே பகுதியினரோ அல்லர். இதுபற்றிப் பேசும் ஐயர் புறநானூற்றைப் பற்றிக் கூறும்போது ''இந்நூற் செய்யுட்களால் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தா ரல்லர், ஒரு குலத்தாரல்லர், ஒரு சாதியாரல்லர்; ஓரிடத்தாரு மல்லர். பாடியவர்களும் இத்தன்மையவரே. இவர்களில் அந்தணர் சிலர், அரசர் பலர், வணிகர் பலர், வேளாளர் பலர், பெண் பாலரும் உளர்.'' எனக் கூறுவார் (புறம் 1956 பக். 9). இது பிற நூல்களுக்கும் பொருந்தும். எனவே இப்புலவர் பெருமக்கள் பலவேறு காலத்தவர் என்பதும் பலவேறு பகுதியினர் என்பதும் இங்கு நினைவு கூரற்பாலன.

எனினும், இவர்கள் அனைவரும் 400 அல்லது 500 ஆண்டு களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள் எனக் கருத இடமுண்டு. பதிற்றுப்பத்து அரசர்களின் காலப்பகுதி ஏறத் தாழ 250 வருடங்களாகும். இவர்களுக்கு முன்னும் பின்னும் ஒரு நூறு ஆண்டுகளைக் கூட்டின் ஏகதேசம் 450-500 ஆண்டு இடை வெளியீடு எனக் கருதலாம். இக்காலப் பகுதியில் தான் சங்க இலக்கியங்கள் அனைத்தும் ஆக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவதில் தவறு இல்லை. சங்க காலப் பாடல்கள் குறுந் தொகை என்றோ அல்லது நற்றிணை என்றோ தனித்தனி நூல்களாகப் பாடப்படவில்லை. தனித்தனித் செய்யுட்களாக அவ்வப்போது பாடப்பட்டனவேயன்றி தனித்தனி நூல்களாக ஆக்கப்படவில்லை. இதனால் சங்க நூல்களில் எவை முதன் முதலில் பாடப்பட்டன எனக் கூறுவது அர்த்தமற்ற ஒன்று. இதைப்போன்றே முதன் முதலாக இயற்றப்பட்ட பாடல்கள் எவை என்றோ அல்லது எந்நூலில் அவை உள்ளவை என்றோ திட்டவட்டமாகக் கூறுதல் முடியாது. எல்லா நூல்களிலும் உள்ள பல பாடல்கள் சம காலத்தில் தோன்றியவையாக இருக்கலாம். இன்னும் பல பிந்தியனவாகவும் பல முந்தியனவாகவும் இருக்க லாம். இவற்றையெல்லாம் பின்னர் வகுத்துத் தொகுத்துப் பல வேறு நூல்களாகத் தொகுத்தனர். தொகுக்கப்பட்ட இந்நிலையில் பலவேறு நூல்களின் கீழெல்லைக் காலத்தை ஓரளவு நிர்ணயம் செய்யமுடிகின்றதே அன்றி மேலேல்லையை நிர்ணயம் செய்ய முடியவில்லை. மேலும் குறுந்தொகை, நற்றிணை, அகம், புறம்

போன்ற எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகை முந்தியது அல்லது பிந்தியது என்றோ அல்லது நற்றிணை முந்தியது அல்லது பிந்தியது என்றோ கூறுவது பொருந்தாது. இவ்வாறே பிற நூல்களையும் பிந்தியன என்றோ முந்தியன என்றோ கூறுவது ஒவ்வாது. ஆனால் எது முன்னர்த் தொகுக்கப்பட்டது எது பின்னர்த் தொகுக்கப்பட்டது என்று கூற இயலும். ஒரு நூலில் காணப்படும் பாடல்களைப்பாடிய புலவர்கள் பிற நூல்களிலும் பாடியுள்ளனர். எனவே சமகாலத்துப் பாடல்கள் எல்லா நூல்களிலும் காணப்படு கின்றன. எடுத்துக் காட்டாகக் கபிலர் பாடிய பாடல்கள் பரிபாடல் ஒழிந்த எல்லாச் சங்க இலக்கியங்களிலும் உள்ளன.

சங்க நூல்களில் எட்டுத் தொகை நூல்களின் தொகுக்கப்பட்ட (இலக்கியதீபம். 1952, 70 - 83) முறையை ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை பல வேறு காரணங்களைக் காட்டி

குறுந்தொகை
நற்றிணை
அகநானூறு
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து
புறநானூறு

என்ற வரிசையில் மேலே காட்டிய நூல்கள் தொகுக்கப்பட்டன எனக் கூறுவர். உ. வே. சாவும் சங்க இலக்கியங்களில் குறுந்தொகையே முதலில் தொகுக்கப்பட்டது என்பார். (1962. பக். 7 – 8) இவரை அடியொற்றித்தான் வையாபுரிப்பிள்ளை குறுந்தொகையை முதலில் வைப்பார்.

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய மூன்று நூல் களும் அடிகளின் எண்ணிக்கை அளவை அடிப்படையாக வைத்துத் தொகுக்கப்பெற்றன என்பதும் நற்றிணை, அகம் ஆகியவற்றைத் தொகுப்பித்தவர்கள் பாண்டியர்கள் என்பதும் நாம்அறிந்த செய்திகள். குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என ஆயினமையின் இவர் அகநானூற்றைத் தொகுத்த மதுரை

உப்பூரிகுடிக் கிழாருடன் தொடர்புடையவர் எனக் கூறிக் குறுந் தொகையும் மதுரையில் தொகுக்கப்பட்டது எனவும் பிள்ளை கருதுவார்.

2.1.1. நற்றிணையும் குறுந்தொகையும்

நற்றிணையைத் தொகுத்த பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியும் குறுந்தொகையில் 270- ஆம் பாடலைப் பாடிய பாண்டியன் பன்னாடு தந்தானும் ஒருவரே என்றும் இவனே நற்றிணையில் இரண்டு செய்யுட்களை (97, 301) பாடியவன் என்றும் கூறுவார். நற்றிணையை இவன் தொகுத்ததுடன் குறுந்தொகையிலும் செய்யுள் இயற்றியிருத்தலின் இந்நூலைத் தொகுத்த காலத்துக்கு முன்பாக வேனும் அல்லது சமகாலத்தி லேனும் இவன் வாழ்ந்து வரல் வேண்டும்'' என்பார் (பக். 72), இந்நூல் என்பது இங்கு குறுந்தொகை.

குறுந்தொகையில் இவன் பாடியிருப்பதால் இது இவனுக்குப் பின்னரும் தொகுக்கப் பட்டிருக்கலாம்.

ஆனால் நற்றிணை இவன் காலத்திலேயே தொகுக்கப்பட்டு விட்டது. எனவே நற்றிணைப் பாக்கள் அனைத்தும் இவனுக்கு முன்பாக வாழ்ந்த பல புலவர்களாலும் இவனுடன் ஒத்த காலத்தில் வாழ்ந்த புலவர்களாலும் பாடப்பட்ட பாக்களே. இவனுக்குப் பின்னர் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்ட பாக்கள் நற்றிணை யில் நிச்சயமாக இடம் பெற்றிருக்க முடியாது.

ஆனால் குறுந்தொகையைப் பற்றி அங்ஙனம் திட்டவட்ட மாகக் கூறமுடியாது. குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ. இவர் மாறன் வழுதிக்குப் பின்னரோ அல்லது சமகாலத்திலோ தான் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் குறுந்தொகையிலும் பாண்டியன் மாறன் வழுதி பாடியுள்ளான். முன்னர்க் குறிப்பிட்ட படி குறுந்தொகை

(1) இவனுக்குப் பின்னர்த் தொகுக்கப்பட்டிருக்கலாம் அல்லது

(2) இவனுடைய காலத்திலேயே

(அ இவன் நற்றிணையைத் தொகுப்பித்ததற்கு முன்னர்

(ஆ) இவன் நற்றிணையைத் தொகுப்பித்ததற்குப் பின்னர் தொகுக்கப்பட்டிருக்கலாம். இவன் காலத்திற்கு முன்னர் நிச்சயமாகத் தொகுக்கப்பட்டிருக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கருதலாம்.

இதுபற்றிக் கூறும் பிள்ளை "இவ்விரண்டு நூல்களும் ஏறத்தாழ சம காலத்தில் தொகுக்கப்பட்டன என்று கொள்ளலாம், (மேற்படி பக்-72) என்று கூறி குறுந்தொகை முந்தியதாக இருக்கலாம் என்பதற்கு இரு காரணங்களைக் காட்டுவார்.

(1) குறுந்தொகையில் 9, 56, 378, 396 ஆகிய பாக்களைப் பாடிய கயமனார் என்ற புலவர்

பாசடை நிவந்த ....

....

கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும் (குறு. 9) என்ற குறுந்தொகைப் பாடலால்தான் இப்பெயர் பெற்றார் என்றும் இவர்பாடிய பாடல்கள் நற்றிணையில் கயமனார் என்னும் காரணப் பெயரில் காணப்படுவதால் காரணப் பெயர் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த குறுந்தொகைப் பாடல் முந்தியது என்றும் அக்காரணப் பெயரைக் கொண்டுள்ள நற்றிணை பிந்தியது என்றும் கூறுவார். இதே காரணங்களைக் காட்டி உ. வே. சா. குறுந்தொகை எல்லா நூல்களுக்கும் முன்னர்த் தொகுக்கப் பட்டது எனக் கூறுவர். இதைப் பின் பற்றிப் பிள்ளையும் குறுந்தொகை முன்னர்த் தொகுக்கப்பட்டது என்பார். இவ்வாதம் ஏற்கக் கூடியதன்று. அப்படியே ஏற்றுக் கொண்டாலும் இவர் பாடிய பாடல்களுள் குறுந்தொகைப் பாடல்கள் முந்தியன என்றும் நற்றிணைப் பாடல்கள் பிந்தியவை என்றும் கொள்ளலாமேயன்றி குறுந்தொகையில காணப்படும் பாடல்களில் இறுதியாகப் பாடப் பட்ட பாடல் நற்றிணையில் இறுதியாகப் பாடப் பட்ட பாடலகளுக்கு முந்தியன என்று கொள்ள முடியாது. கயமனாருக்குப் பின்னர் வாழ்ந்த எத்தனையோ புலவர்கள் இரு நூல்களைச் சார்ந்த பாடல்களில் பலவற்றைப் பாடியிருக்க முடியும்.

குறுந்தொகைப் பாடலின் காரணமாகப் கயனாமர் போன்ற பெயர்கள் ஏற்பட்டிருந்தாலும் அவர்கள் பாடல்கள் அனைத்தையும் (முன்னர் தோன்றியிருப்பினும் அல்லது பின்னர்த் தோன்றியிருப்பினும் காரணப் பெயர் கொண்டு காட்டலாம். குறுந்தொகைப் பாடலே காரணப் பெயராலேயே குறிக்கப்பட்டுள்ளது. எனவே குறுந்தொகைப் பாடல் முந்தியது என்ற வாதம் பொருந்தாது.

(2) குறுந்தொகை நான்கடிச் சிறுமையுடையது, எட்டடிப் பெருமை கொண்டது. ஆனால் நற்றிணை 9 அடிச் சிறுமையும் 12 அடிப் பெருமையும் கொண்டது. எனவே குறுந்தொகை முதல் முதலாகத் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்பார்.

இதுவும் பொருந்தும் வகையாக அமையவில்லை. எவ்வாறு கீழெல்லையிலிருந்து மேலே போக முடியுமோ அது போன்று மேலேயிருந்தும் வரமுடியும். இதுபற்றிப் பின்னர்க் காண்போம்.

2.1.2 நற்றிணையும் அகநானூறும்

நற்றிணைக்குப் பின்னர்தான் அகநானூறு தொகுக்கப்பட்டது என்பது பிள்ளையின் நிலை. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பாண்டியன் மாறன் வழுதி. இவனே நற்றிணையிலும் குறுந்தொகையிலும் பாடியுள்ளான்.

இதைப்போன்றே அகநானூற்றைத் தொகுப்பித்தவன் உக்கிரப் பெருவழுதி. இவன்பாடிய செய்யுட்களும் அகநானூற்றிலும் நற்றிணையிலும் உள்ளன. அகநானூறு இவன் காலத்திலேயே தொகுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இவனே நற்றிணையில் பாடியிருப்பதால் நற்றிணைத் தொகுப்பில் மூன்று சாத்தியங்களே இருக்கமுடியும். நற்றிணை,

(1) இவன் காலத்திற்குப் பின்னரோ அல்லது

(2) இவன் காலத்திலேயே

(அ) இவன் அகநானூற்றைத் தொகுப்பித்ததற்குச் சிறிது முன்னர் அல்லது

(ஆ) இவன் அகநானூற்றைத் தொகுப்பித்ததற்குச் சிறிது பின்னர்த் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

நிச்சயமாக இவன் காலத்திற்கு முன்னர்த் தொகுக்கப்பட்டிருக்க முடியாது. இவன் காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் என எண்ணுவதற்கு இயலாத நிலை உள்ளது. நற்றிணையைத் தொகுப்பித்தவனும் பாண்டியனே. இவர்கள் இருவரும் ஒரே காலத்தவர்கள் என எண்ணுவதற்குரிய சான்றுகள் எதுவுமில்லை. மேலும் இருவரும் ஒரே காலத்தில் ஒருவர் அகத்தையும் மற்றொருவர் நற்றிணையையும் தொகுப்பித்தனர் என எண்ணுவது பொருந்தாது. எனவே இவனே நற்றிணையிலும் பாடியிருப்பதால் அகநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர்தான் நற்றிணை தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என முடிவு கட்டலாம். அகத்தில் இவன் பாடல் அமைந்திருப்பதும் இவன் இதைத் தொகுப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணமாகவும் அமையலாம்.

அகநானூறு இவன் காலத்தில் தொகுக்கப்பட்டுவிட்டதால் இவனுடைய பாடல்களும் இவன் காலத்தில் வாழ்ந்த புலவர்களின் பாடல்களுமே அகநானூற்றில் பிந்திய பாடல்களாகக் கருதப்பட வேண்டும். இவனைப் பாடியவர்கள் ஐயூர் மூலங்கிழார், ஔவையார்.

அகநானூறு நற்றிணைக்கு முன்னரே தொகுக்கப்பட்டுவிட்டது என்று கொண்டால் அடியளவை வைத்துக் கொண்டு குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என வரிசைப் படுத்துவது பொருந்தாத வாதமாகிவிடும். அகநானூறு பதின்மூன்றடிச் சிறுமையையும் முப்பத்தொரு அடி பெருமையையும் கொண்டது. நற்றிணையோ பன்னிரண்டடிப் பெருமையும், ஒன்பதடிச் சிறுமையும் கொண்டது. எனவே அகநானூற்றிற்குப் பின்னர் நற்றிணை தொகுக்கப்பட்டிருக்கலாம் என எண்ணுவதற்கு இடம் ஏற்படுகின்றது.

முன்னர்க் குறிப்பிட்டபடி நற்றிணையைத் தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. இவன் நற்றிணையில்

மட்டுமன்றிக் குறுந்தொகையிலும் பாடியுள்ளான். நற்றிணைப் பாடல்கள் இவன் காலத்தோடு முடிவு பெற்றுவிட்டன. ஆனால் குறுந்தொகையோ இவன் காலத்திற்குப் பின்னரும் சில பாடல்கள் பாடப் பட்டிருக்கலாம். இவனுடைய பாடல்களும் நற்றிணையில் இடம் பெற்றிருப்பதால் அகநானூற்றைத் தொகுத்த உக்கிரப் பெருவழுதியைப் போன்று தன்னுடைய பாடல் இடம் பெற்ற நற்றிணையை இவன் தொகுப்பித்திருக்கலாம்.

2.1.3. ஐங்குறுநூறு

உக்கிரப் பெருவழுதியின் நண்பன் ராசசூயம் வேட்டபெரு நற்கிள்ளி எனக் கூறுவர். (புறம் 1956 பக். 67). ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்த யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறையும் பெருநற்கிள்ளியும் போரிட்டதாகக் காணப்படுகின்றது. எனவே உக்கிரப் பெருவழுதி, இரும்பொறை, பெருநற்கிள்ளி ஆகியவர்கள் சமகாலத்தினர் என ஊகிக்கலாம். எனவே ஐங்குறு நூறும் அகநானூறும் சமகாலத்திலோ அல்லது சிறிது முன் பின்னாகவோ அடுத்துத் தொகுக்கப் பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியவர்கள் உலோச்சனார், ஔவையார், பாண்டரங்கண்ணனார், பேரிச்சாத் தனார் ஆகிய புலவர்கள். இவர்களில் உலோச்சனார் புறத்தில் மட்டுமின்றி நற்றிணையிலும் பாடியுள்ளார். ஔவையார் அக நானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றிலும் பேரிச்சாத்தனார் அகம், நற்றிணை, குறுந்தொகை, புறம் ஆகிய வற்றிலும் பாடியுள்ளனர். இவர்களால் பாடப்பட்ட அகநானூற்றுப் பாடல்கள் இவர்கள் காலத்து வாழ்ந்த உக்கிரப்பெருவழுதியின் காலத்திலேயே தொகுக்கப்பட்ட நிலையில் நற்றிணை, குறுந் தொகை ஆகியவை பின்னர்த் தொகுக்கப்பட்டவை எனக் கருத லாம்.

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் போரிட்டனர். (புறம் 1956 : 68). எனவே இருவரும் ஒரே காலத்தவர் என்பது வெளிப்படை, தலையாலங்கானத்துச் செருவென்ற செழியனைப்

பாடியவர்கள் இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், குறுங்கோழியூர் கிழார், குடபுலவியனார், மாங்குடி மருதனார் ஆகியோர். இவர்களுள் கல்லாடனார் அகம், குறுந்தொகை, புறம் ஆகியவற்றிலும் நக்கீரர் அகம், குறுந்தொகை, நற்றிணை, புறம் ஆகியவற்றிலும் மாங்குடி மருதனார் அகம், குறுந்தொகை, நற்றிணை, புறம் ஆகியவற்றிலும் பாடியுள்ளனர்.

இவர்கள் பாடிய அகநானூற்றுப் பாடல்களும் பிறவும் சமகாலத்தன. ஆயினும் அகநானூறு உக்கிரப்பெருவழுதி காலத்திலேயே தொகுக்கப்பட்ட நிலையில் நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிற்கு முன்னரே தொகுக்கப்பட்டுவிட்டது எனக் கருதலாம்.

ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர் கிழாரும், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை காலத்தவனான தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய மாங்குடிமருதனாரும் முறையே குறுந்தொகையிலும், குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகியவற்றிலும் பாடியிருப்பதால் ஐங்குறுநூறு முன்னரே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறும் பிள்ளை இதே வாதத்தினை நற்றிணை, குறுந்தொகை தொகுப்பிலோ அல்லது அகநானூறு, நற்றிணைத் தொகுப்பிலோ கடைப்பிடிக்கவில்லை. இவ்வாதத்தினை மேற்கொண்டால் அகத்தைத் தொகுப்பித்த உக்கிரப்பெருவழுதி நற்றிணையில் பாடியிருப்பதால் அகத்துக்குப் பின்னரே நற்றிணை தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் நற்றிணையைத் தொகுப்பித்த பன்னாடுதந்த பாண்டியன் மாறன்வழுதி குறுந்தொகையில் பாடியிருப்பதால் நற்றிணைக்குப் பின்னரே குறுந்தொகை தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் பொருந்துவனவாகும்.

ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை. தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். இவர் புறநானூற்றில்

மைந்துடையானை கைவைத் துறங்கவும்
....
மேலோ ருலக மெய்தினன்......... (புறம். 229)

எனப் பாடியிருப்பதால் யானைக்கட் சேய்க்குப் பின்னரும் உயிர் வாழ்ந்தார் என்பதும் அதற்கு முன்னரே ஐங்குறுநூறு இவரால் (யானைக்கட்சேய் உயிரோடு இருக்கும் போதே) தொகுக்கப்பட்டு விட்டது என்பதும் வெள்ளிடைமலை.

ஐங்குறுநூற்றின் தொகுப்பு அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவை தொகுக்கப்பட்ட காலங்களுக்கு முற்பட்டதா இல்லை பிற்பட்டதா என்ற கேள்வியை எழுப்பும் பிள்ளை

(1) யானைக்கட்சேய் இறந்த செய்தியைக் குறிக்கும் கிழார் குறுந்தொகையிலும் மூன்று செய்யுட்களை (166, 167, 214) இயற்றியுள்ளார் எனவும்

(2) யானைக்கட்சேய் (17ஆம் புறப்பட்டால்) தலையாலங் கானத்துச் செருவென்ற செழியன் காலத்தவன். இவனைப் பற்றிப் பாடிய மாங்குடி மருதனார் அகம் (89) குறுந்தொகை (164, 1்3, 302) நற்றிணை (120, 123) புறம் (24, 26, 313, 335, 3/2, 3்6) ஆகிய நான்கு நூல்களிலும் செய்யுட்கள் இயற்றியுள்ளார் எனவும் காட்டி

''இச் செய்திகளை ஊன்றிநோக்கினால் இங்குக் குறித்த நூல்களனைத்திற்கும் முற்பட்டு ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டதாகலாமென்று கொள்ளுதல் பொருந்தும். மேலும் ஐங்குறுநூறு தொகுத்தற்கு எளிதாயுள்ளது. அடியின் சிற்றெல்லை குறுந்தொகையைக் காட்டிலும் குறைந்துள்ளது. இக் காரணங்களை நோக்கும் போது ஐங்குறுநூறு முதலில் தோன்றியது என்று கொள்ளலாம்'' என முடிவு கட்டுவார். (1952 : பக் 76-77) மேலும் திணைப் பகுப்புப் பற்றிப் பேசிக் ''குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்ற மூன்றும் ஏறத்தாழ சமகாலத்து தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று துணிந்தோம். இத்துணிபோடு பொருந்த ஐங்குறுநூறு எல்லாவற்றிலும் முற்படத் தொகுக்கப்பட்டதென நாம் கொள்ளலாம்'' என்று முடிவுகட்டுவார்.

இவ்வாறு முடிவு கட்டும் பிள்ளை பின்னர் எந்தக் காரணமும் கூறாமல் ''எனவே தொகைநூல்களைக் கால முறையில் கீழ்வருமாறு அமைக்கலாம்'' என்று கூறி (மேற்படி பக். 80)

1. குறுந்தொகை
2. நற்றிணை
3. அகநானூறு
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. புறநானூறு

என வைப்பார். இதன்படி ஐங்குறுநூறு குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றின் பின்னர்த் தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் எதுவென அறிய முடியவில்லை. எனினும் உ. வே. சாவின் செல்வாக்காக இருக்கலாம் என்பதைப் பின்னர் விளக்கியுள்ளேன்.

ஐங்குறுநூறு குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகியவை தொகுக்கப்பட்டதற்கு முன்னமேயே தொகுக்கப்பட்டது என்பது வெள்ளிடை மலையாகும்.

ஐங்குறுநூற்றில் பாடிய ஐந்து புலவர்களும் குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகிய நூல்களிலும் பாடியுள்ளனர். மருதம் பாடிய ஓரம்போகியார் அகம் (2), குறுந்தொகை (5), நற்றிணை (2), புறம் (1) ஆகிய நூல்களிலும் நெய்தல் பாடிய அம்மூவனார் அகம் (6), குறுந்தொகை (11), நற்றிணை (10) ஆகிய நூல்களிலும், குறிஞ்சி பாடிய கபிலர் அகம் (18), குறுந்தொகை (29), நற்றிணை (20), புறம் (28) ஆகிய நூல்களிலும், பாலை பாடிய ஓதலாந்தையார் குறுந்தொகை (3) யிலும், முல்லை பாடிய பேயனார் அகம் (1), குறுந்தொகை (4) ஆகிய நூல்களிலும் பாடியுள்ளனர்.

எல்லாப் புலவர்களும் குறுந்தொகையில் பாடியுள்ளமையால் குறுந்தொகைக்கு ஐங்குறுநூறு எவ்வாற்றானும் பிந்தியதன்று என முடிவு கட்டலாம். அகத்திலும் நால்வர் பாடியுள்ளனர். நற்றிணையிலும் மூவர் பாடியுள்ளனர். எனவே ஐங்குறுநூறு இவற்றிற்குப் பிந்தியது என முடிவு கட்டுதல் முடியாததொன்று.

யானைக்கட்சேய் மாந்தாஞ்சேரலிரும்பொறை காலத்தவரான இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடிய உலோச்சனார், நற்றிணையிலும் ஔவையார் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலும் பேரிச்சாத்தனார் அகம், நற்றிணை, குறுந்தொகை தொகுக்கப்பட்டதற்கு முன்பே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டுவிட்டதெனக் கருதலாம். அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலும் பாடியிருப்பதால் குறுந்தொகை, புறம் ஆகியவை இவர்கள் பாடல்களை மட்டுமல்லாமல் பிற புலவர்கள் பாடிய பாடல்களையும் கொண்டுள்ளன என்பது இங்குச் சுட்டிக் காட்டற்பாலது. எல்லாப் புலவர்களும் குறுந்தொகையில் பாடியுள்ளனர். குறுந்தொகை இப்புலவர்கள் பாடிய பாடல்களோடு எத்தனையோ பிற புலவர்கள் பாடிய பாடல்களையும் கொண்டது. பல இவர்களுக்கு முந்தியவர்கள் பாடியனவாக இருந்தாலும் இன்னும் பலவோ நிச்சயமாக இவர்களுக்குப் பிந்தியவர்கள் பாடியனவாகவே இருத்தல்வேண்டும்.

இதே வாதம் நற்றிணை, அகம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். இவர்களில் நால்வர் அகத்திலும், மூவர் நற்றிணையிலும் பாடியுள்ளனர்.

ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர்கிழாரும் குறுந்தொகையில் பாடியுள்ளமை குறுந்தொகைத் தொகுப்பு ஐங்குறுநூறு தொகுப்புக்குப் பின்னரே என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஐங்குறுநூறு தொகுப்பின் காரணம்பற்றிக் கூறும் பிள்ளை மேலும் ஐங்குறுநூறு தொகுத்தற்கு எளிதாயுள்ளது. அடியின் சிற்றெல்லை குறுந்தொகையைக் காட்டிலும் குறைந்துள்ளது என்பார். இவைதானா ஐங்குறுநூறு தொகுப்பிற்குக் காரணம்? இவை மட்டுமே தொகுப்பிற்குக் காரணம் எனக் கருதுவது பொருந்தாததாக உள்ளது. சேரவரசன் தொகுப்பித்ததற்கு முக்கிய காரணம் வேறு ஒன்றாக இருக்கலாம் என எண்ணுவதில் தவறு எதுவும் இல்லை. இதுபற்றிப் பின்னர் காண்போம்.

2.1.4 பதிற்றுப்பத்து

இனிப் பதிற்றுப்பத்து பற்றிக் காண்போம். இது பத்துச் சேரவரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பாடல்

களின் தொகுப்பாகும். முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்க வில்லை. இவை முறையே உதியஞ்சேரலையும் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையையும் பற்றிப் பாடியன எனக் கருதுவர். பிற எட்டுப் பத்துக்களும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பல் யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை, இளஞ்சேரலிரும்பொறை ஆகியோர் பற்றி முறையே குமட்டூர்க்கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க்கிழார் ஆகிய புலவர்களால் பாடப்பட்டவை.

இப்புலவர் பெருமக்கள் பலர் பதிற்றுப்பத்தில் மட்டுமின்றிப் பிற இலக்கியங்களிலும் பாடியுள்ளனர்.

	ஐங்.	அகம்.	நற்.	குறு.	புறம்.	பதி.
குமட்டூர்க் கண்ணனார்	-	-	-	-	-	11-20
பாலைக்கௌதமனார்	-	-	-	1	-	21-30
காப்பியாற்றுக்காப்பியனார்	-	-	-	-	-	31-40
பரணர்	-	34	12	16	13	41-50
காக்கைப்பாடினியார்	-	-	-	1	1	51-60
கபிலர்	201-300	18	20	29	28	61-70
அரிசில் கிழார்	-	-	-	1	7	71-80
பெருங்குன்றூர்க்கிழார்	-	1	4	1	5	81-90

இப்புலவர்களுள் பலர் பாடப்பட்ட அரசர்களுடன் உடன் உறைந்தவர்கள் என்பதும் அவர்கள் காலத்திலேயே வாழ்ந்தவர்கள் என்பதும் நாம் அறிந்த உண்மை. இப்புலவர்களுள் குமட்டூர்க்கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார் ஆகிய இருவரும் வேறு சங்க நூல்கள் எதிலும் பாடினாரில்லை. கபிலர், எல்லா நூல்களிலும், பரணர் ஐங்குறுநூறு ஒழிந்த பிற எல்லா நூல்களிலும் பாடியுள்ளனர்.

இதனால் கபிலராலும் பரணராலும் பாடப்பட்ட பத்துக்களும் அதற்கு முன்னர்ப் பாடப்பட்ட இரண்டு, மூன்று, நான்காம் பத்துக் களும் ஆறாம் பத்தும் குறுந்தொகை, நற்றிணை, அகம், புறம் ஆகிய நூல்களில் காணப்படும் இவர்களால் பாடப்பட்ட பாடல் களுடன் காலத்தில் ஒப்ப வைத்து எண்ணற்பாலன.

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பதிற்றுப்பத்தில் மட்டு மல்லாமல் குறுந்தொகையிலும் புறத்திலும் பாடியுள்ளார். இந் நிலையில் குறுந்தொகைக்கும் புறநானூற்றுக்கும் பிந்தியது பதிற்றுப்பத்து எனக் கூறுதல் முடியாது.

எட்டாம் பத்தைப் பாடிய அரிசில்கிழாரும் குறுந்தொகையில் ஒரு பாடலும் புறநானூற்றில் ஏழு பாடல்களும் பாடியுள்ளார். எனவே எட்டாம் பத்தும் குறுந்தொகைக்கும் புறநானூற்றுக்கும் பிந்தியது அன்று என முடிவு கட்டலாம்.

ஒன்பதாம் பத்தைப் பாடிய பெருங்குன்றூர் கிழாரோ அகம் (1). நற்றிணை (4), குறுந்தொகை (1), புறம் (5) ஆகிய நூல் களிலும் பாடியுள்ளதால் பதிற்றுப்பத்தின் ஒன்பது பத்தும் காலத் தால் இப்பாடல்களுடன் ஒப்ப வைத்து எண்ணப்படத்தக்கன என விளங்கும்.

நான்காம் பத்தைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனாரின் மைந்தனே (பதிற்றுப்பத்து 1968 பக். 36) காப்பியஞ்சேந்தனார். இவருடைய பாடல் ஒன்று நற்றிணையில் காணப்படுகிறது.

இவற்றையெல்லாம் வைத்து நோக்கின் கிடைக்கும் பத்துக் களின் இறுதிப் பத்தாகிய ஒன்பதாம் பத்துகூட காலத்தால் குறுந் தொகை, நற்றிணை, அகம் ஆகியவற்றிற்குப் பிந்தியது அன்று என்பது நன்கு விளங்கும். ஒன்பதாம் பத்தைப் பாடிய பெருங் குன்றூர் கிழாரே அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல் களில் பாடியுள்ளமை இதனை நன்கு தெளிவுபடுத்தும்.

இனிப் பத்தாம் பத்து ஐங்குறுநூற்றைத் தொகுத்த யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் பற்றிப் பாடியது

எனப் பலர் கருதுவர். இது உண்மையாயின் பத்தாம் பத்து பாடப்பட்ட காலம் இவன் காலம் எனக் கருதலாம். இவ்வாறாயின் இவன் காலத்தில் வாழ்ந்த பல புலவர்கள் குறுந்தொகை, நற்றிணை, அகம் ஆகிய நூல்களிலும் பாடியிருப்பதால் பத்தாம் பத்தும் காலத்தால் இப்பாடல்களுடன் ஒருசேர வைத்து எண்ணப் படுவதற்குரியது என்றும் முடிவு கட்டலாம்.

பதிற்றுப்பத்தினைத் தொகுத்தவர் பற்றியோ அல்லது தொகுப்பித்தவர் பற்றியோ எதுவும் தெரியவில்லை. இது சேரவரசர்களைப் பற்றிய நூலாதலின் பாண்டியர்களோ அல்லது சோழர்களோ இதைத் தொகுப்பித்திருக்க முடியாது எனக் கருத இடமுண்டு. எனவே சேரநாட்டு அரசர் ஒருவரால்தான் இது தொகுக்கப் பட்டிருக்க வேண்டும்.

இறுதிப் பத்து யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் பற்றியதாக இருக்குமாயின் நிச்சயமாக அவன் காலத்திலோ அல்லது அவன் காலத்திற்குப் பின்னரோதான் இது தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். பிள்ளை ''பெரும்பாலும் இது தொகுக்கப் பெற்ற காலத்தில் இவ்விரும்பொறை ஜீவதசையில் இருந்தவனாகலாம்'' என்பார்.

இவன்தான் ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவன். இந்நூல் அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிற்கு முன்னர் தொகுக்கப்பட்டது என முன்னர்க் கண்டோம். புறநானூறு இவற்றிற்குப் பின்னர்த் தொகுக்கப்பட்டது. ஐங்குறுநூறு ஐந்து நூறு நூறு செய்யுட்களைக் கொண்டது. இவற்றைப் பாடிய புலவர்களில் மூவர் (கபிலர், ஓரம்போகியார், தவிர) சேரநாட்டினர். இந்நிலையில்தான் ஐங்குறுநூறு சேரவரசனால் தொகுக்கப்பட்டது எனக் கருதலாம்.

ஐங்குறுநூற்றைத் தொகுப்பதற்கான எண்ணம் ஏற்பட்டதே பதிற்றுப்பத்தின் நிலை என எண்ணலாம். சேரவரசர்களின் மீது பாடப்பட்ட பாடல்களைத் தொகுப்பித்த எண்ணமே யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறைக்கு ஐங்குறுநூற்றையும் தொகுப்பிக்கும் எண்ணம் உண்டாயிற்று என எண்ணலாம்.

இந்நிலையில் பதிற்றுப்பத்து யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையாலோ அல்லது அவனது ஆசியினால் இன்னொருவராலோ தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அப்படியாயின் இது ஐங்குறுநூற்றுக்கு முன்னர்த் தொகுக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும் கருதலாம். வருங்கால ஆய்வே உண்மையை நிருபிக்கும்.

பதிற்றுப்பத்து பற்றிப் பேசும் பிள்ளை, ஐங்குறுநூற்றில் பாடிய கபிலர் ஏழாம்பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடியுள்ளமையால் இவர் யானைக்கட்சேய்க்கு முற்பட்டவர் என்றும் பெரும்பாலும் ஐங்குறுநூறு தொகுக்கப்பெற்றதும் பதிற்றுப்பத்துக்கு முன்பே யாகலாம் என்றும் கூறுவார். நிச்சய மாக ஐங்குறுநூற்றில் பாடிய கபிலர் சேய்க்கு முற்பட்டவரே. ஆனால் பதிற்றுப்பத்து தொகுக்கப்பட்ட காலமே இங்கு ஆராயப் படுவது. காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பதிற்றுப்பத்தில் பாடியுள்ளார் என்றும் இப்புலவர் பெயர் முதன் முதலில் குறுந் தொகையில் காரணம் பற்றி வழங்கப்பட்ட தென்றும் ''எனவே குறுந்தொகைக்குப் பின்பே பதிற்றுப்பத்துத் தொகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதும் எளிதில் புலப்படும்'' என்பார் (1952 பக். 75)

குறுந்தொகையில் காக்கையைப் பாடிய காரணத்தால் தான் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்ற பெயர் உண்டாயிற்று என்பது உண்மையே. ஆனால் பதிற்றுப்பத்தில் இப்பெயர் இருப்பதால் குறுந்தொகை முதலில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற வாதம் பொருந்தாது. ஒரு பாடலைப் பாடிய காரணத்தால் ஏற்படும் பெயர் முன்னாலும் பின்னாலும் பாடப்பட்ட பிற பாடல்களைப் பற்றிக் குறிப்பிடும்போதும் ஏற்றப்படலாம்.

இதே நிலையைத்தான் சயமனார், கள்ளிலாத்திரையனார், ஓரேருழவர் போன்ற புலவர் பெயர்களிலும் காண்கிறோம். இப் பெயர்கள் பிற நூல்களிலும் காணப்படுவதால் குறுந்தொகை எல்லா நூல்களுக்கும் முன்னர்த் தொகுக்கப்பட்டது எனக் கூற முடியாது. குறுந்தொகை தொகுக்கப்படுவதற்கு முன்னரே (ஆனால் அப்பாடல்கள் பாடப்பட்டதற்குப் பின்னர்) இப்புலவர்கள்

இச்சிறப்புப் பெயர்களால் அறியப்பட்டிருக்கலாம். எனவே இவர்கள் பின்னால் இப்பெயர்களால் அழைக்கப்பட்டு இவர்கள் இயற் பெயர் மறைந்திருக்கலாம். எனவே இதை வைத்துக்கொண்டு உ. வே. சாவும் குறுந்தொகைதான் முதன் முதலில் தொகுக்கப் பட்டது எனக் கூறுவது பொருந்தாது.

மேலும் உ.வே.சா. பிற நூல்கள் வாயிலாகச் சிறப்புப் பெயர் பெற்றவர்களின் சிறப்புப் பெயர்கள் குறுந்தொகையில் வரவில்லை என்பதையும் சான்றாகக் காட்டுகிறார். ஆனால் வேறு நூல்களினுல் சிறப்புப் பெயர்ப் பெற்ற இம்மென்கீரனாரோ (அகம்) அல்லது இரும்பிடர்த்தலையாரோ அல்லது இவர்களைப் போன்ற பிறரோ குறுந்தொகையில் பாடினதாகத் தெரியவில்லை அவர்கள் வேறு நூல்களில் பாடி அதன் காரணமாகச் சிறப்பு பெயர் பெற்று அவர்களே குறுந்தொகையிலும் பாடி ஆனால் இயற் பெயரில் குறிக்கப்பட்டிருந்தால் குறுந்தொகை முன்னர்த் தொகுக்கப்பட் டிருக்கவேண்டும் எனக் கருதலாம்.

இந்நிலையில் உ. வே. சா இதனை வைத்துக் கொண்டு குறுந்தொகை எல்லா நூல்களுக்கும் முன்னரே தொகுக்கப்பட்டு விட்டது எனக் கூறுதல் பொருந்தாது. இதே வாதத்தைத் தான் பிள்ளை பதிற்றுப்பத்துக்கும் குறுந்தொகைக்கும் பொருத்து கிறார்.

2. 1. 5. புறநானூறு

இனிப் புறநானூறு பற்றிக் காண்போம். புறநானூற்றில் பதிற்றுப்பத்தில் பாடிய புலவர்களின் பாடல்களும் இதைப் போன்றே வேறு தொகை நூல்களில் பாடியவர்களின் பாடல்களும் காணக்கிடக்கின்றன.

இதுபற்றி ஆராயும் பிள்ளை ஐங்குறுநூற்றைத் தொகுத்த கூடலூர் கிழார் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை ''மேலோருலகம்'' எய்திய செய்தியைப் புறம் 229 ஆம் பாடலில் குறிக்கிறார் என்றும் எனவே ஐங்குறுநூறு தொகுப்பித்ததன் பின்னர்தான் புறநானூறு தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுவார். எனவே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டதன் பின்னர்

தான் புறம் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நிச்சயமாகக் கருதலாம்.

யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், அகநானூற்றைத் தொகுத்த உக்கிரப் பெருவழுதி ஆகியோர் சம காலத்தவர்கள். உக்கிரப்பெருவழுதி காலத்தி லேயே அகநானூறு தொகுக்கப்பட்டுவிட்டது. நெடுஞ்செழியன் பாடிய பாடலும் (72) அவனைப் பாடிய பாடல்களும் புறநானூற் றில் காணப்படுகின்றன. இந்நிலையில் புறநானூறு தொகுப்பு அகநானூறு தொகுக்கப்பட்டதற்குப் பின்னர்தான் நிகழ்ந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

அகம், நற்றிணை, குறுந்தொகை ஆகியவை அகப்பாடல் களின் தொகுப்பு. இவற்றை தொகுத்த பின்னரே புறநானூறு தொகுக்கப்பட்டது எனக் கருதலாம்.

சிறுபாணாற்றுப்படைத்தலைவனான ஓய்மாநாட்டு நல்லியக் கோடனைப் புறத்திணை நன்னாகனார் புறநானூற்றில் பாடியுள் ளார். புறம் 176). இவன் பேகன் முதலிய ஏழு வள்ளல்களுக் கும் காலத்தால் பிந்தியவன்.

இதைப்போன்றே கடையேழு வள்ளல்களின் பிற்காலத்தைச் சேர்ந்த குமணனைப் பெருஞ்சித்திரனார் (புறம். 158, 163) பெருந்தலைச் சாத்தனார் (164, 165) ஆகியோர் புறத்தில் பாடியுள்ளனர்.

மேலும் பிள்ளை ஐங்குறுநூறு குறுந்தொகை போன்ற நூல் களுக்கு முன்னரே தொகுக்கப்பட்டுவிட்டது எனக்கூறிய பின்னர் தரும் பட்டியலில் குறுந்தொகையை முதலில் வைப்பதற்குக் காரணம் ஐயர் அவர்களின் செல்வாக்கே என எண்ணலாம். ஐயர் குறுந்தொகைதான் முதன் முதல் தொகுக்கப்பட்டது எனக் கூறியதை மறுக்க முடியாத நிலையிலேயே பிள்ளையும் குறுந் தொகையை முதலில் வைக்கிறார் என எண்ணலாம். எனினும் பின்னர் (1956) ஐங்குறுநூறே முன்னர்த் தொகுக்கப்பட்டது என்பார்.

2. 1. 6. தொகுப்பு வரிசைமுறை

எனவே இதுகாறும் கூறியவற்றால் எட்டுத்தொகை நூல்களை அவை தொகுக்கப்பட்ட காலத்தை அடிப்படையாக வைத்துக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. பதிற்றுப்பத்து
2. ஐங்குறுநூறு
3. அகநானூறு
4. நற்றிணை
5. குறுந்தொகை
6. புறநானூறு

சங்க இலக்கியத் தொகுப்பு முதன் முதலில் சேர நாட்டிலேயே தொடங்கிற்று எனவும் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறைதான் இதற்கு மூல காரணமாக இருந்தான் என்றும் அவனைப் பின்பற்றி அவன் காலத்தில் வாழ்ந்த உக்கிரப் பெரு வழுதி அகநானூற்றைத் தொகுப்பித்தான் என்றும் அதன் பின் னர் நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்கள் தொகுக்கப்பட்டனவென்றும் முடிவு கட்டலாம்.

2. 2. . பத்துப்பாட்டு

2. 2. 1 வையாபுரிப்பிள்ளை நிறுவிய வரிசை முறை

பத்துப்பாட்டில் காணப்படும் வெவ்வேறு பாடல்களின் காலத்தை ஆராய்ந்த வையாபுரிப்பிள்ளை பலவேறு காரணங் களைக் காட்டிக் கீழே கண்டவாறு வரிசைப்படுத்துவார். (1952: 4-12)

1. பொருநராற்றுப்படை
2. பெரும்பாணாற்றுப்படை
3. பட்டினப்பாலை
4. குறிஞ்சிப்பாட்டு
5. மலைபடுகடாம்

6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. முல்லைப்பாட்டு
9. சிறுபாணாற்றுப்படை
10. திருமுருகாற்றுப்படை

இவற்றுள் பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் கரிகால் பெருவளத்தான் மீது பாடப்பட்டன என்பதையும், பட்டினப்பாலையையும், பெரும் பாணாற்றுப்படையையும் இயற்றியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பதையும் காட்டி இந்நிலையில் இம் மூன்றும் சமகாலத்தன என்று கூறுவார் பிள்ளை.

மேலும் மதுரைக்காஞ்சியும், நெடுநல்வாடையும் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மீது பாடப்பட்டவை எனவே இவை இரண்டும் சமகாலத்தன ஆதல் வேண்டும்.

குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் கபிலர். இவர் பற்றி அக நானூற்றில் நக்கீரர் புகழ்ந்து பாடுதலின் நக்கீரர் காலத்திற்கு முன்னரே கபிலர் வாழ்ந்திருத்தல்வேண்டும் என்றும், இதனால் குறிஞ்சிப்பாட்டு, நக்கீரரால் இயற்றப்பட்ட நெடுநல்வாடைக்கும், அதனோடு ஒத்த காலத்ததாகிய மதுரைக்காஞ்சிக்கும் முந்தியது என்றும் கூறுவார். இதே நிலையில் சிலபல காரணங்களைக் காட்டி மேலே கண்ட வரிசையில் இந்நூல்கள் ஆக்கப்பட்டன என்று நிறுவிச் செல்வார் பிள்ளை, இவ்வரிசைமுறை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே.

2. 2. 2 பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும்

இத்துடன் பத்துப்பாட்டுப் பாடல்களுக்கும் எட்டுத்தொகைப் பாடல்களுக்குமிடையே உள்ள காலம் பற்றி ஆராய்தல் நலம். பத்துப்பாட்டில் முதன் முதலாகப் பாடப்பட்ட பாடல்களுள் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவை கரிகால் பெருவளத்தானைப் பற்றிய பாடல்கள். அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பாடல்கள். அவன் காலத்தே பாடப்

பட்டவை. நேரில் நின்று பாடப்பட்டவை. பட்டினப்பாலையைக் கேட்டுப் பத்தாயிரம் பொன் கரிகால் பெருவளத்தான் புலவர் பெருமகனுக்குப் பரிசளித்தான்.

கரிகால் பெருவளத்தானின் தந்தை உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி. இவனைப் பரணர் பாடியுள்ளார். இவனை முன்னி லைப் படுத்திப் புறநானூற்றில்

''நீயே, அலங்குளைப் பரீ இயிவுளிப்
பொலந் தேர்மிசைப் பெரிாலிவு தோன்றி
மாக்கட னிவந் தெழுதரும்
செஞ் ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை யாகன் மாறே'' (புறம் 4. 13-17)

எனக் கூறுதல் காணத்தக்கது. இந்நிலையில் பரணர் காலத்துக்குப் பின்னர்தான் பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் தோன்றியிருத்தல் வேண்டும் என முடிவு கட்டலாம். பொரு நராற்றுப்படையும் பட்டினப்பாலையும் பெரும்பாணாற்றுப்படையும் சமகாலத்தன. இவையே முதல் நூல்கள். இவையனைத்தும் பரணர் காலத்துக்குப் பிற்பட்டன எனக் கூறலாம்.

பரணர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தைப் பாடியவர். எனவே ஐந்தாம் பத்திற்குப் பின்னர்தான் இவை பாடப் பட்டன என முடிவு கட்டலாம்.

குறிஞ்சிப்பாட்டைப் பத்துப்பாட்டில் நான்காவதாக வைப்பார் பிள்ளை. குறிஞ்சிப்பாட்டு கபிலரால் பாடப்பட்டது. கபிலர் பதிற்றுப்பத்தில் 7ஆம் பத்தைப் பாடியவர். எனவே குறிஞ்சிப் பாட்டும் 7ஆம் பத்தும் சம காலத்தனவாகும்.

மலைப்படுகடாம் நன்னன் சேய் நன்னனைப் பற்றியது. இவனுடைய தந்தை நன்னன் பதிற்றுப்பத்தில் நான்காவது பத்தின் பாட்டுடைத் தலைவனான களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரலால் வெல்லப்பட்டவன் என்ற குறிப்பு பல நூல்களில் காணப்படுகின்றது. எட்டாம் பத்தில்

சுடர்வீ வாகை நன்னற் தேய்த்து

எனவும் அகத்தில்

இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் (அகம் 199– 19-22)

எனவும் கூறப்படுகின்றது. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும் மலைபடுகடாம் நன்னனின் தந்தையும் சமகாலத்தவர்கள். எனவே பரணரோடு காலத்தால் ஒத்த கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டுக்குப் பின்னர்தான் மலைபடுகடாம் தோன்றியது எனக்கருதுவார் பிள்ளை. ஆனால் நார்முடிச்சேரலுடன் சமகாலத்தவன் நன்னன் என்றால் குறிஞ்சிப்பாட்டிற்கு முன்னரே மலைபடுகடாம் தோன்றியிருக்க லாம் என எண்ணலாம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவன். இவன் ஐங்குறுநூற்றைத் தொகுத்த யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறையின் காலத்தவன். இந்நிலையில் மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் உண்டான காலத்திலேயே ஐங்குறுநூறு தொகுக்கப்பட்டுவிட்டது என முடிவு கட்டலாம். இவனே பத்தாம் பத்தின் தலைவனாகக் கருதப்படுகிறான். எனவே பதிற்றுப்பத்து இக்காலத்திலேயே முழுமையடைந்துவிட் டது என எண்ணலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி இவனே பதிற்றுப் பத்தைத் தொகுப்பித்திருப்பானாயின் இதன் தொகுப்பும் முடி வடைந்துவிட்டது எனக் கருதலாம்.

ஐங்குறுநூறு, அகநானூறு ஆகிய நூல்கள் சமகாலத்தில் அல்லது சற்று முன்னரும் பின்னரும் தொகுக்கப்பட்டன என்று கண்டோம். அகநானூற்றைத் தொகுப்பித்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறை, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் ஆகியோர் சம காலத்தவர்கள். இதனால் அகநானூறு

தொகுக்கப்பட்டபோது பத்துப்பாட்டுள் பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை ஆகியவை தோன்றி விட்டன என எண்ணலாம். இவற்றுள் மதுரைக் காஞ்சியும், நெடுநல்வாடையும் அகநானூறு தொகுப்புக்கு சற்று முன்னரோ அல்லது பின்னரோ அல்லது சம காலத்திலோ இருக்க வேண்டும். அகநானூற்றில் நக்கீரர் பாடல்கள் உள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடன். இவனைப் பற்றிப் புறநானூற்றில் (176) நன்னாகனார் பாடியுள்ளார். இதில் விதியிடம் கூறும்போது

> பெருமா விலங்கைத் தலைவன் சீறியாழ்
> இல்லோர் சொன்மலை நல்லியக் கோடனை
> உடையை வாழியெற் புணர்ந்த பாலே

எனப் பாடுகின்றார். இதனால் நல்லியக் கோடன் காலத்திலேயே பாடப்பட்ட பாடல் இது எனக் கருதலாம். இந்நிலையில் புறநானூற்றில் இப்பாடல் உள்ளதால் புறநானூறு தொகுப்பு இதற்குப் பின்னரே இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

மேலும் நல்லியக் கோடனின் வழித் தோன்றலாகிய ஓய்மான் வில்லியா தனையும் இப்புலவர் புறநானூற்றில் பாடியுள்ளார் புறம் 379இல்

> வில்லியாதன் கிணையேம் பெரும
> ....
> ....
> நசை தர வந்தனென் யானே........

எனப்பாடுவார். இதனால் சிறுபாணாற்றுப்படைக்குப் பின்னரும் புறநானூற்றுப் பாடல்கள் பாடப்பட்டன என்பதும் புறநானூறு தொகுக்கப்பட்ட காலம் இதற்குப் பின்னரே என்பதும் நன்கு விளங்கும்.

இந்நிலையில் பத்துப்பாட்டில் காணப்படும் நூல்களுள் திரு. முருகாற்றுப்படை தவிர மீதியுள்ள நூல்கள் அனைத்தும் புறநானூறு தொகுக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே தோன்றிவிட்டன என்று கருதலாம். இவையனைத்துமே பதிற்றுப்பத்து 5—ஆம் பத்திற்குப் பின்னரே எழுந்தன என்பது முன்னரே சுட்டிக் காட்டப்பட்டது.

2.2.3 பத்துப்பாட்டு வரிசை முறை

இவற்றைக் கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

பொருநராற்றுப்படை
பெரும்பாணாற்றுப்படை
பட்டினப்பாலை
மலைபடுகடாம்
குறிஞ்சிப்பாட்டு
மதுரைக் காஞ்சி
நெடுநல்வாடை
முல்லைப்பாட்டு
சிறுபாணாற்றுப்படை
திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டு எப்போது தொகுக்கப்பட்டது என்பது தெரிய வில்லை. இதுபற்றிப் பேசும் உ.வே.சா. இவற்றைத் தொகுத்தோரும் சங்கப்புலவர்களே எனக்கூறி மலைபடுகடாம் உரையில் நச்சினார்க்கினியர் கூறுவதை எடுத்துக் காட்டுவார் (பத்துப்பாட்டு 1961 பக் xi).

பத்துப்பாட்டின் முதல் பாட்டு உருவாவதற்கு முன்பே எட்டுத் தொகைப் பாடல்கள் பல உருவாகிவிட்டன என்பது வெளிப்படை. ஆனால் புறநானூறு தொகுக்கப்படுவதற்கு முன்பே திருமுருகாற்றுப் படை ஒழிந்த ஏனைய பத்துப்பாட்டு நூல்கள் பாடப்பட்டுவிட்டன. எனினும் பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கும் என்பதில் பாட்டை முதலில் வைக்கக் காரணம் ''இவற்றின் அருமை பெருமையைப் புலப்படுத்தும்'' என்பார் உ. வே. சா. சங்க இலக்கியங்களை வகைப்படுத்தும் மீனாட்சிசுந்தரன்

பத்துப்பாட்டு
அகநானூறு
புறநானூறு
பதிற்றுப்பத்து
குறுந்தொகை
நற்றிணை
ஐங்குறுநூறு

எனக் கூறி பழைய வடிவங்கள் வரும் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டது இப்பகுப்பு என்றும் கூறுவார் (1965 ; 118). இது பொருந்துவதாகத் தெரியவில்லை. எந்தப் பழைய வடிவங்கள் என்றும் எவ்வளவு கூடுதலாக வருகின்றது என்றும் கூறவில்லை. இதே நிலையைத்தான் பேராசிரியர். வ. அய். சுப்பிரமணியத்தின் (1973) வரிசை முறையிலும் காண்கிறோம்.

இந்நூல்கள் அனைத்தும் தொகை நூல்கள். இவற்றில் பாடிய புலவர்கள் ஒரே காலத்தவரல்லர். ஒரே புலவர் பல நூல்களில் பாடியுள்ளார். எடுத்துக்காட்டாகக் கபிலர் எட்டுத்தொகை நூல்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்களில் எல்லாம் பாடியுள்ளார். இவரால் பாடப்பட்ட அகநானூற்றுப்பாடலில் வரும் ''உன்'' என்ற சொல்லை வைத்துக் கொண்டு அதனால் அகநானூறு மிகப்பிந்தியது என்றோ அல்லது பதிற்றுப்பத்தில் காணப்படும் ''யூபம்'' என்ற சொல்லை வைத்து அது மிகப் பிந்தியது என்றோ கூறுவது தவறு. இச்சொல்லாட்சிகளுக்கு வேறு விளக்கங்கள் காண வேண்டுமேயன்றி நூல்கள் பிந்தியன என்று கூறினால் இவரால் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய பிற நூல்களின் காலம் வேறா என்ற வினா எழுவது இயற்கை.

3. பின்பழந்தமிழ் நூல்கள்

பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை பின்பழந்தமிழ் நூல்கள் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. இவற்றுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பிந்தியன என்பதில் அறிஞர்களிடையே எந்த விதமான கருத்து

வேற்றுமையும் கிடையாது. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் முறையே

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை
>
> (கட்டுரைக்காதை - வெண்பா)

என்றும்

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்
>
> (22.59-61)

என்றும் எடுத்தாண்டுள்ளன. இந்நிலையில் திருக்குறள் இவ்விரண்டு காப்பியங்களுக்கும் முற்பட்டது என நிச்சயமாக முடிவுகட்டலாம்.

இந்நிலையில் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள் ஆகியவற்றில் எவை முந்தியன, எவை பிந்தியன என்பதே இங்கு ஆராயப்படுகின்றது. இவற்றுள் பரிபாடல் ஒரு தொகைநூல். கலித்தொகை ஒருவரால் பாடப்பட்டதா அல்லது ஐவரால் பாடப்பட்டதா என்ற கருத்துவேற்றுமை அறிஞர்களிடையே உண்டு. இதுபற்றியும் இங்கு பரக்க ஆராயப்படுகின்றது. திருக்குறள் தனி ஒருவரால் எழுதப்பட்டது. இதன் ஒப்புமைக் காலமும் இங்கு ஆராயப்படுகின்றது.

3.1 பரிபாடல்

3.1.1 தொகுப்புக் காலம்

இதனுடைய காலம் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமையுண்டு. சங்க நூல்களில் பரிபாடலும் கலித்தொகையும் பிந்திய நூல்கள் என்பர். எனினும் பரிபாடல் நூலில் காணப்படும் பாடல்கள் எப்போது தோன்றின என வரையறுப்பதில் சில சிக்கல்கள் உள்ளன. பரிபாடலில் 6, 8, 11, 20 ஆகிய பாடல்களைப் பாடிய நல்லந்துவனாரைப்பற்றி அகநானூற்றில் மருதனிளநாகனார்

''சீர்மிகு முருகன் தண் பரங்குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை'' அகம் 59

எனக் கூறுதலின் அகநானூறு தொகுப்புக்கு முன்னரோ அல்லது சமகாலத்திலோ நல்லந்துவனாரின் பரிபாடல்கள் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது ஒருதலை. எனவே பரிபாடல்களில் இவர் தம் பாடல்களேனும் அகநானூறு தொகுப்புக்கு முன்னரே பாடப் பட்டுள்ளன என நம்பலாம்.

வையாபுரிப் பிள்ளை பரிபாடல்களைப் பாடிய ஆசிரியர் நல்லந்துவனார் வேறு அகத்தில் குறிக்கப்பட்ட நல்லந்துவனார் வேறு என்பார். ஆனால் இவர்கள் இருவரும் ஒருவரே என்பது தான் இன்றைய அறிஞர்களின் எண்ணம். உ. வே. சாவும் இருவரும் ஒருவரே என்பார்.

பரிபாடலில் 21ஆம் செய்யுளுக்கு இசை வகுத்தவர் கண்ணகனார். இவர் நற்றிணையில் ஒன்றும் (79) புறத்தில் ஒன்றும் (218) ஆக இரு செய்யுட்கள் பாடியுள்ளார். இதனால் 21ஆம் செய்யுளும் நற்றிணையும், புறமும் தொகுக்கப்பட்ட காலத் திற்கு முன்பே பாடப்பட்டுவிட்டது என எண்ணலாம். இவர் பற்றிப் பேசும் உ. வே. சா ''இவர் காலத்தவர் கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார், பொத்தியார் முதலியோர்'' என்றும் ''பரிபாடலில் செவ்வேள் மேலதாகிய 21–ஆம் செய்யுளுக்கு இசை வகுத்தவர் இவரே'' என்றும் (புறம் 1956 பக் 33) கூறுவார். பிசிராந்தையார் அகத்தில் ஒன்றும் (308) நற்றிணையில் ஒன்றும் (91) புறத்தில் நான்கும் (67, 184, 191, 212) எனப் பல செய்யுட்களைச் சங்க இலக்கியங்களில் பாடியுள்ளமையும் பொத்தி யார் புறத்தில் 5 (217, 220, 221, 222, 223) செய்யுட்களும் கோப்பெருஞ்சோழன் குறுந்தொகையில் நான்கும் (20, 53, 129, 147) புறத்தில் மூன்றும் (214, 215, 216) பாடியுள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

நன்னாகனார் என்னும் புலவர் பரிபாடலில் இரண்டாம் பாடலுக்கு இசை வகுத்தவர். இவர் புறநானூற்றில் 5 (176, 376, 379, 381, 384) செய்யுட்களைப் பாடியவர். இதுவும் பரிபாடலின் கால நிர்ணயத்திற்கு உதவுவதாக உள்ளது.

15ஆம் பாடலைப் பாடிய இளம்பெரு வழுதி புறநானூற்றில் (182) பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனால் புறநானூறு தொகுப்புக்கு முன்னரே இப்பாடலும் பாடப்பட்டு விட்டது என நம்பலாம்.

எஞ்சிய புலவர்கள் எவரும் வேறு எந்த சங்க நூல்களிலும் பாடவில்லை, இந்நிலையில் இப்பாடல்கள் பிந்தினவையாக இருக்கலாம் என எண்ண இடம் உண்டு.

எனவே பரிபாடலின் மேலெல்லை அகநானூற்றுத் தொகுப்பிற்கு முன்னர் என்றும் கீழெல்லை பிந்தியது என்றும் கருதலாம்.

3. 1. 2. மொழிநிலை

பரிபாடலில் காணப்படும் மொழிநிலை பிந்தியதாக இருக்கின்றது என்பதைப் பலரும் ஒப்புவர். (சாரங்கபாணி 1972, கந்தசாமி 1972 இதுபற்றிப் பரக்க ஆராய்வது நலம் பயக்கும்.

3. 1. 2. 1 நான்

சங்க நூல்களில் 'யான்' என்ற சொல் தன்மை ஒருமையைக் குறிக்க, பரிபாடலில் 'நான்' என்ற சொல் முதன் முதலாக வருகிறது.

நான் 6 - 87 ; 20 - 82

3. 1. 2 2 நீர்

முன்னிலைப் பன்மைச் சொல்லாக 'நீயிர்' என்ற சொல் பிற இலக்கியங்களில் வர 'நீர்' என்ற சொல் பரிபாடலில் ஒரு இடத்தில் வந்துள்ளது

நீர் 8 - 73

3. 1. 2. 3 உம்

முன்னிலைப் பன்மைச் சொல்லாக 'நுமக்கு' என்ற சொல் பிற இலக்கியங்களில் வர, பரிபாடலில் ஒரு இடத்தில் 'உமக்கு' என்ற சொல் காணப்படுகின்றது.

உமக்கு 20 - 85

3.1.2.4 ஆறு

'யாறு' என்ற சொல் பெரும்பான்மையாக வர 'ஆறு' என்ற சொல் வந்துள்ளது.

ஆறு 11-50, 15-22

3.1.2.5 எவள்

யாவள் என்ற சொல் பெரும்பான்மை வர எவள் என்ற சொல் வருதலும் கவனிக்கத்தக்கது.

எவள் 6-91

3.1.2.6 மல் ஈற்று வினையெச்சம்

-மல் விகுதி பெற்ற வினையெச்சம் இரு இடங்களில் வந்துள்ளது.

கொளுத்தாமல் 11-126

நாணாமல் 20-74

3.1.2.7- கள் உயர்திணைப்பன்மை விகுதி

-கள் விகுதி உயர்திணையில் வருவதும் கவனித்தற்பாலது.

வாளிகள் 9-54

3.1.2.8- கின்று-நிகழ் கால இடைநிலை

- கின்று-நிகழ்கால இடைநிலையாக வருகிறது.

சேர்கின்ற 22-35

2.1.2.9 'போன' வடிவம்

போய என்பதன் மாற்று வடிவமாகப் ''போன'' என வருவதும் கருதற்பாலது.

போன 22-11

இத்தகைய ஒரு சில கூறுகள் பரிபாடலின்கண் காணக்கிடக்கின்றன.

3.1.3 மொழி நிலையும் முன் பழந்தமிழ் நூல்களும்

மொழிநிலை பற்றிப் பேசும் கந்தசாமி கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடலில் வரும்

யாமும் பாரியுமுளமே
குன்றுமுண்டு நீர் பாடினிர் செலினே (புறம் 110)

என்பதை எடுத்துக்காட்டி நீர் என்ற சொல் புறநானூற்றிலும் வருகிறது என்று கூறுவார். சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் நீர் என்ற சொல் பன்மை குறிக்கும் சொல்லாகப் புறத்திலும் (2) ஐங்குறுநூற்றிலும் (1) உயர்வு ஒருமை குறிக்கும் சொல்லாக (அகம் (1), நற் (1), பத்து (1) பரிபாடல் (1) கலித்தொகை (7) என பதினேரு இடங்களிலும் வந்திருத்தல் காணலாம். புறத்தில் முன்னர்க் குறிப்பிட்டபடி கபிலர் பாடலிலும், வன்பரணர் பாடிய பாடலிலும் (152-15), ஐங்குறுநூற்றில் மீண்டும் கபிலர் பாடிய பாடலிலும் (397) பன்மை குறிக்கும் சொல்லாக வந்துள்ளது.

ஐங்குறுநூறு பதிற்றுப்பத்துக்குப் பின்னர், ஆனால் பிற வற்றிற்கு முன்னர்த் தொகுக்கப்பட்டது என முன்னரே கண்டோம். அந்நூலிலேயே நீர் வருவதால் இதனைப் பிந்திய வழக்கு எனக் கூறுதல் முடியாது. பேச்சுவழக்கில் இருந்த இச்சொல் ஐங்குறுநூறு காலத்திலேயே இலக்கியத்தில் ஏறி விட்டமை காணலாம்.

உயர்வு ஒருமை குறிக்கும் சொல்லாகக் காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனர் பாடிய அகப்பாடலிலும் (271) பாலைபாடிய பெருங்கடுங்கோவின் நற்றிணைப்பாடல் ஒன்றிலும் (48) மாங்குடி மருதனர் பாடிய மதுரைக்காஞ்சியிலும் (-738) நல்லந்துவனர் பாடிய பரிபாடலிலும் (8-73) கலித்தொகையில் பாலைக்கலியிலும், நெய்தற்கலியிலும் காணப்படுகின்றன. எனவே இவ்வாறு புறம், அகம், ஐங்குறுநூறு, நற்றிணை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் எல்லாம் இது காணப்படுவதால் இதை வைத்துக்கொண்டு பரி பாடல் பிந்தியது எனக் கருதுவது பொருந்தாது. இந்நிலையில் கந்தசாமி கூறுவது சரியாகவே தோன்றுகிறது.

மேலும், முன்னிலைப் பன்மையைக் குறிக்கும் நீயிர் என்ற சொல் சங்க இலக்கியங்கள் அனைத்திலும் ஆறு இடங்களிலேயே வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். முந்தியவழக்கா யினும் சங்க காலத்தில் குறைந்துவிடக் காணலாம்.

பிந்திய வடிவமாகக் கருதப்படும் உம் என்ற சொல்லும் பரி பாடலில் (20-84) மட்டுமின்றி வேறு பல சங்க இலக்கியங்களிலும் வந்துள்ளது. பன்மை குறிக்கும் சொல்லாகக் கோவூர்கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல் (45) ஒன்றிலும் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் பாடிய அகநானூற்றுப்பாடல் (56- 14) ஒன்றிலும் கலித்தொகையில் நெய்தற்கலியிலும் (139) வருவதும் உயர்வு ஒருமையாகக் கபிலர் பாடிய நற்றிணையிலும் (368-3) நல்லந்துவனாரின் பரிபாடலிலும் (20-84) ஓரிரு இடங்களில் வந்துள்ள நிலையில் இவற்றை வைத்துக்கொண்டு பரிபாடல் காலத்தால் மிகப் பிந்தியது என்று கூறுவது கடினமே. எனினும் ஒரு சில பாடல்களேனும் பிந்தியவை எனக் கூறலாம்.

3.1.4. முந்திய பிந்திய பாடல்களின் தொகுப்பு

இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு பார்க்கும்போது ஒரு சிலபாடல்கள் முன்னரே தோன்றியவை என்று கருதுவது தவறில்லை. —கள் விகுதியின் வரவும்,-மல் விகுதியின் தோற்றமும் இதற்கு அரண் செய்யும்.

3. 2 கலித்தொகை

3. 2. 1 கலித்தொகையின் ஆக்கமும் தொகுப்பும்

கலித்தொகையும் பரிபாடலும் சங்க இலக்கியங்களில் பிந்தியவை என்பது பல அறிஞர்களின் எண்ணம். எல். வி. இராமசாமி ஐயர், கே. என். சிவராசப்பிள்ளை, வையாபுரிப் பிள்ளை, தெ. பொ. மீ., இராசமாணிக்கம் பிள்ளை ஆகியோர் இது பற்றிக் கூறியுள்ளனர். வையாபுரிப்பிள்ளை இது பற்றிக் கூறும்போ பலவேறு செய்திகளைக் குறிப்பிடுவார்.

நெய்தற்கலியில் 25-ஆம் செய்யுள் உரையில்

''சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகோ ளியற்கை, புல்லிய கிளவியெச்சமாகும்'' என்பதனால் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் செய்தார்'. எனக் குறிப்பிடுதலின் நல்லந்துவனார் எனும் புலவர்நெய்தற் கலியை இயற்றினார் என எண்ணலாம். இந் நல்லந்துவனாரே நெய்தற்கலியை இயற்றியதோடு பிறவற்றையும்

தொகுத்தார் என எண்ணுவர் பலர். நச்சினார்க்கினியர் கடவுள் வாழ்த்துப் பகுதியில் ''ஆதலால் ஈண்டு பாலைத் திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தா ரென்று கூறுக'' எனவும் இறுதியில் ''முல்லை, குறிஞ்சி, மருதம்' நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'' என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படு மென்றலின் இத்தொகையைப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்த லென இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்'' என்றும் கூறியுள்ளமையின் இவரே தொகுத் தார் என நச்சினார்க்கினியர் கருதுவதாகக் கொள்ளலாம். இவ் வாறு கூறியதோடு பிற கலிகளை இயற்றிய ஆசிரியர் பெயர் களைக் கொடுக்காமையின் அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்கள் நச்சினார்க்கினியர் காலத்திலேயே தெரியப்படவில்லை எனக் கருதலாம்.

3. 2. 2 கலித்தொகையின் ஆசிரியர் ஒருவரே

கலித்தொகையை வெளியிட்ட சி. வை. தாமேதரம் பிள்ளை, கே. என். சிவராசப்பிள்ளை போன்றவர்கள் கலித்தொகை அனைத்தும் ஒருவராலேயே இயற்றப்பட்டது எனக் கருதுவர். பொதுவாகக் கலித்தொகை அனைத்தையும் ஊன்றிப் படிப்பின் மொழிநடையிலும், பிறவற்றிலும் ஒரு ஒற்றுமையைக் காண முடியும்.

இதனால்தான் இப்பாடல்கள் அனைத்தையும் ஒருவரே பாடினர் என சி. வை. தாமோரம்பிள்ளை, கே. என். சிவராசப் பிள்ளை, வையாபுரிப்பிள்ளை, இராசமாணிக்கம் பிள்ளை போன்ற வர்கள் கருதுகின்றனர் என எண்ணலாம்.

மேலும் கிடைத்த ஏட்டுப் பிரதிகள் ஒன்றிலாவது ஆசிரியர்கள் பெயர்கள் இல்லாமையின் இம்முடிவுக்கு வந்தனர்.

ஆனால், திருநெல்வேலியைச் சேர்ந்த சொர்ணம்பிள்ளை

''பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந்துவன் னெய்தல்
கல்விவலார் கண்ட கலி''

என்ற பாடலைக் காட்டிக் கலித்தொகை பாடியவர்கள் ஐவர் என்று குறிப்பிடுவார். இப்பாடல் சொர்ண பிள்ளையாலேயே இயற்றப் பட்டு வெளியிடப்பட்டதென்றும் இது பழம்பாடல் அன்று என்றும் கலித்தொகை ஏடு எதிலும் காணப்படவில்லை என்றும் வையாபுரிப் பிள்ளை மட்டுமன்றி வெங்கடராஜுலு ரெட்டியார், இராச மாணிக்கம் பிள்ளை (1963) போன்றவர்களும் கருதுகின்றனர். எனவே இப்பாடலின் அடிப்படையில் இதைப்பாடியவர்கள் ஐவர் என்று முடிவு கட்டக் கூடாது என்பது இவர்கள் கருத்தாகும்.

கலித்தொகையில் காணப்படும் புராண இதிகாசச் செய்திகள், பாண்டியர்களைப் பரவுதல், இதுபோன்ற கருத்துக்களைக் காட்டி இவை அகம், புறம் போன்ற நூல்களில் பாடியுள்ள பாலை பாடிய பெருங்கடுங்கோ போன்றவர்களால் பாடப்பட்டிருக்க முடியாது என நிலைநாட்டுவர்.

3. 2. 3 மொழி நிலை

கலித்தொகையில் காணப்படும் மொழிநிலையும் பிற சங்க இலக்கியங்களின் மொழிநிலையிலிருந்து மாறுபட்டுள்ளது என்று நிலைநாட்டுவார்கள். இதுபற்றிச் சற்று விளக்கமாகக் காண் போம்.

கலித்தொகை பற்றிக் குறிப்பிட்டபோது அது பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது சுட்டிக் காட்டப் பட்டது. பிற சங்க நூல்களிலிருந்து பரிபாடல், கலித்தொகை ஆகியவை மாறுபட்டன என்பதும் வரையறுக்கப்பட்டது. பொது வாகக் கலித்தொகையில் காணப்படும் பின்பழந்தமிழ்க் கூறுகளில் பல, நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன என்பதை நம்மால் காண முடியும். இந்நிலையில் இவற்றைப் பாடிய புலவர் ஒருவரே என்று நிச்சயமாக மதிப்பிடலாம். மேலும் இத்தகைய கூறுகள் இவற்றைப் பாடியவர்களாகக் கருதப்படுகின்ற பாலை பாடிய பெருங்கடுங்கோ, கபிலர், மதுரை மருதனிள நாகனார், நல்லுருத்தினார், நல்லந்துவனார் ஆகியவர்களின் பிற இலக்கியப் பாடல்களில் காணப்படவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. கலித்தொகையில் காணப்படும் பின்பழந் தமிழ்க் கூறுகள் பற்றி முன்னரே கூறப்பட்டிருந்தாலும் வேறொரு

கோணத்திலிருந்து அவை நோக்கப்படுவதால் மீண்டும் இங்கு விரிவாகப் பேசப்படுகின்றது.

3. 2. 2. 1 நிபந்தனை எச்சம்

நிபந்தனை எச்சப் பொருள் காட்டும் பல வடிவங்களைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். அவற்றுள்-ஏல் விகுதி கொண்ட வடிவங்களும் ஒன்று. இவ்விகுதி வினை முற்றுக்களுக்குப் பின்னரே வரும். இவ்வடிவங்கள் கலித்தொகையில் காணப் படுகின்றன.

பாலைபாடிய பெருங்கடுங்கோ போன்ற புலவர்களின் பிற இலக்கியங்களில் இவை வராதிருக்கக் கலித்தொகையில் மட்டுமே இவை காணப்படுவது இப்புலவர்கள் வேறு வேறு என்பதைக் காட்டும்.

இத்தகைய வடிவங்கள் முல்லைக்கலி ஒழிந்த ஏனைய கலிகள் அனைத்திலும் காணக் கிடக்கின்றன.

துறப்பாயேல்	3-10
திறனுண்டேல்	38-13-17
பொருள் உண்டேல்	38-21
இல்லேல்	60-21
அன்னதேல்	91-18
விடுவாயேல்	93-33
காட்டாயேல்	144-43
	147-28
விடுவனேல்	147-50

ஆகியவை இப்பண்பைக் காட்டும்.

இவற்றிற்கு மாறாகப் பிற நூல்களில் வேறு விதமான சொல் லாட்சி வருதல் காணலாம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோலால் பாடப்பட்ட பாடல்களில் ''ஆயின்'' என்ற சொல்லைப் பயன்படுத்தியே நிபந்தனை எச்சம் குறிக்கப்படுகின்றது.

பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின்........ அகம் 5. 15-16
செலவு வலி யுறுத்தனை யாயின்...... அகம் 379-18
இன்னா என்றி ராயின் குறு. 124-3
நிற்றுறந் தமைகுவெ னாயின் குறு. 137-2
யாண்டுள னோவென வினவுதி யாயிற் புறம் 282-3

என வருதல் காண்க.

இதைப் போன்றே கபிலர் பாடல்களிலும் பிறர் பாடல்களிலும் காணப்படுகின்றது.

நீ வரின் அகம் 12- 13 கபிலர்)
பெருங்கல் நாட பிரிதி யாயின் அகம் 238- 10 (கபிலர்)
சூழ்ந்தனை யாயினன் றின்னா அகம் 77- 3 ம. ம. நாகனார்
போகின் அகம்- 77. 12
என்னுதி யாயின் அகம்- 131. 14

போன்ற எடுத்துக் காட்டுக்கள் இப்பண்பினைக் காட்டும்.

3. 2. 2. 2 இரட்டைப் பன்மைச் சொற்கள்

—கள் விகுதி கொண்ட இரட்டைப் பன்மைச் சொற்களும் கலித்தொகையில் மட்டுமே காணப்படுகின்றன. இவை பாலைக் கலி, மருதக்கலி, நெய்தல்கலி ஆகிய மூன்றினும் காணக்கிடக் கின்றன. பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய பாடல்களில் பல இடங்களிலும்

எம் நற் 48. 1
வயவர் புறம் 282. 5
புலவர் புறம் 282. 2

மருதனிள நாகனார் பாடிய சில இடங்களிலும்

வினைஞர்	அகம் 184-13
மன்னர்	புறம் 52-5
மறவர்	புறம் 55-8

எனப் பன்மைச் சொற்கள் வரினும் இப்பண்பைக் காண முடிவதில்லை. ஆனால் கலித்தொகையிலோ

எங்கள்	22-20-	பாலைக்கலி
அரசர்கள்	25-3	,,
ஐவர்கள்	26-6	,,
என்னோர்கள்	100-23	மருதக்கலி
கேளிர்கள்	149-8	நெய்தற்கலி
வாழ்வார்கள்	145-17	,,

என இவை காணப்படுவது இவர்கள் வேறு வேறு என்பதைக் காட்டும்.

3. 2. 2. 3 செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம்

இப்பெயரெச்சங்கள் கலித் தொகையில் பாலைக்கலி, மருதக்கலி, குறிஞ்சிக்கலி ஆகியவற்றில் காணப்படுகின்றன.

பாலைக்கலியில்

கழிகல்லாத	20. 21

எனவும் மருதக்ககலியில்

இல்லாத	84-48
எழுகல்லாத	84-29
தாவாத	86-29
படாத	70-8
மாற்றாத	83-23

எனவும், குறிஞ்சிக் கலியில்

ஒல்காத	42-14

எனவும் வருதல் காணத்தக்கது. இவற்றைப் பாடியவர்களாகக் கருதப்படும் பாலைபாடிய பெருங்கடுங்கோ. மருதனிளநாகனார், கபிலர் ஆகியோர் பாடிய சங்கப்பாடல்களில் இத்தகைய ஆட்சியைக்காண முடிவதில்லை. இவற்றில் தோன்ரு (புறம் 282– பாலை. பெ. கடு) போன்றவை காணப்படுகின்றனவேயன்றி இவ்வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் வருவதில்லை.

இவை புறநானூற்றில் இரு இடங்களில் - உறையூர் முதுகண்ணன் சாத்தனார்பாடிய புறப்பாடலிலும் (கெடாத புறம் 27-19) மாறோக்கத்து நப்பசலையார் பாடிய மற்றொரு புறப்பாடலிலும் (செல்லாத புறம் 126- 16) - மட்டுமே காணப்படுகின்றது.

3. 2. 2. 4 செய்யாமல் வாய்பாட்டு வினையெச்சம்

இதுவும் கலித்தொகையில் ஐந்து திணைப்பாடல்களிலும் காணப்படுகின்றது.

படாஅமல்	4- 10
முற்றாமல்	19- 12
காணாமல்	39- 41
தீராமல்	38- 13
தெருளாமல்	38- 17
பெறாமல்	65- 18
உரையாமல்	77- 15
போகாமல்	109- 25
வருந்தாமல்	121- 21
நையாமல்	145- 19

ஆகிய இடங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றைப் பாடியவர்கள் எனக் கருதப்படும் புலவர்களால் பாடப்பட்ட பிற பாக்களில் இதனைக் காணமுடிவதில்லை. எனினும் பரிபாடலில் நல்லந்துவனாரால் பாடப்பட்ட (11, 20) பாடல்களில் இரு இடங்கள் உள்ளன.

கொளுத்தாமல்	11-126
நாணாமல்	20-74

3. 2. 2. 5 தொழிற்பெயர்

பிற சங்க நூல்களில் செய்தல் வாய்பாட்டுத் தொழில் பெயர்கள் வர, கலித் தொகையில் செய்தது, செய்வது வாய்பாட்டுத் தொழில் பெயர்களும் வரக்காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக அகநானூற்றில்
.................முசுக்கலை
பைதறு நெடுங்கழை பாய்தலின் அகம் - 267-9 (பா. பெ. க)
என வரக் கலித்தொகையில்

''.................பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியாகுதலே'' கலி 14-8 (பாலைக்கலி)

''பெயர்ப்பது'' என வருதல் இவற்றிடையே உள்ள வேற்றுமையைக் காட்டும்.

இப்பண்பை எல்லாத் திணைப்பாடல்களிலும் காண்கிறோம்.

பாலைக்கலி

செல்வது (5. 18) பெயர்ப்பது (14. 8)

யாப்பது	7-7
வாடுவது	26-14

குறிஞ்சிக்கலி

உரைப்பது	48-19
ஒறுப்பது	58-20
காப்பது	38-13,17
கொள்வது	60-14
போல்வது	47-2,6
மொழிவது	64-8
விட்டது	56-5

மருதக்கலி

கொள்வது	80-23
	71-16
சினவுவது	91-6
தங்கியது	83-24
தணந்தது	66-17
நனைப்பது	79-8
நிறைவது	92-20
நின்றது	66-16
புகழ்வது	100-8
புலப்பது	97-2
பொய்ப்பது	97-21
மிதித்தது	90-12
முற்றியது	67-3
மொழிவது	98-12,33
	100-16

முல்லைக்கலி

குலைப்பது	101-17,23,29
கொடுப்பது	105-67
	108-31
செல்வது	108-32
தேறுவது	113-21
பாட்டது	105-58
பொடிவது	105-59
முடித்தது	107-10
மேய்க்கிற்பது	108—33
வருவது	114—10

நெய்தற்கலி

எனப்படுவது	133— 8, 9, 10, 11, 12, 13
காண்பது	119 – 4
	134 – 5
கொள்வது	145 - 26

ஆனால் இவற்றைப் பாடியவர்களாகக் கருதப்படும் புலவர்கள் பாடிய பாடல்களில் இப்பண்பைக் காண முடிவதில்லை. மதுரை மருதனிளநாகனார் பாடிய அகநானூற்றுப் பாடல் ஒன்றில்

''சீர்மிகு குருசில் நீ வந்துநின் றதுவே'' (அகம் 184-19) என ஓரிடத்தில் இறந்த காலத்தில் இவ்வாய்பாட்டுச் சொல் வந்திருப்பினும் இறப்பில் காலச் சொல் எதுவும் காணப்படாமை குறிப்பிடத் த்க்கது.

இதுபோன்றே பரிபாடலில் 4 (11-36, 48, 8I-60, 103 நல்லந்துவனார்) இடங்களில் இவ்வாறு உள்ளன. இவற்றுள் 2 இறந்த காலத்திலேயே உள்ளது.

3.2 2.6 வினையாலணையும் பெயர்கள்

பிற சங்க இலக்கியங்களில் செய்தேன். செய்தான் போன்ற வாய்பாட்டுச் சொற்கள் வினையாலணையும் பெயராக அதிகமாக வர, கலித்தொகையில் செய்த வன், செய்தவள், செய்தவர் வாய்பாட்டுச் சொற்களே அதிகமாகக் காணக் கிடக்கின்றன. கலித் தொகையில் குறிஞ்சிக் கலியில் மட்டும் இத்தகைய சொற்கள் 18 காணப்பட, கபிலரால் பாடப்பட்ட பிற சங்க இலக்கியங்கள் அனைத்திலும் இரு இடங்களே (நல்லவர், புறம் 14-16, வாழ் பவர், நற் 217—1) உள்ளன.

குறிஞ்சிக்கலி

உழப்பவன்	38-5
கையவன்	42-21
கொண்டவன்	42-27
வல்லவன்	56-7
நெஞ்சத்தவன்	42-15

உழப்பவள்	48-13
காத்தவள்	44-19
சிறந்தவள்	48-9
உண்பவர்	62-11
உரைக்கல்லாதவர்	61-4
எயிற்றவர்	59-12
கண்டவர்	60-5
சான்றவர்	39-47, 61-2
தகையவர்	43-8
நுதலவர்	59-21
வளர்ப்பவர்	50-22
ஆர்ப்பவர்	52-14

பாலைக்கலி

இதைப்போன்றே பாலைக்கலியில் 45இடங்கள் வர, பாலை பாடிய பெருங்கடுங்கோவால் பாடப்பட்ட பிற இலக்கியங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே (பிரிகிற்பவர் நற் 391- 8) வருதல் காணத்தக்கது.

உயர்ந்தவன்	30-13
சிறியவன்	10- 2
வாழ்பவன்	34-18
வில்லவன்	35-14
அளிபவள்	10-19
இனையவள்	7-18
இனைபவள்	10-11
ஈன்றவள்	29-2 32-7
கலுழ்பவள்	10-15

தகையவள்	30-18
துறந்தவள்	19-8
புணர்ந்தவள்	2-17
வல்லவள்	24-9
அகன்றவர்	16-3
அஞ்சாதவர்	34-9
அணிபவர்	9-15
அணியவர்	27-11
ஆள்பவர்	5-12
ஆன்றவர்	32-8
இளையவர்	29-6
உடுப்பவர்	18-10
உணர்ந்தவர்	32-11
உறைபவர்	26-12, 16, 20
ஒழிந்தவர்	18-6
தளராதவர்	34-13
	34-17
துறந்தவர்	36-21
நல்லவர்	32-10
நீத்தவர்	33-9
பசந்தவர்	32-14
படுப்பவர்	9-12
பிரிந்தவர்	31-4
புணர்ந்தவர்	27-5
	31-5
	31-8
	32-12
	33-7

முயன்றவர்	34-4
முரல்பவர்	9-18
வருபவர்	31-9
	31-14
வல்லவர்	32-9
வளையவர்	29-5

மருதக்கலி

மருதகலியில் 29 இடங்கள் வர, மருதனிளநாகனார் பாடிய வேறு இலக்கியங்களில் இத்தகைய வினையாலணையும் பெயர்கள் காணப்படவில்லை.

நீத்தவன்	87-11
விழ்பவன்	77-3
வருபவன்	75-20
உண்பவன்	73-3
இனைபவள்	73-7
உணர்ப்பவள்	72-4
நகுபவள்	71-6
புணர்ந்தவள்	100-20
அன்னவர்	87-4
ஆற்ருதவர்	88-4
இல்லாதவர்	82-33
இளையவர்	73-8
	83-3
உடன்றவர்	72-11
உடையவர்	82-34
உற்றவர்	76-8, 77-14
ஊரவர்	72-13
	74-15
	9ɔ-14

குழையவர்	66-13
என்றவர்	84-35
பட்டவர்	80-20
இயல்வர்	66-17
ப்ாலவர்	85-30
புலப்பவர்	71-22
வண்டலவர்	92-54
வல்லவர்	68-2
புணர்ந்தவர்	66-5

முல்லைக்கலி

முல்லைக் கலியிலும் 18 இடங்களில்-அவ்விகுதி கொண்ட வினையாலணையும் பெயர்கள் காணப்பட நல்லுருத்தினார் பாடிய புறநானூற்றுப் பாடலில் இவை காணப்படுவதில்லை.

கொண்டவன்	107-6
தழீஇயவன்	103-35
பொருந்தியவன்	103 49
கொள்பவன்	104-21
சார்பவன்	104-24
குழையவன்	105-11
தரப்பட்டவள்	102-12
புக்கவள்	102-8
எடுப்பவள்	106-7
ஏற்றவர்	105-39
தொட்டவர்	115-11
ஊர்பவர்	104-55
கொள்பவர்	104-55, 102-9
	103-65
சாற்றுபவர்	104-56

நுழைபவர்	104-56
ஆயத்தவர்	102-7

நெய்தற்கலி

இதுபோன்றே நெய்தற்கலியிலும் 53 இடங்களில் இத்தகைய வினையாலணையும் பெயர்கள் காணப்பட நல்லந்துவனார் பாடிய பிற இலக்கியங்களில் பரிபாடலில் மட்டும் மூன்று இடங்களில் (பூண்டவள் 20-34, அணிந்தவர் 20-22, வருபவர் 20-32) வருவது குறிப்பிடத்தக்கது.

அளித்தவன்	146-4
அழுந்தாதவன்	146-25
ஆழ்பவன்	134-24
இட்டவன்	136-14
இரப்பவன்	120-5
இல்லவன்	144-58
இறந்தவன்	143-58
உய்த்தவன்	120-2
கண்டவன்	136-10
கரப்பவன்	120-6
காதலவன்	145-24
கெடுப்பவன்	148-4
கொன்றையவன்	142-28
சிறந்தவன்	146-16
தெளிந்தவன்	147-23
மணந்தவன்	131-2
முதிர்ந்தவன்	130-6
வரைபவன்	146-27
வல்லவன்	137-10
	148-2

மனத்தவன் 149-10

என்பவள் 145-61

காட்டியவள் 141-20

துணிந்தவள் 124-19

நகுபவள் 142-8

படர்வித்தவள் 141-10

மனத்தவள் 143-57

வருபவள் 144-7

அகன்றவர் 120-10
150-12

அருளாதவர் 128-1

அலந்தவர் 133-6
148-15

அறிபவர் 125-3

ஆள்பவர் 132-4

இல்லவர் 148-6

உண்பவர் 133-17

ஏதிலவர் 138-24

கண்டவர் 125-1

கலந்தவர் 148-13

சான்றவர் 120-16
139-3
140-18

உள்ளாதவர் 145-63

செய்தவர் 134-11
134-15

தனியவர் 129-18

பிரிந்தவர் 148-18
150-8

புணர்ந்தவர்	118-12
	138-18
வேண்டுபவர்	145-42
ஊரவர்	145-45

இந்நிலையில் இவர்கள் வெவ்வேறு ஆசிரியர்கள் என எண்ண லாம்.

3. 2. 2. 7 ஏவல் வினைகள்

எதிர்மறை ஏவல் வினைகளில் பிற இலக்கியங்களில் செய்யல் போன்ற வாய்பாட்டு சொற்கள் காணப்பட கலித்தொகையில் ''செய்யாதி'' வாய்ப்பாட்டு ஏவலும் காணப்படுகின்றது. கலித் தொகை ஒழிந்த ஏனைய இலக்கியங்கள் எதிலும் இது வருவ தில்லை.

இத்தகைய சொற்கள் நெய்தல் ஒழிந்த எல்லாத் திணைப் பாடல்களிலும் உள்ளன.

யாலைக்கலி

அழியாதி	13-24
உரையாதி	28-21
சூழாதி	18-2
வாளாதி	31-22

குறிஞ்சிக்கலி

நுவலாதி	42-25

மருதக்கலி

அஞ்சாதி	84-36
ஒவ்வாதி	82-21, 86-14, 18, 22
ஓராதி	88-15
கதியாதி	83-24, 91-7
காயாதி	89-7

கொள்ளாதி	79-7, 15
நில்லாதி	79-21

முல்லைக்கலி

சொல்லாதி	108-19
வருந்தாதி	107-29

இவற்றைப் பாடியவர்களாகக் கருதப்படும் புலவர்கள் பாடிய பிற பாடல்கள் எதிலும் இத்தகைய சொற்களைக் காண முடிவதில்லை. பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய பாடல்களில் வேறு ஏவல் வினைச் சொற்கள் காணப்படினும்

அழாஅல்	குறு 135-4
ஆழல்	அகம் 223-3

"செய்யாதி' வாய்பாட்டு ஏவல் காணப்படுவதில்லை. இதே நிலை தான் கபிலர் பாடல்களிலும் காணப்படுகிறது. அலையல் (அகம் 158-7) வாரல் (ஐங். 282-4) போன்ற சொற்களே உள்ளன.

-இகா, -ஐப்பாய், -ஐக்க, -ஈத்தை, -இத்தை, -ஐகா ஈற்று ஏவல்வினைச்சொற்கள் பரிபாடல் தவிர்ந்த ஏனைய சங்க இலக்கியங்களில் காணப்படாமல் கலித்தொகையில் மட்டுமே காணப் படுகின்றன. பரிபாடலிலும் ஒரு இடத்தில் (நில்லிகா பரி11-104) மட்டுமே இவ்வகை வினைச்சொல் வருகிறது.

பாலைக்கலி

மறந்தைக்க	27-10,14,18
மதித்தீத்தை	14-17

குறிஞ்சிக்கலி

பார்டித்தை	40-10
	43-15, 23

மருதக்கலி

காண்டிகா	99-9, 12, 15

காண்டைப்பாய்	87- 15, 19-13
ஈத்தை	86-30
உண்டீத்தை	85-32
பருகீத்தை	85-35
நின்றீத்தை	94-4

முல்லைக்கலி

காணிகா	105-36, 40
கண்டைகா	105-44

நெய்தற்கலி

பாடித்தை	131-24, 34

3.2.2.8. -ஆர் சிறப்பு விகுதி

பெயர்ச்சொற்கள் -ஆர் சிறப்பு விகுதி பெற்றுவரும் பண்பினைக் கலித்தொகையில் மட்டுமே காண்கிறோம்.

சாமனார் கலி 94·34

3. 2. 2. 9 அல்லால் என்ற சொல்

'அல்லால்' என்ற சொல்லாட்சி கலித்தொகையில்தான் முதன் முதலில் காணப்படுகின்றது. குறிஞ்சிக் கலியொழிந்த ஏனைய கலிகளில் எல்லாம் இது உள்ளது.

பொருளல்லால் பொருளுமுண்டோ	14-10
பகையல்லால்	67-4
பெறின் அல்லால்	88-8

பிற சங்க இலக்கியங்களில் 'அன்றி' என்ற சொல்லாட்சியே உள்ளது.

3. 2. 2. 10 எழுந்தாற்போல் என்னும் தொடர்

மேலே கூறியனவற்றைப் போன்றே ''எழுந்தாற்போல்'' என்ற தொடராட்சியும் இதன்கண்தான் உள்ளது. ''எழுந்தன்ன'' போன்ற ஆட்சியே பிற சங்கநூல்களில் உள்ளது.

கலித்தொகையைத் தொகுத்த நல்லந்துவனாரும் பரிபாடலில் பாடியுள்ள நல்லந்துவனாரும் ஒருவரா என்பது ஆராயற்பாலது. அகம், நற்றிணை ஆகியவற்றில் பாடிய நல்லந்துவனாரும், பரிபாடலில் பாடிய நல்லந்துவனாரும் ஒருவரே என்று முன்னர்க் கூறப்பட்டது. இது பற்றிக் கூறும் இராசமாணிக்கம் பிள்ளை இந் நல்லந்துவனார் பிற நூல்களில் உள்ள பாடல்களைப் பாடிய நல்லந்துவனாரினும் வேறுபட்டவர் எனக் கொள்ளலே பொருத்த முடையது எனக் கூறுவார்.

–ஏல் விகுதியைக் கொண்ட நிபந்தனை எச்சமோ இரட்டைப் பன்மைச் சொற்களோ, செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சமோ, செய்யாதி வாய்பாட்டு எதிர்மறை ஏவல் சொற்களோ, கலித் தொகையில் மட்டும் காணப்படும் சில வாய்பாட்டு வினைச் சொற்களோ பரிபாடல் நல்லந்துவனார் பாடல்களில் காணப் படாமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கலித்தொகை பிற சங்க இலக்கியங்களில் மிகவும் பிந்தியது எனக் கருதலாம்.

3. 3 திருக்குறள்

3. 3. 1 காலம்

திருக்குறள் சங்க இலக்கியங்களுக்கு முந்தியதா இல்லை பிந்தியதா என்ற வினா அறிஞர்களிடையே உள்ளது என்பதும் இராசமாணிக்கம் பிள்ளை போன்றவர்கள் சங்க இலக்கியத்துக்கு முன்னரே இது தோன்றியது எனப் பலவேறு காரணங்களைக் காட்டிக் கூறுவார் என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கன. இது போன்றே பாரதியாரும் (1934) சங்க இலக்கியங்களுக்கு முற் பட்டது இது என்பார்.

இராசமாணிக்கம் பிள்ளை பலவேறு சங்க நூல்களில் காணப் படும் சிலச்சில பாடல்களுக்கும் திருக்குறள் பாடல் வரிகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துக்காட்டித் திருக்குறளிலிருந் தே அப்பாடல்கள் எடுத்தாளப்பட்டன எனக் கூறி அதனால் சங்க இலக்கியங்களுக்கு முன்னர் எழுந்தது திருக்குறள் என வாதாடுவார்

(1963:117). ஆனால் இவ்வொற்றுமைகள் பல இடங்களில் வழிவழியாக வரும் தொடர்களால் ஏற்பட்டன என எண்ணலாம், எடுத்துக்காட்டாக நற்றிணையில்,

நீரின் றமையா உலகம் ...

என வருவதும்

நீரின் றமையா துலகெனின் ...

என்று திருக்குறளில் வருவதும் இத்தன்மையதே. எனவே இதனை வைத்துத் திருக்குறள் முந்தியது எனக் கூறுவது பொருந்தாது.

இதுபோன்றதே 'அறம் பாடிற்றே' எனப் புறம் கூறுவதை வைத்துப் புறத்துக்கு முந்தியது குறள் எனக் கூறுவதும். 'அறம்' எனப்படுவது திருக்குறள் என்பது சிலரின் வாதமாகும். பண்டாரத்தாரும் இக்கருத்தையே கொண்டுள்ளார். டாக்டர் இலக்குமணசாமி தன்னுடைய ''திருக்குறளும் சங்க இலக்கியங்களும்'' என்ற கட்டுரையில் (1979) திருக்குறளே ''அறம் கூறும்'' (183) எனக் கூறுவதை எடுத்துக் காட்டி இவ்விரு நூல்களும் அறம் எனக் கூறுவது வேறுதெரியாத ஒரு நூலாக இருக்கலாம் என்பார். எனவே இத்தகைய எடுத்துக் காட்டுக்களை வைத்துக்கொண்டு சங்க நூல்களுக்கு முந்தியது திருக்குறள் எனக் கூறல் முடியாது.

தமிழ் இலக்கிய வரலாறுபற்றி எழுதிய பல அறிஞர்கள் சங்க நூல்களுக்கும் பிந்தியதே திருக்குறள் எனக் குறிப்பீடுவர். தெ. பொ. மீ (1965:48; 1965:118) இது சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்றே குறிப்பிடுவார். இதைப்போன்றே மு. அருணாசலமும் (1981:37) சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றியது இது என்பார்.

திருக்குறளின் மொழி நிலையை ஆராயின் நிச்சயமாக இது சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என எண்ணலாம். பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றோடு ஒப்ப வைத்து எண்ணற்பாலது இது.

திருக்குறளின் மொழி நிலையை ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை (1949:68) இது கி. பி. ஏழாவது நூற்றாண்டு என்பார். இதற்குக் காரணம் பிற பதினெண்கீழ்க் கணக்கு நூல்களோடு இதனை ஒப்பவைத்து ஆராய்வதுதான். சங்க இலக்கியங் களுக்குப் பிந்தியது ஆயினும் கி. பி. ஏழாம் நூற்றாண்டு எனக் கூறுவது முற்றிலும் பொருந்தாத வாதமாகும்.

3. 3. 2 திருக்குறளின் மொழிநிலை

திருக்குறளின் மொழிக் கூறுகளை நோக்கின் இதுவும் பின் பழந்தமிழ் நூல்களில் ஒன்று என்பது தெரியவரும்.

பிள்ளை பலவேறு மொழிக் கூறுகளை இதன் சிறப்புக் கூறுகளாகக் கருதுவார். ஆனால் அவற்றுள் பல பிற பின்பழந் தமிழ் நூல்களிலும் காணக்கிடக்கின்றன.

'மல்' ஈறு கொண்ட வினையெச்சம் திருக்குறளில் (101, 313) காணப்படுகின்றது. செய்யாமல் (101, 313), சூழாமல் (1024) போன்றவை எடுத்துக்காட்டுக்களாகும்.

'அல்லால்' என்ற சொல்லாட்சியும் திருக்குறளில் உள்ளது (7, 8, 16, 233, 235, 377, 406, 497, 575, 762, 1095, 1188).

தாள் சேர்ந்தார்க்கல்லால்	(7,8)
துளிவீழின் அல்லால்	(16)
புகழல்லால்	(233)

இதைப்போன்றே -ஏல் இறுதி கொண்ட நிபந்தனையெச்சமும் (386, 556, 368, 655, 1118) ஆனால் (மாண்பானால் 53) என்ற சொல்லாட்சியும், 'போழ்து' என்ற சொல்லாட்சியும் (1229) திருக்குறளில் உள்ளன என்று கூறி இதனால் திருக்குறள் பிந்தியது என்பார் பிள்ளை,

இத்தகைய சொல்லாட்சிகள் திருக்குறளில் மட்டுமன்றி வேறு சில நூல்களிலும் உள்ளன. முன்னர்க் குறிப்பிட்டபடி இரட்டைப் பன்மைச் சொற்கள் கலித்தொகையிலும் காணப்படுகின்றன.

-அன் விகுதியும் (அகத்தியலிங்கம், ச. 1982) சங்க நூல்கள் அனைத்திலும் காணப்படுகின்றது.

'மல்' விகுதிச் சொற்களும் மலைபடுகடாம் (படாமல், 365), கலித்தொகை (படாமல் 4, 10) பரிபாடல் (கொளுத்தாமல் 11, 126) ஆகிய நூல்களிலும் வந்துள்ளன.

'அல்லால்' என்ற சொல்லாட்சியும் கலித்தொகையில் 10 இடங்களில் காணக்கிடக்கிறது (பொருளல்லால், 14-10). இதைப்போன்றே -ஏல் இறுதி கொண்ட நிபந்தனை எச்சமும் 'ஆனால்', 'போழ்து' ஆகிய சொல்லாட்சிகளும் கலித்தொகையிலும் உள்ளன. 'போழ்து' என்ற சொல்லாட்சி அகநானூறு (175-18, 194-19, 364-14), நற்றிணை (37-11) ஆகியவற்றிலும் உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும் திருக்குறள் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்றே தோன்றுகிறது.

பின்பழந்தமிழ்க் கூறுகள் என்று கருதப்படும் பலகூறுகள் திருக்குறளில் காணப்படுகின்றன. கலித்தொகை ஒரு பின்பழந்தமிழ் நூலே. அதில் காணப்படும் பல கூறுகள் திருக்குறளிலும் உள்ளன. முன்னர்க் காட்டியபடி -ஏல் இறுதி நிபந்தனையெச்சம் திருக்குறளில் ஏராளமாக உள்ளது. இது கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது. கலித்தொகையில் 11 இடங்களில் வந்திருக்கத் திருக்குறளில் 13 இடங்களில் வந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

அல்லனேல்	குறள்	386
இன்றேல்	குறள்	556
		573
		575
		976
		1014
		1144
உண்டேல்	குறள்	368
		1075

		1151
செய்வானேல்	குறள்	655
வல்லையேல்	குறள்	1118
வறக்குமேல்	குறள்	18

இதைப்போன்றே இரட்டைப் பன்மைச் சொற்களும் (பூரியர்கள் 919 மற்றையவர்கள் 263) ஒரு பின்பழந்தமிழ்க் கூறே, இதுவும் கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகின்றது. (அகத்தியலிங்கம். ச, 1982)

''அல்லால்'' என்ற சொல்லாட்சியும் கலித்தொகை (25. 3) திருக்குறள் (263) சிலப்பதிகாரம் (10, 227) மணிமேகலை (30, 14, 15) ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது.

''ஆனால்'' என்பது கலித்தொகை (108-9), திருக்குறள் (53) ஆகிய இருநூல்களில் மட்டுமே உள்ளது.

இவை மட்டுமன்றி வேறுபல கூறுகளும் திருக்குறள் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்பதை நன்கு காட்டும்.

3. 3. 2. 1 செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம்

''செய்யாத'' வாய்பாட்டுப் பெயரெச்சம் சங்க இலக்கியங்களில் புறநானூறு, கலித்தொகை ஆகிய இரு இலக்கியங்களில் மட்டுமே உள்ளது. புறநானூற்றில் முன்னர்க் குறிப்பிட்டபடி இரு இடங்களில் மட்டுமே காணப்பட (27-19, 126-14) திருக்குறளில் 14 இடங்களில் காணப்படுகின்றது.

இல்லாத	குறள்	198, 412, 448, 574, 740; 945
எண்ணாத	குறள்	568
தூக்காத	குறள்	480
தோட்கப்படாத	குறள்	418
படாத	குறள்	776

நோக்காத	குறள்	148
அமையாத	குறள்	682. 825
அமைவிலாத்	குறள்	740
ஆகாத	குறள்	537

3. 3. 2. 2 -கள் உயர்திணைப்பன்மை விகுதி

உயர்திணைப் பன்மையில் வரும் ''கள்'' விகுதி பின்பழந்தமிழ் நூல்களிலேயே உள்ளது. பரிபாடல், குறள், சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றில் மட்டுமே உள்ளது.

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது குறள் 1075

3. 3. 2. 3 பொருட்டு என்னும் உருபு

பொருட்டு என்ற பின்னுருபு குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே உள்ளது.

செய்தற் பொருட்டு	குறள்	31. 212
தின்றபொருட்டு	குறள்	256
விலை பொருட்டு	குறள்	256
நகுதற்பொருட்டு	குறள்	784
கொடுத்தற் பொருட்டு	குறள்	725
இடித்தற் பொருட்டு	குறள்	784

போன்றவை இப்பண்பை நன்றாகக் காட்டும்.

3.3.2.4. வினையாலணையும் பெயர்கள்

வினையாலணையும் பெயர்களிலும் திருக்குறளில் சில புதிய பண்புகளைக் காணலாம். -அவ்- இடைநிலை கொண்ட வினையாலணையும் உயர்திணைப் பெயர்கள் அதிலும் குறிப்பாகப் பன்மைப் பெயர்கள் ஏராளமாக வருதல் காணலாம். இந் நிலைமையைக் கலித்தொகையிலும் காண முடியும். பிற இலக்கியங்கள் -ஓர் ஈற்றுச் சொற்களைக் கொண்டிருக்க இந்நூல்கள் -அவ்- இடைநிலைச் சொற்களையே அதிகமாகக் கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் ஓரிற்றுச் சொற்கள் 211 இருக்க-அவ்- இடைநிலைச் சொல் ஒன்றே வந்துள்ளது. இது போன்றே அகநானூற்றில் முன்னது 154 இடங்களில் வரப் பின்னது எட்டு இடங்களிலேயே வந்துள்ளது. ஆனால் திருக்குறளிலோ முன்னது 18 இடங்களில் வரப் பின்னது 107 இடங்களில் வந்துள்ளது. கலித்தொகையிலும் இதே நிலையைத் தான் காண்கிறோம் (காண்க. 3. 2. 2. 6)

அஞ்சுபவர்	464, 726, 906
ஆள்பவர்	1017, 383, 74
அமையாதவர்	825
அல்லவர்	751, 973
அல்லாதவர்	1077
இல்லாதவர்	354, 997

போன்ற சொற்கள் இப்பண்பைக் காட்டும்.

மேலும் முன்பழந்தமிழ் நூல்கள் அனைத்திலும், -ஒன், -ஒள் ஆகிய விகுதிகள் வந்திருக்கத் திருக்குறளில் மட்டும் இவ்விகுதி வினையாலணையும் பெயர்கள் வராமலிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் இவற்றிற்குப் பதில் -அவ்- இடைநிலை கொண்ட அன் ஈற்றுச் சொற்கள் 34 இடங்களிலும் அள் ஈற்றுச் சொற்கள் 4 இடங்களிலும் வந்துள்ளன.

அஞ்சுபவன்	727
இழந்தவன்	788
உடையவள்	112
இல்லவள்	53
பாய்பவள்	1287
வீழ்பவள்	1111

3.3.2.5 சில முன்பழந் தமிழ்க் கூறுகளின் மறைவு

இவை தவிர பழந்தமிழ் நூல்களில் காணப்படும் எத்தனையோ கூறுகள் திருக்குறளில் காணப்படுவதில்லை.

தொல்காப்பியம் வினையெச்ச வாய்பாடுகளாகத் தரும் 'செய்பு' 'செய்யூஉ' வாய்பாட்டுச் சொற்கள் குறளில் காணப்படு வதில்லை. பிற பின்பழந் தமிழ் நூல்களாகக் கருதப்படும் பரி பாடல் (46) கலித்தொகை (123) சிலம்பு (7) மணி (8) ஆகிய நூல் களில் செய்பு வாய்பாட்டுச் சொற்கள் காணப்படுகின்றன. இது போன்றே 'செய்யூஉ' வாய்பாட்டுச் சொற்களும் பிறநூல்களில் (கலி (2), பரி (5), சிலம்பு (2), மணி (2) காணப்பட குறளில் காணப்படுவதில்லை.

''செய்யியர்'' வாய்பாட்டு வினையெச்சமும் திருக்குறளில் காணப்படுவதில்லை. ஆனால் கலித்தொகையில் இரு இடங்களில் வந்துள்ளது.

இத்தகைய நிலையைப் பால் காட்டும் விகுதிகளிலும் காண லாம். தன்மை ஒருமை காட்டும் என், இசின் வாய்பாட்டு ஈறு, தன்மைப் பன்மை காட்டும் எம் ஈற்றுச் சொற்கள் திருக்குறளில் காணப்படுவதில்லை.

இந்நிலையில் திருக்குறள் ஒரு பின்பழந்தமிழ் நூல் என்றே கருதப்படுகின்றது.

3. 3. 2. 6 கலித்தொகையும் திருக்குறளும்

பின் பழந்தமிழ் நூல்களில் பரிபாடல் முந்தியது என்றும் அதற் குப் பின்னரே கலித்தொகை தோன்றியிருக்கலாம் எனவும் கருத லாம். கலித்தொகையைப் பாடியவர் ஒருவரே என்பதே பல அறி ஞர்களின் எண்ணம். திருக்குறளையும் கலித்தொகையையும் வைத்து நோக்கின் கலித்தொகையில் காணப்படும் புதிய கூறுகள் அனைத் தும் திருக்குறளில் காணப்படுகின்றன. முன்னர்க் குறிப்பிட்டபடி இரட்டைப் பன்மைச் சொற்கள், மல்லீற்று வினையெச்சம், ஏலீற்று நிபந்தனை எச்சம், அல்லால், போழ்து போன்ற சொல்லாட்சிகள் போன்றவை இரு நூல்களிலும் காணக்கிடக்கின்றன. ஆனால் கலித் தொகையில் காணப்படும் பல முன்பழந்தமிழ்க் கூறுகள் (செய்பு செய்யூ, செய்யியர் வாய்பாட்டு வினையெச்சங்கள், - ஓய், -ஒன், -ஒள் விகுதிகள் ஆகியவை) திருக்குறளில் காணப்படுவதில்லை. இந்நிலையில் இவ்விரு நூல்களும் ஒன்றையடுத்து மற்றது உரு வாகியிருக்கலாம் என எண்ணலாம்.

3. 4. 1 சிலப்பதிகாரம்

3. 4. 1 சங்கம் மருவிய நூல்

சங்கம் மருவிய நூல்களில் சிலப்பதிகாரமும் ஒன்று என்பது முன்னரே கூறப்பட்டது. இது திருக்குறளுக்குப் பிந்தியது என்பது திருக்குறளை இது

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளை
(கட்டுரைக்காதை – வெண்பா)

என எடுத்தாண்டுள்ள நிலையில் நன்கு விளங்கும்.

3. 4. 2 மொழிநிலை

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராயின் இந்நிலை நன்கு உறுதிப்படும். பின்பழந்தமிழ்க் கூறுகள் என்று கருதப் படுகின்ற (பார்க்க. அகத்தியலிங்கம் 1982) பல கூறுகள் சிலப்பதி காரத்தில் காணப்படுகின்றன. இவற்றில் காணப்படும் இக் கூறு களில் சில இதற்கு முன்னர்த் தோன்றிய பின்பழந்தமிழ் நூல்கள் என்று கருதப்படுகின்ற திருக்குறள், கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் காணப்படுவன. இன்னும் சிலவோ அவற்றில் காணப்படாதவை. மேலும் முன்பழந்தமிழ் நூல்களில் காணப்படும் ஒரு சில கூறுகள் சிலப்பதிகாரத்தில் மறைந்துவிட்ட நிலையையும் காணுகிறோம்.

3. 4. 2. 1 வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராய்ந்த பல அறிஞர் கள் இதன் சிறப்புக் கூறுகள் எனப் பலவற்றைத் தந்துள்ளனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தன்னுடைய 'காவிய காலம்' என்ற நூலில் (பக். 127, 128) பல மொழிக் கூறுகளையும் பல புதிய சொற்களையும் சுட்டிக்காட்டுவார். இந்த (சிலம்பு 21 51), நான் (சிலம்பு 29-2-4) நீர் (சிலம்பு 27-239, 16-21) காறும் (சிலம்பு 14-22, 30-65) -அன் ஈற்றுத் தன்மை ஒருமையாகிய போக்கு வன்(16-129) உறுவன் (19 6) தன் (கணவன்றன் 16-60) உடைய (தம்முடைய தண்ணளியும், கானல்வரி 32) ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுவார். இத்தகைய கூறுகள் சிலப்பதிகாரத்தை ஒட்டி எழுந்த

மணிமேகலையிலும் காணப்படுவதை எடுத்துக்காட்டிச் செல்லு வார் இவர். இவரைப் போன்றே பேராசிரியர் வ. சுப. மாணிக்கமும் பலவேறு கூறுகளை எடுத்துக் காட்டுவார்.

3. 4. 2. 2 வ. சுப. தரும் சான்றுகள்

1. யகர மெய் கெடல்

யார் என்ற சொல் ஆர் என வழங்குவதையும் யாறு என்ற சொல் ஆறு என வழங்குவதையும் எடுத்துக் காட்டுவார் அவர்.

ஆரிக் கொடுமை செய்தா ரென்று அன்னை அறியின் 7-38-4

ஆரெனக் கேட்டீங் கறிகுவம் என்றே 10-222

ஆற்றுவழிப் பட்டோர் ஆரென வினவ 10-224

என்பவற்றை உதாரணங்களாகத் தருவார்.

2. தனிக் குறில் ரகரம்

''வர்த்தனை'' என்ற சொல்லாட்சியினை இதற்கு எடுத்துக் காட்டாகத் தருவார்.

3. ழகர, நகரப் புணர்ச்சி

தாதையைக் கேட்கில் தன்குலவாணர் 15-126

மண்ணாள் வேந்தே நின்வாணாட்கள் 28-125

ஆகியவற்றை எடுத்துக் காட்டுக்களாகத் தந்து செல்வார். ழகரமும் நகரமும் புணர்ந்து ணகரமாக வருதலைச் சுட்டிச்செல்லுவார் அவர்.

4. சகர முதற் சொற்கள்

சங்க இலக்கியத்தில் சமம், சமழ்ப்பு, சவட்டி ஆகிய சில சொற்கள் வந்துள்ளன என்றும், சிலப்பதிகாரத்தில் சகரக் கிளவி கள் ஓரளவு கூடுதலாக உள்ளன என்றும் கூறி கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தருவார் வ. சுப. மாணிக்கம்.

சடை	சரவணம்
சகடு	சக்கரம்
சண்பகம்	சகடம்
சமன்	சந்திரகுரு
சந்தனம்	சமைப்பேன்
சந்து	சரிதை
சங்கம்	சமரம்
சங்கு	சகோடம்
சதுக்கம்	சயந்தன்
சதங்கை	சங்கரன்
சங்கிலி	சயம்பு
சந்திரபாணி	சதுமுகன்
சலம்	சங்கரி
சலதி	சஞ்சயன்
சந்தி	சங்கமன்

5. -கள் என்ற இடைச்சொல்

அஃறிணைப் பன்மை குறிக்கும் -கள், உயர்திணைப்பெயர்க்கும் ஈறாக சிலம்பில் (தேவிர்காள், யாங்கள், தாங்கள், வானோர்கள், பெண்கள்) வந்துள்ளதைச் சுட்டிக் காட்டுவார்.

6. -இன்று-

-கின்று- நிகழ்கால இடைநிலை சிலம்பில் வந்துள்ளமைக்கு எடுத்துக் காட்டாக

வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக்கின்ற உறுவெயிற் கடைநாள் 14 - 124, 125
உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு
துரந்ததுபோல் 29 - 1 - 11

ஆகியவற்றைத் தருவார்.

7. ஈறு நீண்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இவ்வகைப் பெயரெச்சங்களைச் சிலப்பதிகாரத்தில் காண முடிவதாகக் கூறி

உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய் 12 - 22-4

சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே 17 - 35

போன்ற பல எடுத்துக்காட்டுகளைத் தந்து செல்வார்.

8. அன் ஈறு

அறிகுவன் யான் (11 - 195), போக்குவன் யான் (16-129) ஆகிய எடுத்துக்காட்டுகளைத் தந்து தன்மை ஒருமைக்கும் -அன் ஈறு வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுவார்.

9. தன்மை எதிர்காலம் (ககர இடைநிலை)

அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன் 15 - 68

போயெங்கு நாடுகேன் 19 - 64

ஆகியவற்றைத் தன்மை எதிர்கால எடுத்துக்காட்டுக்களாகத் தருவார்.

10. ஐயநடைமுற்று

கையறு துன்பம் காட்டினும் காட்டும் 10 - 71

போன்ற ஐயநடைமுற்றுக்கள் சிலப்பதிகாரத்தில் புதுவதாக ஆளப் பட்டுள்ளதாகக் கூறுவார்.

11. நான் என்ற பெயர்

தடம்பெருங் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்

தண்புகார்ப்பாவைக்குத் தாயர் நான் கண்டீர் 29 - 3

போன்ற பல இடங்களில் 'நான்' என்ற சொல் வருவதை எடுத்துக் காட்டுவார்.

12. இந்த என்ற சுட்டு

இந்த என்ற சொல்

அறத்துறை மாக்கட் கல்லது இந்தப்

புறச்சிறை இருக்கை பொருந்தாது 15-107.

பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவல் உடையோனால் 21 - 51

ஆகிய வரிகளில் வருவதைச் சுட்டிச் செல்வார்.

13. உன் என்ற வேற்றுமை வடிவு

அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன் 15 - 68

உன்கைக் குறிக்கோள் தகையது 30 - 63

போன்றவற்றில் உன் வருவதை எடுத்துக்காட்டி இது சிலப்பதிகாரக் காலத்தில் தோன்றிய புதிய வடிவம் என்று கூறுவார்.

14. உடன் என்ற சொல்லாட்சி

சிலம்பில் புதுவதாக மிகவும் பயின்று வரும் ஒரு சொல் 'உடன்' என்று கூறி சில எடுத்துக்காட்டுக்களைத் தந்து செல்வார்.

அ) வேற்றுமைப் பொருளில் 'உடன்'

பொலியக் கோத்த புலமையோனுடன் 3-94

உயிருடன் சென்ற ஒரு மகள்தன்னினும் 25 - 107

ஆ) வினையுடன் 'உடன்'

பரிந்துடன் வகுத்தென 3-157

சுமந்துடன் வந்த 14-109

பொழிந்துடன் பரப்ப 16-214

இ) பெயர்ச்சொல்லுக்கு முன் 'உடன்'

உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை 10-227

15. தான், தன் என்ற சொல்லாட்சிகள்

இது சிலப்பதிகாரத்தில் மண்டிக் காணப்படுகின்ற ஒரு புதுக் கூறு என்று கூறி சில எடுத்துக்காட்டுகளைத் தந்து செல்வார்.

கோவலன் தான் போன பின்னர் 7-52

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் 7-2

16. சுட்டசைகள்

அது, அவன் போன்ற சுட்டுகள் சிலப்பதிகாரத்தில் அசையாக வருவதையும் புதிய கூறாகவே எடுத்துக்காட்டுவார்.

புகழ் மன்னும் புகார் நகரதுதன்னில் 1-22

ஆடகப் பூம்பாவையவள் போல்வார் 21-34

இவற்றுள் சில வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டவை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

3. 4. 2. 3 மொழிக் கூறுகளின் தன்மை

இவர்கள் சுட்டிச் செல்லும் பல கூறுகள் பின்பழந்தமிழ் நூல்களில் சிலப்பதிகாரத்துக்கு முன்னர் எழுந்தவை எனக் கருதப் படும் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள் ஆகிய நூல்களில் எவையேனும் ஒன்றில் அல்லது இரண்டில் அல்லது மூன்றிலும் காணப்படுபவை. இன்னும் சிலவோ சிலப்பதிகாரத்தில் மட்டுமே வருபவை.

இன்னுஞ் சிலவோ முன்பழந்தமிழ்நூல்கள் எனக் கருதப்படும் பதிற்றுப்பத்து போன்ற நூல்களிலும் இடைமறை காயாக வந்துள்ளவை. எனினும் எண்ணிக்கையில் சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் அதிகமாக வருபவை.

இன்னும் ஓரிரு கூறுகளோ புதிய கூறுகளே அல்ல; பழைய கூறுகளாகும். தவறுதலாகப் புதிய கூறுகள் எனக் கருதப்பட்டு விட்டன.

3. 4. 2. 3. 1 பழைய கூறுகள்

1. தன்மை ஒருமை விகுதி- அன்

தன்மையில் ஒருமை காட்டுவதாக உள்ள 'அன்' ஈறு பழந் தமிழ் நூல்களிலேயே வந்துள்ளது. பரிபாடலும் பத்துப்பாட்டும் ஒழிந்த நூல்கள் அனைத்திலும் வந்துள்ளது இது.

இலன்	பதி	77-7
தொடங்கினன்	ஐங்	428-4
அமைகுவன்	அகம்	74-14
மறப்பன்	நற்	270-11
கண்டனன்	குறு	311-4
அணைத்தனன்	புறம்	255-2
நோக்குவன்	கலி	147-27

போன்ற உதாரணங்கள் இப்பண்பைக் காட்டும். இது பதிற்றுப் பத்திலும், ஐங்குறுநூற்றிலும் ஒவ்வொரு இடத்திலும், அகத்தில் 8 இடங்களிலும், நற்றிணையில் 19 இடங்களிலும், குறுந் தொகையில் 5 இடங்களிலும், புறத்தில் 13 இடங்களிலும், கலித் தொகையில் 7 இடங்களிலும் வந்துள்ளது. தொல்காப்பியர் இது பற்றிக் கூறாத நிலையிலேயே வையாபுரிப்பிள்ளை பிற்காலக் கூறு என்றார். இதனை அடியொற்றியே வேறு பலரும் இதனைப் பிற்காலக்கூறு எனக் கருதினர் போலும். ஆனால் இதுவோ சங்க இலக்கியங்களில் பரந்து காணப்படுகின்றது.

2. உடன் என்ற சொல்லாட்சி

இதைப்போன்றே உடன் என்ற சொல்லாட்சியும். இதுபற்றிக் கூறும் வ. சுப. ''சிலப்பதிகாரத்தில் புதுவதாக மிகவும் பயின்று வரும் சொல் 'உடன்' என்பது'' என்பார். இச்சொல் தொல் காப்பியத்திலேயே 9 இடங்களில் வந்துள்ளது. அது உடனிகழ்ச்சி பொருளில் காணப்படாவிடினும் 'உடன்பட்டோர்' (பொருள் 112-43) உடன்போகிய (பொருள் 141-2 146-1) போக்குடன் (உடன்போக்கு) பொருள் 113-8) உடன்சேரல் (பொருள் 144-43) என்றெலலாம் வருதல் காணத்தக்கது. இவற்றுள்

உடன் பட்டோர் போன்றவை வ. சுப. காட்டும் 'உடன் வயிற்றோர்' போன்றவற்றுடன் பொருந்துபவை. மேலும் அவர் காட்டுவது போல் செய்து என்னும் எச்சத்துடனும் (சுமந்துடன் வந்த பொருள் [14-109] [நேர்ந்துடன் வருமே பொருள் 523] தொல்காப்பியத்தில் வருதல் காணத்தக்கது.

மட்டுமின்றி முன்பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலுமே 'உடன்' வந்துள்ளது. வேற்றுமை உருபாகவும், வினையுடன் வருவதாகவும் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. வேற்றுமை உருபாகப் புறநானூற்றில்

அரசுடன் பொருத	புறம்	158-2
உலகுடன் பெறினும்	புறம்	182-6
கோவலர் பூவுடனுதிர	புறம்	224-15

என வருவது கவனித்தற்பாலது. இது போன்றே பிற இலக்கியங்களிலும் காணப்படுகின்றது.

ஊருட னெழுந்து	பதி	19-16
மகளிரி னிரையுடன் குழீஇப்	ஐங்	204-2
நினைவுடன்	அகம்	5-7
பூவுடன் நெறிதரு தொடலை தைஇ	நற்	138-7
பந்துடன் மேவாள்	குறு	396-1
கிளையுடன் மகிழ்ந்து	பத்து	1-196
நீருடன் கலந்து	பரி	10-124
வெருள்புடன் நோக்கி	கலி	43-12

வினையுடனும் பல இடங்களில் வந்துள்ளது.

புக்குடன் ...... மகிழ்சிறந்து	பதி	68-10
விரைந்துடன்	ஐங்	274-2
மொசிந்துடன் ....மறைய	அகம்	181-10

தடிந்துடன் வீழ்ந்த அகம் 337-11
புணர்ந்துடன் போதல் குறு 297-6

என்றெல்லாம் வருவது கவனித்தற்பாலது. மேலும் இது வ. சுப. காட்டுவது போல் (உடன் வாழ்க்கை போன்று)

உடனிலை அகம் 64-12,
உடனுறைவு குறு 206-4
உடனிலை புறம் 58-21
பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்
புறம் 183.3

எனப் பிற இலக்கியங்களிலும் பெயருடன் வருதல் காணத்தக்கது. இந்நிலையில் உடன் என்பதைப் புதுவதாகப் பயின்று வரும் சொல் எனக்கருத முடியாது.

சங்க இலக்கியங்களிலேயே 'ஓடு' வேற்றுமைச் சொல்லுடன் .உடன்' வருவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தவாஅலிய ரோவிவ் வுலகமோடுடனே
பதி 14-22
.... காமமொ
டுடனுயிர் போகுக குறு 57-4
தீநீரோ டுடன் விரா அய் புறம் 24-15
நின்று நிலைஇய ருலகமோ டுடனே
புறம் 58-12
......................நின்னோ
டுடனுறை.................. புறம் 236-12

3. தன், தம் என்ற சொல்லாட்சிகள்

இதைப் போன்றே சிலப்பதிகாரத்தில் மண்டிக் காணப்படும் ஒரு புதுக்கூறாக வ. சுப. மாணிக்கம் குறிப்பிட்டுச் செல்லும் தான், தாம், தன், தம் சொல்லாட்சிகளும் பலவேறு படர்க்கைப் பெயர்களுடன் சங்க இலக்கியங்களிலேயே பெருமளவில் பயின்று வரக் காண்கிறோம்.

வேந்தர்தம் எயிலே	பதி	52-31
என்னோ மகளிர்தம் பண்பு	நற்	339 12
புதல்வர்தம் மழலை	புறம்	92-3
கொற்றவர்தம் கோனாகுவை	பத்து	6-74
கடியார்தமக்கு யார் சொல்லத் தக்கார்	கலி	88-5
பொறாதார்தம் கண் பொடிவ தெவன்	கலி	105-60
ஊரன்தன்மனை	ஐங்	3-5
அவள்தன் பண்பே	ஐங்	89-4
தந்தைதன் ஊர் இதுவே	நற்	198-11
தொண்டிதன் திறம் பெறுக	நற்	8 10
குன்றநாடன் தன்னினும்	குறு	327-3
யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போல	புறம்	101-6
ஞாலம் தன்னில் தோன்றி	பத்து	1-163
வையைதன்நீர்	பரி	22-32
வையைதன் நீர் முற்றி	கலி	67-3

இந்நிலையில் இதனைப் புதுக்கூறு எனக் கருதுவது இயலாத ஒன்றாகும்.

3.4.2.3.2. வரவு எண்ணிக்கை கூடிய கூறுகள்

இன்னுஞ் சிலவோ முன்பழந்தமிழ் இலக்கியங்களில் சிறு வரவில் வந்துள்ளவை.

1) யகர மெய் கெடல்

வ. சுப. மாணிக்கம் கூறும் ''யகர மெய் கெடல்'' நற்றிணையிலும் பரிபாடலிலும் வந்துள்ளது.

ஆர்தர வந்தனன் நற் 119-4

என நற்றிணையில் ஒரு இடத்திலும்

ஆற்றணி வெள்வாள் விதிர்ப்போர்...... 11-50
சிலம்பாறு அணிந்த 15-22

என்று பரிபாடலில் இரு இடங்களிலும் வந்துள்ளது. ஆனால் சிலம்பிலோ இது நான்கு இடங்களில் (ஆர் 7-38-4, 10-122, 224, ஆற்று 10-156) வந்துள்ளது.

2. ழகர நகரப் புணர்ச்சி

ழகர நகரப் புணர்ச்சியும் சோணாடு என்ற சொல்லில் பட்டினப் பாலை (28) புறம் (33-1) ஆகிய இருநூல்களிலும் காணப்படுகிறது.

3. சகர முதற் சொற்கள்

சகர முதற் சொற்களும் பழந்தமிழ் இலக்கியங்களில் சிறு வர விற்றாக உள்ளன. இதை வ. சுப. வே கூறியுள்ளார்.

4. -கள் விகுதி

-கள் என்ற பன்மை காட்டும் விகுதியைச் சிலம்பில் மட்டுமன்றிப் பரிபாடல், கலித்தொகை, குறள் ஆகியவற்றிலும் காணலாம். (பார்க்க. அகத்தியலிங்கம், ச. 1982.)

உயர்திணை காட்டும் சொற்களில் பரி (1), குறள் [1] சிலம்பு [16] ஆகிய நூல்களில் காணப்படுகின்றது.

வாளிகள்	பரி 9.54
கீழ்கள்	குறள் 1075
பெண்கள்	சிலம்பு 30.50

இரட்டைப் பன்மைப் பதிலிடுபெயர்களில் சிலம்பில் (6) மட்டு மின்றிக் கலித்தொகையிலும் (1) உள்ளது.

எங்கள்	கலி 22-20-21
யாங்கள்	சிலம்பு 25-62
தங்கள்	சிலம்பு 23-175

இரட்டைப் பன்மைச் சொற்களில் கலித்தொகை (4), குறள் (2), சிலம்பு (6) ஆகியவற்றில் வருதல் காணத்தக்கது.

அரசர்கள்	கலி 25-3
பூரியர்கள்	குறள் 919
சிறுமியர்கள்	சிலம்பு 17-28-2

5. -கின்று-இடைநிலை

திகழ்காலம் காட்டும் "கின்று" என்னும் இடைநிலையும் சிலம்பில் மட்டுமின்றி வேறுபல நூல்களிலும் காணக்கிடக்கின்றது.

ஆகின்றது	அகம் 96-18, 296-14, 368-19
ஆகின்றது	நற் 227-9, 272-11, 354-11
சேர்கின்ற	பரி 22-35
உருள்கின்ற	சிலம்பு 29-11

இதுபோன்றே "ஆநின்று" என்ற இடை நிலையும் ஐங்குறு நூறு, குறள் ஆகியவற்றிலும் உள்ளது.

வாரா நின்றனள்	ஐங் 397-3
இறவா நின்ற	குறள் 1157

6. செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம்

செய்யாத என்னும் வாய்பாட்டு எதிர்மறைப் பெயரெச்சமும் சிலம்பில் மட்டுமன்றிப் புறநானூறு (2) கலித்தொகை (7) குறள் (14) ஆகியவற்றிலும் உள்ளது. சிலம்பில் இது 10 இடங்களில் வந்துள்ளது.

கெடாத	புறம் 27-19
தாவாத	கலி 86-29
அகலாத	குறள் 1226
வளையாத	சிலம்பு 19-18

7. உன் என்ற வேற்றுமை வடிவம்

'நின்' என்பது சங்க வழக்கு எனவும், சிலப்பதிகாரக் காலத்தில் 'உன்' என்ற புதிய வடிவம் தோன்றலாயிற்று எனவும்

வ. சுப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் சங்க இலக்கிய மான அகநானூற்றிலேயே 'உன்' ஒரு இடத்தில் வரக் காண் கிறோம்.

கான நாடன் உறீஇய நோய்க்குன்

மேனி ஆய்நலந் தொலைதலின் மொழிவென்

அகம் 222-2 (கபிலர்)

8. ககர ஒற்று

''செய்கேன்'' வாய்பாட்டு வினைமுற்றும் சிலப்பதிகாரத்தில் மட்டுமே வருவதன்று. கலித்தொகையிலும் (1) இது காணக் கிடக்கின்றது. சிலம்பில் 4 இடங்களில் இது வந்துள்ளது.

ஆற்றுகேன் கலி 140-14

மட்டுமன்றிச் ''செய்கேம்'' வாய்பாட்டு வினைமுற்று பதிற்றுப் பத்தில் (1) வந்துள்ளமை நினைவு கூரத்தக்கது.

நுகர்கேம் பதி 38-13

4. 'நான்' தன்மைப் பதிலிடு பெயர்

நான் என்ற தன்மை ஒருமைப் பதிலிடு பெயரும் பரிபாடலில் ஒரு இடத்தில் வந்துள்ளது. சிலம்பில் இது 7 இடங்களில் வந்துள்ளது.

நான் பரி 6-87

நான் சிலம்பு 29-2-4

10. -ஓம் தன்மைப் பன்மை விகுதி

-ஓம் என்னும் தன்மைப் பன்மை விகுதி ஐங்குறுநூற்றிலும், புறநானூற்றிலும் ஒவ்வோரிடத்தில் வந்துள்ளது. சிலப்பில் இது 10 இடங்களில் வந்துள்ளது.

மறந்தோம் ஐங் 112-4

தீர்க்குவோம் புறம். 381-16

அறிகோம் சிலம்பு 7-5-2

மேலே காட்டிய கூறுகள் பிற இலக்கியங்களிலும் சிறுவர விற்றாக வர, சிலப்பதிகாரத்திலோ கூடுதலாக வருவதிலிருந்து பிற இலக்கியங்களுக்குப் பின்னர் சிலப்பதிகாரம் தோன்றியது எனக் கருதலாம்.

3. 4. 2. 3. 3 புதிய கூறுகள்

மேலும் ஒரு சில கூறுகள் சிலப்பதிகாரத்திலும் அதை ஒட்டி எழுந்த மணிமேகலையிலும் காணப்படுகின்றது.

முன்பழந்தமிழ் நூல்களில் யாங்கணும் (அகம் 7-3) யாங்ஙனம் (நற். 381-6) போன்ற யா முதல் வினாச் சொற்கள் மட்டுமே காணப்படச் சிலம்பிலும், மணிமேகலையிலும் சில புதிய எகர முதற் சொற்கள் காணப்படுகின்றன.

1. எங்கணும்

இச்சொல் சிலப்பதிகாரத்தில் 4 இடங்களில் வந்துள்ளது.

எங்கணும் போர்த்து 10-145

ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும்
12-2-1

மலைபுரை மாடம் எங்கணும்கேட்ப
23-124

ஆடு கூத்தராகி யெங்கணும்
ஏந்துவாளொழியத்..... 26-228

2. எங்கு

இச்சொல் சிலப்பதிகாரத்தில் இரு இடங்களில் காணப்படுகிறது.

போயெங்கு நாடுகேன் சிலம்பு 19-69
...எங்கொளித்தாயோ சிலம்பு 30-111

3. இந்த என்ற சுட்டுச்சொல்

இந்த என்ற சுட்டுச் சொல்லும் முதல் முதலாக சிலப்பதி காரத்திலேயே காணப்படுகின்றது.

இந்த   சிலம்பு 15-107, 21-51

4. உயர்திணையில் 'உண்டு'

'உண்டு' என்ற குறிப்புவினைமுற்று உயர்திணைப் பெயருடன் முதன் முதலாக சிலப்பதிகாரத்திலேயே 4 இடங்களில் காணப்படுகிறது.

சான்றோரும் உண்டு கொல்

சிலம்பு 19-54

5. வினைமுற்றில் 'கள்' விகுதி

வினைமுற்றில் -கள் பன்மை விகுதி இரட்டைப் பன்மையாக வருவதைச் சிலம்பில் காண்கிறோம்.

நண்ணுமின்கள்   சிலம்பு 16-வெண்பா-1

6. கண்டதன் பின்னர்

கண்டதன் பின்னர், சென்றதன் பின்னர் போன்ற அன் சாரியை சேர்ந்த வழக்கு சிலம்பில்தான் முதல் முதலாகக் காணப்படுகின்றது.

போந்ததன் பின்னர் சிலம்பு 26-104

இறந்ததன் பின்னர் சிலம்பு 27-159

நடந்ததன் பின்னர் சிலம்பு 30-85

சென்றதன் பின்னர் சிலம்பு 28-130

7. தன்மை, முன்னிலைப் பதிலிடு பெயர்களுடன் தன் என்ற சொல்லாட்சி

தன் என்ற சொல் தேற்றங் காட்டும் இடைச் சொல் போன்று தன்மையிலும், முன்னிலையிலும் வருவதைச் சிலப்பதிகாரத்தில் முதன் முதலாகக் காண்கிறோம்.

என்றன் மேல் சிலம்பு 9-48

என்றன் வஞ்சியொடு சிலம்பு 25-135

உன்றன் அருந்துயர் சிலம்பு 15-68

இத்தகைய மொழிக்கூறுகள் சிலப்பதிகாரத்தின் காலத்தை நிர்ணயிக்க உதவுகின்றன. இந்நூல் சங்க இலக்கியங்களுக்கும், திருக்குறளுக்கும் பின்னர்த் தோன்றியது என முடிவு கட்டலாம். முன்னர்க் குறிப்பிட்டபடி சில மொழிக்கூறுகள் பின்பழந்தமிழ் இலக்கியங்களில் இலைமறை காயாகக் காணப்படினும் இன்னும் சில கூறுகளோ சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுவதும் இக் கூற்றுக்கு அரண் செய்யும்.

3. 4. மணிமேகலை

3. 4. 1. காலம்

சங்கம் மருவிய நூல்களில் மணிமேகலையும் ஒன்று. சிலப்பதிகாரத்தை ஒட்டி எழுந்த காப்பியமாதலின் இவற்றை இரட்டைக் காப்பியம் எனக் கூறுவர். கூலவாணிகன் சாத்தனாரால் இயற்றப் பட்ட இக்காப்பியம் பௌத்தமதம் பற்றி எழுந்த முழுமுதல் நூலாகக் கருதப்படுகிறது.

திருக்குறளை
''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்''

(மணி 22. 59-61)

என எடுத்தாண்டமையின் இது திருக்குறளுக்குப் பிந்தியது என்பது நன்கு விளங்கும்.

3. 4. 2. மொழிநிலை

மணிமேகலையின் மொழிநிலையை ஆராயின் இவ்வுண்மை உறுதிப்படுவதைக் காணலாம். பின்பழந்தமிழ்க் கூறுகள் எனக் கருதப்படுகின்ற கூறுகள் பல இக்காப்பியத்தில் காணப் படுவது இது ஒரு பின்பழந்தமிழ்நூல் என்பதைத் தெளிவாகக் காட்டும். எனவேதான் இதனைப் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள் சிலப்பதிகாரம் ஆகியவற்றோடு இணைத்துப் பின்பழந் தமிழ் நூல் எனக் கூறுகிறோம். இதன் மொழி நிலை பற்றி ஆராய்ந்தவர்களில் பேராசிரியர்கள் வையாபுரிப்பிள்ளை, வ சுப. மாணிக்கம், டாக்டர் கந்தசாமி ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்

3. 4. 2. 1. பேராசிரியா வையாபுரிப்பிள்ளை தரும் சான்றுகள்.

சிலப்பதிகாரத்தின் மொழிநிலையை ஆராயும்போது வையா புரிப்பிள்ளை (காவியகாலம் 127-128) மணிமேகலையிலிருந்தும் சிலபல எடுத்துக்காட்டுக்களைத் தந்து இவ்விரண்டு நூல்களும் கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை என வற்புறுத்துவார்.

இந்த (மணி 26-63; 2:-198) அந்த (23-6 ; 29-30) நான் (28-92, நீர் (6-26; 26-14) உன் (23-80) காறும் (21-167) -அன் ஈறு (கேட்குவன் 20-18) உன்னை (22-71) தன் (கணவன் றன் 19-60) தனை (மணிமேகலைதனை 18-155) போன்ற மொழிக் கூறுகளைத் தந்து இவை பிற்கால வழக்கு என்று குறிப்பிடுவார். எனினும் இந்நூல் எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பது பொருந்தாது.

3.4.2.2. டாக்டர் சோ. ந. கந்தசாமி தரும் சான்றுகள்

பிள்ளையைப் போலவே மணிமேகலையைப் பரக்க ஆராய்ந்த சோ. ந. கந்தசாமியும் (1978) பலவேறு மொழிக்கூறுகளை எடுத்துக் காட்டுகளாகத் தருவார்.

1. சகர முதற் சொற்கள்

தொல்காப்பியர் சகர ஒற்று அகர, ஐகார, ஔகாரங்களுடன் இணைந்து மொழிக்கு முதலில் வராது என்று கூற மணிமேகலை யில் ஏராளமான சகர, சைகார முதற் சொற்கள் காணப்படுகின் றன என்று கூறி சிலவற்றை எடுத்துக்காட்டுகளாகத் தருவார்.

சமயம் 1-13,90	சந்தம் 27-100
சம்பாபதி 6-138	சன்னு 29-362
சமணர் 5-52	சயித்தம் 28-131
சங்கதருமன் 5-70	சபக்கம் 29-73, 81,212
சக்கரவாளம் 6-24	சயனாசனவான் 29-297
சமந்தம் 11-22	சரணாகதி 30-5
சங்கமன் 26-23	
சைவவாதி 27-87	

சைமினி 27-82

சைதனியவான் 22-176

2. யகர ஒற்று

சங்க இலக்கியங்களில் யகரம் அகரத்தோடும், ஊகாரத் தோடும் இணைந்து வர மணிமேகலையிலோ ஓகாரத்தோடும் இணைந்து வருகிறது என்பார்.

யோகம்	3-100
யோசனை	6-211

3. ரகரத்தின் முன் இகரம் இணைதல்

ரகரம் சொல் முதலில் வரும்போது 'இ' இணைக்கும் வழக்கு மணிமேகலையில் காண்கிறோம் என்று கூறி கீழ்வரும் சொற் களைத் தருவார்.

இராமன்	27-53
இரவி	24-58
இராவணன்	27-54
இராகுலன்	9-46

4. குறில் எழுத்தின் பின்னர் ரகரம்

ரகர, ளகர ஒற்றுக்கள் குறில் எழுத்துக்குப் பின்னர் வராது என்று தொல்காப்பியர் கூற வர்த்தித்தல் (29-256) போன்ற சொற்களை மணிமேகலையில் காண முடியும்.

5. -அன் ஈற்றுத் தன்மை ஒருமை

தன்மை ஒருமையில் -அன் ஈற்றுச் சொற்கள் மணிமேகலை யில் வருகின்றன என்பார்.

கண்டனன்	3-22
கூறுவன்	6-34
கேட்குவன்	20-18-, 22-134

தருகுவன்	6 174
அறிகுவன்	13-71

6.-ஓம் தன்மைப் பன்மை விகுதி

தன்மைப் பன்மை காட்டும் -ஓம் ஈறு மணிமேகலையில் காணப்படுகிறது.

ஆரும் இலோம்	5-56

7. மகர ஈற்று முன்னிலை ஏவல்

மேலும் இவர் 'கொண்ம்' போன்ற சொற்களில் காணப்படும் மகர ஈறு ஒரு பிந்திய கூறு எனக் கருதி

கொண்ம்	3-101
உண்ம்	3-103
போம்	14-37, 6-26
கொடும்	16-77
தொழும்	10-70
உரைம்	22-164, 165

என்பவற்றைக் காட்டிச் செல்லுவார்.

8. ஆளன், ஆட்டி, ஆளர் ஆகிய விகுதிகள்

ஆளன், ஆட்டி, ஆளர் ஆகிய விகுதிகளும் மணிமேகலையில் அதிகமாகக் காணப்படுகின்றன எனக் கூறிச் சிலபல உதாரணங்களைத் தருவார்.

ஆளன்

உருவிலாளன்	5-5
உரையாளன்	5-73
கொடுந்தொழிாலளன்	6-100

ஆட்டி

விலையாட்டி	5-87
முதாட்டி	6-157, 20-40
தவத்தாட்டி	23-64

ஆளர்

காராளர்	3-29
வடமொழியாளர்	5-40
காவலாளர்	7-111, 27-29

9. காரர் என்ற விகுதி

காரர் என்ற விகுதியும் மணிமேகலையில் உள்ளது எனக் கூறுவார்.

கஞ்சக்காரர்	28-35
மாலைக்காரர்	28-40

10. -கள் பன்மை விகுதி

-கள் விகுதி அஃறிணைப் பன்மை விகுதியாகச் சங்ககாலத்தில் குறைவாக வர மணிமேகலையிலோ ஏராளமான சொற்கள் உள்ளன என எடுத்துக் காட்டுகள் தந்து செல்வார்.

பாலிகைகள்	1-44
கணங்கள்	6-179, 13-66, 21-130
உயிர்கள்	3-129, 6-199, 10-7, 24-121, 25-107, 109, 114, 30-62
பிறவிகள்	25-152
கிளவிகள்	21-143
ஆண்டுகள்	22-17
பொருள்கள்	27-110, 112, 188, 190, 30-219, 223, 252

இதைப்போன்றே இவ்விகுதி சங்கமருவிய இலக்கியங்களில் ஓரிரு இடங்களில் உயர்திணையில் வர மணிமேகலையில் ஏராளமாக உள்ளன என்பார்.

வாதிகள்	1-60	புத்தர்கள்	30-14
செட்டிகள்	25-165	என்போர்கள்	21-95, 97 99-100
அந்தரசாரிகள்	28-69		
முனிகள்	28-114	எங்கள்	25-53
சமணீர்காள்	5-52	யாங்கள்	
கணினார்கள்	21-128	தங்கள்	28-64

11. -ஆல் கருவி வேற்றுமை உருபு

முன்பழந்தமிழில் கருவி வேற்றுமை உருபாக -ஆன் வர மணிமேகலையில் -ஆல் உருபாக மாறியதைச் சுட்டிக் காட்டுவார் இவர்.

மயனால்	6-201
அருளால்	21-155
செவியால்	27-15
முறைமையால்	29-86
கண்ணால்	27-15
மெய்யால்	27-17
வருதலால்	29-70

12. -இன் நீக்க வேற்றுமை உருபு

இதைப் போன்றே முன்பழந்தமிழில் நீக்க வேற்றுமை உருபாக -இன் வர மணிமேகலையில் -இல்- வருவதாகக் கூறுவார் (மணி 29-79).

13. சில புதிய சொல்லுருபுகள்

பொருட்டு, தொட்டு, பிற்பாடு ஆகிய சொல்லுருபுகள் மணி மேகலையிலேயே காணப்படுவதாகக் கூறிச் சில எடுத்துக்காட்டுக் களைத் தருவார்.

தம் பொருட்டு	21-63
அவன் பொருட்டால்	14-53
இவள் பொருட்டால்	22-162
நின் பொருட்டால்	29-36
அதன் பிற்பாடு	12-78
அந்நாள் தொட்டு	11-12

14. தன், தம் அசைச் சொற்கள்

தன், தம் ஆகிய சாரியைகள் சங்க இலக்கியங்களில் படர்க் கையில் மட்டுமே வர மணிமேகலையில் தன்மையிலும் முன்னிலை யிலும் வருவதை எடுத்துக்காட்டுவார் இவர்.

கொய்வேன்தனை	3-32
உன்றன்	18-169

15. -கிறு-, -கின்று- நிகழ்கால இடைநிலைகள்

இதைப்போன்றே -கிறு- -கின்று- ஆகிய நிகழ்கால இடை நிலைகள் பரிபாடலில் ஒரு இடத்தில் வர மணிமேகலையில் பல இடங்களில் வருகின்றன எனச் சுட்டிக்காட்டுவார்.

உன்றகின்றேன்	17-63
விளம்புகின்ற	17-106
என்கின்ற	29-294
சாதிக்கிற	29-299
ஆள்கின்றோர்	26-18
புலப்படுகின்ற	27-111
ஆகின்றது	29-322

16. எல்லாம் என்ற பதிலிடு பெயர்

எல்லாம் என்ற பதிலிடுபெயர் முன்பழந்தமிழில் உயர்திணையோடு வராமலிருக்க மணிமேகலையில் புதிதாக வருவதாகக் கூறி

மக்கட் கெல்லாம்	9-24
வாழ்வோர்க்கெல்லாம்	11-95
அந்தணர் எல்லாம்	13-40
மடந்தையர்க் கெல்லாம்	18-6
மாதவர் எல்லாம்	22-6
பெயர்வோர்க் கெல்லாம்	25-40

ஆகிய எடுத்துக்காட்டுக்களைத் தருவார்.

17. -ஆல், -இல் -ஏல் நிபந்தனை எச்ச விகுதிகள்

நிபந்தனை எச்சமாக முன்பழந்தமிழில் செயின் வாய்பாட்டுச் சொற்கள் வர மணிமேகலையிலோ செய்தால், செயில், செய்தியேல் ஆகிய வாய்பாட்டுச் சொற்களும் காணப்படுகின்றன.

செய்தால்

கண்டால்	3-24, 101	புக்கால்	6-24
போனால்	6-158, 21-84	என்றால்	29-177, 236
பூண்டால்	25-326		

செயில்

அருளில்	6-154	காட்டில்	29-445
எனில்	14-94		
கழியில்	7-5		

செய்தியேல்

என்றியேல்	3 73

18. துணைவினைகள்

முன்பழந்தமிழில் துணைவினைகள் மிக அரிதாகக் காணப்பட மணிமேகலையில் அதிகமாக வருகின்றன.

செய்திடும்	1-22	ஓம்பிடும்	6-155
கேட்டருள்	6-31	நின்றிடின்	3-25
புரிந்திட்டனன்	26-28	அடைந்திட	28-145
ஆயிடின்	18-157		

19. நகர மெய் கெடல்

முன் பழந்தமிழில் நற்றிணை, பரிபாடல், கலித்தொகை, ஆகியவற்றில் உம் என்ற சொல் மட்டுமே காணப்பட மணிமேகலை யிலோ உன் அதிகமாக உள்ளது என்பர்.

உன் 2-17, 4-96, 14-35, 16-37, 119,18-171, 23-74 80, 24-92, 93, 7-27, 10-42, 43, 38, 48 ,68, 78, 1-46, 10-46' 4, 11-63, 67, 21-18, 108, 22-71, 129 18-169, 23-102, 16-113, 68, 25-100 14-144, 145.

உம். 26-39

20. யகர மெய் கெடல்

யார், யாண்டு, யானை ஆகிய சொற்கள் பின்பழந்தமிழில் யகர மெய் கெட்டு வரத் துவங்கின எனக் கூறி

ஆர் 4-95, 5-56, 6-146, 17-80, 21-136, 24-33,

ஆண்டு 14-55, 17-38, 39, 41, 45, 20-25, 22-17, 129, 24-100,25-101.

ஆனை 20-35

ஆகிய எடுத்துக் காட்டுகளைத் தருவார்.

21. யகரம் எகரமாதல்

யாங்கு என்னும் முன்பழந்தமிழ்ச் சொல் பின்பழந்தமிழில் எங்கு என்று மாறிவிடுவதாகக் கூறுவார். (6-18, 191; 27-10, 187, 226, 231; 28-17; 29-233, 251)

22. நெடில் குறிலாதல்

மேலும் இவர் ஆங்கு, ஈங்கு ஆகிய முன்பழந்தமிழ் சொற் கள் மணிமேகலையில் அங்கு, இங்கு என வருவதாகக் கூறி எடுத்துக் காட்டுகள் தந்து செல்வார்.

அங்கு 6 26, 14-84, 18 83, 19-9, 21-8, 25-185,
26-18, 27-32, 28-119, 220,

இங்கு 4-104, 20-123 21-107, 23-128, 25-10, 27-221.

23. அந்த, இந்த ஆகிய சுட்டுக்கள்

இவை மணிமேலையில் மட்டுமே காணப்படுவதாகக் கூறிக் கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தந்து செல்வார்.

இந்த	22-155, 26-63, 285 8-198
அந்த	17-34, 23-61, 28-85, 29 30

24. 'ன்' இறந்தகால இடைநிலை

முன் பழந்தமிழில் இறந்தகாலம் காட்டும் இடைநிலையான -இன்- மணிமேகலையில் -ன்- என மாறி வருவதற்குக் கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைத் தந்து செல்கிறார்.

போனது	5-89, 30-41
போனார்	16-100
போனால்	6-158, 21-84
போன	30-2
ஆன	29-56, 422, 423, 262
ஆனது	27-209, 210, 17-37
ஆனவற்றை	34-161

25. ஆக, ஆ வாதல்

மணிமேகலையில் 'ஆக' என்னும் செயவென் எச்சச் சொல் ஆ என மாறி வருவதாகக் கூறிக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக் களைத் தருவார்.

வறிதரா	1-41
மெழுகா	19-115

முழவா	4-12
இலையா	29-105
ஆறா	6-211 இ 26-1
வரைப்பா	27-137
ஏதுவா	10-49
அணித்தா	29-9
சார்வா	30-105, 106, 107

26. போழ்து, போது

முன் பழந்தமிழ் வடிவமான பொழுது போழ்து, போது என மணிமேகலையில் வருவதாகக் குறிப்பிடுவார் (மணி 9-20, 27-148).

27. எண்ணுப் பெயர்களுடன் -ஆம் விகுதி

எண்ணுப் பெயர்களுடன் -ஆம் விகுதியை இணைத்துக் கூறும் வழக்கு மணிமேகலையில் பரவலாகக் காணப்படுகிறது என்பார் கந்தசாமி.

இரண்டாம் கண்டம்	30-137
நான்காம் கண்டம்	30-145
மூன்றாம் கண்டம்	30-141
இரண்டாம் சந்தி	30-150
மூன்றாம் சந்தி	30-152

இன்னும் இதுபோன்ற சில செய்திகளைத்தந்து மணிமேகலையின் காலத்தை நிர்ணயிப்பார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது எனக் குறிப்பிடுவார்.

3. 4. 2. 3 வ. சுப. மாணிக்கம் தரும் மொழிநிலைக் கூறுகள்

வ. சுப. மாணிக்கம் 'மணிமேகலை மொழியியல்' என்ற தலைப்பில் (1979) பதினேழு மொழிக்கூறுகளைத் தந்து மணிமேகலையில் காணப்படும் புதிய மொழிக்கூறுகளை ஆராய்வார்.

1. மொழிமுதல் யகர மெய் கேடு, 2. சகர முதற்சொற்கள் 3. சைமுதற் சொற்கள் 4. -கள் என்ற இடைச்சொல் 5. நிகழ் காலம் காட்டும் -ஆநின்று-, -கின்று-, -கிறு- இடைநிலைகள் 6. ஈறு நீண்ட எதிர்மறைப்பெயரெச்சம் 7. தன்மை எதிர்காலம் 8. செய்யும் என்னும் முன்னிலைப் பன்மை 9. ஐயநடைமுற்று 10. இந்த, அந்த என்னும் சுட்டுகள் 11. உன், உம் வேற்றுமை அடிகள் 12. தான், தாம், தன், தம் என்ற அசைகள் 13. இடு என்னும் வினைச்சொல் 14. ஆங்கு, ஈங்கு ஆகிய சொற்கள் அசையாக வருதல் 15. அல்லது என்னும் வினையெச்சம் 16. சில சொல்லாக்கங்கள் போன்றவற்றைத் தந்து நிற்பார்.

இவற்றுள் சில வையாபுரிப்பிள்ளையாலும் (10, 11, 12) பல கந்தசாமியாலும் 1, 2, 3, 4, 5, 7, 8, 10, 11, 12) முன்னரேசுட்டிக்காட்டப் பட்டவை. சில புதிதாகத் தரப்படுபவை. இவை முன்னரே குறிக்கப் பட்டுள்ளன.

தன்மை எதிர்காலம் என்ற தலைப்பில் செய்கேன், படர்கேன், உரைக்கேன் என வரும் ககர இடை நிலைகளைக் கொண்ட சொற்களைத் தந்து நிற்பார். எச்சநடை அல்லது ஐயநடை முற்றாக

''ஓடலும் ஓடும், ஒரு சிறை யொதுங்கி
நீடலும் நீடும்'' (3-112)

என்பதைத் தந்து இத்தகைய ஆட்சி சிலப்பதிகாரத்திலும் காணப் படும் என்று குறிப்பிடுவார்.

ஆனால்

'புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை' 21. 83

'துவதிகன் உரைக்கும் சொல்லலும் சொல்லுவேன்' 21. 145

என்பன போன்று படர்க்கை வாய்பாடு முன்னிலையாகவும் தன்மை யாகவும் உருப்பெற்றுள்ளது மணிமேகலையில்தான் காணப்படு கிறது என்பார்.

மணிமேகலையில் புதியதாகக் காணப்படும் இலக்கணப் பாங்கு இடு என்னும் வினையாட்சி என்று கூறி இது சில இடங்களில் வைத்தல், எரிதல் என்ற பொருளில் முழுவினையாகவும் இன்னும் சில இடங்களில் துணைவினையாகவும் வரும் என்பார்.

புடைத்துணும் பூதமும் பொருந்தா தாயிடும் 1-24

இலங்கிதழ் மாலையை இட்டு நீராட்ட 3-10

படையிட்டு நடுங்கும் காமன் 3-23

பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின் 3-25

ஆங்கவர் அடிக்கிடின் அவரடி தானுறும்
நீங்காது யாங்கணும் நினைப்பில ராயிடின் 3-71

கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும் 7-8

கிராமம் எங்கணும் கடிஞையிற் கல்லிட 13-103

ஆங்கு, ஈங்கு என்ற சொற்கள் சுட்டிடைப் பெயராக வரும் இடங்கள் மிகச்சில என்று கூறிப் பல இடங்களில் இவை அசையாக வருகின்றன என எடுத்துக்காட்டுக்கள் தருவார்.

ஆங்கவள் ஆங்கவன் கூறியதுரைத்தலும் 6-16

ஈங்கிதன் காரணம் என்னையோவென
ஆங்கதன் காரணம் அறியக் கூறுவன் 6-33

ஆங்கது கொடுத்தாங்கு அந்தரம் எழுந்து 10-92

ஈங்கிவன்தன்னையும் ஈமத் தேற்றி 22-213

இதைப் போன்றே அல்லது என்ற குறிப்பு வினையெச்சமும் மணிமேகலையில் அன்றி என்ற பொருளில் வருவதை எடுத்துக் காட்டுவார்.

ஆன்றவரல்லது பலர் தொகுபு உரைக்கும் 2-34

அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும் 2-56

மண்ணவர் விழையார் வானவ ரல்லது 3-48

வாங்குநர் கையகம் வருத்துத லல்லது 11-49

வணங்குத லல்லது வாழ்த்தல் 11-71

சிறந்தோர்க் கல்லது செவ்வனம் சுரவாது 11-121

3.4.2.4 இன்னும் சில கூறுகள்

இன்னும் சில கூறுகளையும் நாம் மணிமேகலையில் காண முடியும். அப்படி, இப்படி, எப்படித்து என்ற சொல்லாட்சிகள் முதன் முதலாக மணிமேகலையில் மட்டுமே காணப்படுகின்றன.

இதைப் போன்றே இப்போது என்ற சொல்லாட்சியும் மணி மேகலையில்தான் உள்ளது.

3. 4. 2. 5. மேற்கூறிய மொழிக் கூறுகளின் தன்மை

இவர்கள் சுட்டிச் செல்லும் ஒரு சில கூறுகள் பிந்திய கூறுகளே அல்ல. இன்னும் சில கூறுகளோ முன்பழந்தமிழ் நூல்களில் அரிதாகக் காணப்படச் சிலம்பு, மணிமேகலை போன்றவற்றில் அதிகமாக வருபவை. இன்னும் சிலவோ சிலம்பு, மணிமேகலையில் காணப்படுபவை. இன்னும் ஓரிரு கூறுகளோ மணிமேகலையில் மட்டுமே வருபவை.

3.4.2.6 பழந்தமிழ்க் கூறுகள்

முன்னர்க் குறிப்பிட்டபடி தன்மை ஒருமை காட்டும்-அன் விகுதி முன் பழந்தமிழ் நூல்களிலேயே அதிகமாகக் காணப்படுவது இங்கு (பார்க்க, பக்கம் 65) நினைவு கூரத்தக்கது.

இதைப்போன்றே நீர் என்ற சொல்லும் பலவேறு முன்பழந் தமிழ் இலக்கியங்களில் வருவது முன்னரே (பக். 31) சுட்டிக் காட்டப்பட்டது.

இது போன்றே ஆளன், ஆட்டி, ஆளர் ஆகிய விகுதிகளும் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநா னூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களில் எல்லாம் காணப்படுகின்றன (பார்க்க: அகத்தியலிங்கம், ச. 1982).

இவற்றைப்போன்றே 'கொண்ம்' போன்ற முன்னிலைச் சொற்களும், கந்தசாமி குறிப்பிடுவது போலப் பத்துப்பாட்டிலும் பரிபாடலிலும் மட்டுமின்றிப் பதிற்றுப்பத்து (1) நற்றிணை (1) புறம் (5) ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன. புறநானூற்றில் மட்டுமே 5 இடங்களில் வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

தம்	பதி 85-4
சென்ம்	நற் 71-3
கொண்ம்	புறம் 152-29
வம்	பத்து 2-101

துணைவினைகளும் மணிமேகலையில் மட்டுமன்றி பிற இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன. (பார்க்க: அகத்தியலிங்கம் 1982).

'எல்லாம்' என்ற பதிலிடு பெயரும் உயர்திணைச் சொற்களுக்குப்பின் பிற இலக்கியங்களிலும் வருதல் காணலாம். அகம் (1), குறு (1), புறம் (5), பத்து (2), கலி (6), குறள் (6), சிலம்பு, (10) ஆகிய நூல்களிலும் இது உள்ளது (பார்க்க மேற்படி 1982) அல்லது என்று சொல் குறிப்பு வினையெச்சமாக 'அன்றி' என்ற பொருளில் மணிமேகலையில் பயின்று வருகின்றது என்பார் வ. சுப. ஆனால் இப்பொருளிலேயே இச்சொல் தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலேயே காணக்கிடக்கின்றது.

ஆவோடல்லது யகர முதலாது — எழுத்து 65

சார்ந்துவரி னல்லது தமக்கியல்பில... — எழுத்து 101

ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது
சொல் 44

..............கம்பலை யல்லது
பூசலறியா .... பதி. 27-14

செந்நீர்ப் பூச லல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே பதி. 8-13

......எண்ணுநர் அல்லதுகதிர்மருங் கறியா
அகம். 43-6

இரைதேர் வெண்குரு கல்ல தியாவதும் குறு. 113-3

போன்ற உதாரணங்கள் இப்பண்பைக் காட்டும்.

இதுபோன்றே இடு' என்ற வினையும் வைத்தல் போன்ற பொருளில் பல இலக்கியங்களிலும் காணக் கிடக்கின்றது.

புனலாடு மகளிரிட்ட வொள்ளிழை ஐங். 100-1

வள்ளத் திடும்பால்.......... புறம் 328-7

போன்ற உதாரணங்கள் சங்க இலக்கியங்களில் உள்ளன. துணை வினையாகவும் இது

வளர்ந்திட்ட	நற் 344 - 1
பிளந்திட்ட	நற் 107 - 1
அணிந்திடு	நற் 395-7
கிளைத்திட்ட	புறம் 325 - 4

போன்ற இடங்களில் வந்துள்ளது.

3.4.2.7. வரவு எண்ணிக்கையில் கூடி வரும் கூறுகள்

இன்னும் சில கூறுகளோ சங்க இலக்கியங்களில் அரிதாக வர மணிமேகலையில் சிறிது அதிகமாக வருபவை.

நான் என்ற பதிலிடுபெயர் பரிபாடலில் (6 – 87) முதன்முதலாகக் காணப்படுகிறது. இதே நிலையைத்தான் 'உன்' என்ற சொல்லிலும் காணுகிறோம். இது அகநானூற்றில் ஒரு இடத்தில் (222 - 2) வருவதைக் காணலாம். சிலம்பிலும் (6) மணிமேகலையிலும் (32) கூடுதலாக வரக் காண்கிறோம்.

—ஓம் ஈற்று தன்மைப் பன்மைச் சொல்லும் முன்னரே குறிப்பிட்டபடி ஐங்குறுநூறு (1) புறநானூறு (1) ஆகிய நூல்களில் ஒவ்வொரு இடத்தில் வந்துள்ளது. சிலம்பில் பத்து இடங்களிலும் மணிமேகலையில் இரு இடங்களிலும் வருதல் காணலாம்.

செய்தால் வாய்பாட்டு வினையெச்சமும் ஐங்குறுநூறு (1) புறம் (1) பரிபாடல் (2) கலித்தொகை (5) குறள் (2 சிலம்பு (13) மணி (9) ஆகிய நூல்களில் வந்துள்ளன.

என்றால்	ஐங்	248 - 3
கண்டால்	புறம்	390 - 25
மடுத்தால்	பரி	20 – 42
கேட்டால்	கலி	107 – 13
கண்டால்	குறள்	1246
உரைத்தால்	சிலம்பு	11 - 22

'ன்' இறந்தகால இடைநிலையும் தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது) சொன்ன (தொல். 1037) (சங்கஇலக்கியங்களில்) ஆனீர் என்ற சொல்லிலும் இது காணக்கிடக்கிறது. ஆனீர் (ஐங். 304-2, குறு. 178-4) ஆனால் சிலம்பிலும், மணிமேகலையிலும் அதிக எண்ணிக்கையில் வரக்காணலாம்.

சைகாரச் சொல்லும் பரிபாடலில் ஒரு இடத்தில் காணப் படுகிறது.

சையம் பரி 11-14

மணிமேகலையில் இவ்வகைச் சொற்கள் 3 இடங்களில் வருகின்றன.

அங்கு, இங்கு ஆகிய சொற்களும் பிற இலக்கியங்களில் ஓரிரு இடங்களிலும், சிலம்பு, மணிமேகலையில் வரவு எண்ணிக்கையில் கூடியும் வரும் சொற்கள்.

அங்கு பத்து 8 – 97

கலி 145 – 46

சிலம்பு 6-25, 24-1-6, 29-1-10, 19 1, 30-39

மணி 6-26, 14-86, 18-83, 21-8, 23- 7, 25-185, 26-18, 27-32, 28-116, 210

இங்கு	அகம்	85-3
	குறு	175-5
	கலி	47-10
	சிலம்பு	2-72, 9-76, 13-54, 15-110, 20-60
	மணி	4-104, 20-89, 123, 21-107, 23-128 25-10, 27-221.

யகர மெய் கெடலும் நற்றிணையிலும் (ஆர் 119-4) பரி பாடலிலும் (ஆறு 11-50, 15-22) வருவது குறிப்பிடத்தக்கது.

இவற்றைப் போன்றே ஆக என்பது ஆ என வருவதையும் பிற இலக்கியங்களில் காணமுடியும்.

கரும்பு குணிலா மாங்கனி யுதிர்க்கும்	ஐங் 87-2
வரம்பு அணையாத் துயல்வர	அகம் 13-20
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே	அகம் 265-23
மாயச் செலவாச் செத்து	குறு 325-2
தென்குமரி வடபெருங்கல் குணகுட கடலா வெல்லை	புறம் 17-2, பத்து 6-71
இருநிலம் திகிரியா	புறம் 228-14
...... பெருமலை மண்ணா	புறம் 228-15
வேர் முதலா......	புறம் 229-3
களி றெருதா......	புறம் 342-13
நசை துணையா......	புறம் 393-7
...... இலை சுளகா	கலி 41-2

போகலும் போகுவை

போன்ற ஆட்சி மணிமேகலையில் மட்டுமே வருவதாக வ. சுப. குறிப்பிடுகிறார். இவ்வகை முற்றைக் கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களிலும் காண முடியும்.

உண்ணலும் உண்ணேன்	கலி 22-6
வாழலும் வாழேன்	கலி 23-7
நல்கலும் நல்குவர்	குறு 37-1
நினைத்தலும் நினைதிரோ	நற் 318-1

மேலே காட்டியவற்றில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய வற்றில் ஐய நடை வந்திருப்பதைக் காணலாம்.

மேலும்

ஓடலும் ஓடும்

போன்ற சொல்லாட்சி சிலம்பிலும் மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுகின்றது என்பார். ஆனால்

அழுதலும் அழூ உம் கலி 147-10

எனக் கலித்தொகையிலும் வருதல் காண்க.

3. 4. 2. 8 சிலப்பதிகார, மணிமேகலைக் கூறுகள்

இன்னும் சில கூறுகளோ சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டிலும் மட்டும் காணப்படுபவை.

1. எங்கு

இச்சொல் சிலம்பு, மணிமேகலை இரண்டில் மட்டுமே காணப் படுகின்றது.

எங்கு சிலம்பு 19-69, 30-111
மணி 6-187, 191

2. இந்த

இதுவும் சிலம்பிலும் மணிமேகலையிலும் மட்டுமே வருகிறது.

இந்த	சிலம்பு	15-107, 21-51
	மணி	6-165, 13-62, 15-107, 21-51, 22-155, 26-63, 27-285, 28-198,

3. தன்மை, முன்னிலையில் 'தன்' அசைச்சொல்

என்றன் மேல்	சிலம்பு	9-48
என்றன் வஞ்சியொடு	சிலம்பு	25-135
உன்றன் அருந்துயர்	சிலம்பு	15-68
என்றன் வான்பதிதன்னுள்	மணி	1-6
என்றன் பழவினை	மணி	17-14
என்றன் உள்ளகம் புகுந்து	மணி	18-120
உன்றனுக்கு	மணி	16-113
உன்றன் கோட்டம்	மணி	18-169

3.4.2.9. மணிமேகலைக் கூறுகள்

மேலும் சில கூறுகளோ மணிமேகலையில் மட்டுமே காணப் படுபவை.

1. அந்த என்ற சுட்டு

அந்த என்னும் சுட்டுச் சொல் மணிமேகலையில் மட்டுமே காணப்படுகிறது. எனினும் இந்த என்பது சிலம்பில் காணப் படுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

அந்த மணி 17-34, 23-61, 28-55, 26-30

2. அப்படி, இப்படி ஆகிய சொற்கள்

அப்படி, இப்படி ஆகிய சொற்களும் மணிமேகலையில்தான் முதன்முதல் காணப்படுகின்றன.

அப்படி	மணி 27-189, 29-400, 409
இப்படி	மணி 29-469, 30-178
எப்படித்து	மணி 27-88

இப்போது என்ற சொல்

இப்போது என்ற சொல்லும் மணிமேகலையில்தான் முதன் முதலில் காணப்படுகிறது (மணி 27-85).

கந்தசாமி சுட்டிக்காட்டுவது போல் -கிறு- நிகழ்கால இடை நிலை மணிமேகலையில் மட்டுமே காணப்படும் ஒன்றாகும். இது போன்றே காரர் என்ற விகுதியும் மணிமேகலையில் மட்டுமே காணப்படுகிறது.

இந்நிலையில் மணிமேகலை பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்று என்பதும், சிலப்பதிகாரத்தை அடுத்துத் தோன்றியது என்பதும் நன்குப் புலனாகும். சிலப்பதிகாரத்தில் மட்டும் காணப்படும் கூறுகள் மணிமேகலையில் காணப்படா விட்டாலும் அது தற் செயல் விடுப்பினால் ஏற்பட்டதாகும்.

பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படும் மேலே குறிப்பிட்ட கூறுகள் ஒவ்வொரு தனிநூலின் விசேடக்கூறுகள் எனக் கருதுவதைவிட பின்பழந்தமிழ்க் கூறுகள் எனக் கருதுவதே பொருத்தமாகும். ஒரு நூலில் காணப் படும் புதிய கூறுகளில் பல பிற நூல்களிலும் காணப்படுகின்றன. சில கூறுகளோ பிற நூல்களில் காணப்படும் இன்னொரு கூறுடன் பொருந்த வைத்து எண்ணற்பாலன. எடுத்துக்காட்டாக மணி மேகலையில் காணப்படும் 'அந்த' என்ற சுட்டு 'இந்த' என்ற சுட்டுடன் பொருந்துவது. ஆனால் சிலப்பில் 'அந்த' வரவில்லை. இந்நிலையில் இவற்றையெல்லாம் பின்பழந்தமிழ்க் கூறு எனக் கருதுவது பொருத்தமாகும்.

4. பின்பழந்தமிழ் இலக்கியங்களின் வரிசைமுறை

எனவே இதுகாறும் கூறியவற்றால் பின் பழந்தமிழ் இலக்கியங் களை

பரிபாடல்
கலித்தொகை
திருக்குறள்
சிலப்பதிகாரம்
மணிமேகலை

என வரிசைப்படுத்துவது பொருத்தமாகும்.

துணைநூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1982, ''முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும்'' மொழியியல் தொகுதி 6. எண் 2, அண்ணாமலைநகர்.

அகநானூறு 1968, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,

அருணாசலம், ப. 1968, குறளின் செய்தி, பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

இராசமாணிக்கம், மா. 1963, தமிழ் மொழி—இலக்கிய வரலாறு, பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

இலட்சுமணசாமி, கொ. 1979, ''திருக்குறளும் சங்க இலக்கியங்களும்'' திருக்குறட் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், 1957, ஸ்ரீ தியாகராசவிலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1903)

ஐங்குறுநூறு, 1966, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

கந்தசாமி சோ. ந. 1972, பரிபாடலின் காலம், அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர்.

கலித்தொகை, 1969, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

திருத்தம்: கட்டுரையின் முதல் பக்கம் முதல் வரியில் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் எனத் திருத்திக் கொள்ளவும்.

குறுந்தொகை, 1962, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை. (முதல் பதிப்பு 1937).

——— 1965, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

சஞ்சீவி, ந. 1973, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

சாரங்கபாணி, இரா. 1972, பரிபாடல் திறன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

சிலப்பதிகாரம் 1968, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதற் பதிப்பு (1892).

——— 1972, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

சோமசுந்தர பாரதி, எஸ். 1934, திருவள்ளுவர், மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு, மதுரை.

திருக்குறள் 1967, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம் மூலம் 1967, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நற்றிணை 1976, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பத்துப்பாட்டு 1961, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதற் பதிப்பு 1889).

——— 1971, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும் 1957, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1904)

பதிற்றுப்பத்து மூலமும் விளக்க உரையும் 1968, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

பரிபாடல் 1980, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை (முதல் பதிப்பு 1918).

——— 1969, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

புறநானூறு 1956, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை (முதல் பதிப்பு 1894).

——— 1973, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

மணிமேகலை 1975, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மாணிக்கம், வ. சுப. 1976 ''சிலப்பதிகார மொழிக்கூறுகள்'' சிலப்பதிகாரச் சிந்தனைகள், அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1979 ''மணிமேகலை மொழியியல்'' மணிமேகலைச் சிந்தனைகள், அண்ணாமலைப்பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1952 தமிழ்ச்சுடர்மணிகள் பாரிநிலையம், பிராட்வே, சென்னை. (முதல் பதிப்பு 1949)

——— 1952 இலக்கியதீபம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

——— (n. d.) காவியகாலம், பாரிநிலையம், பிராட்வே, சென்னை.

Arunachalam, M. 1981, *Peeps into Tamil Literature 2 A Primer of Tamil Literature*, Gandhi Vidyalayam, Tiruchitrambalam.

Kandaswamy, S. N. 1978, *Buddhism as Expounded in Manimekalai*, Annamalai University, Aunamalainagar.

Subramoniam, V. I. 1973 "*The Chronology of Sangam Literature*" *Proceedings of the Third International Conference Seminar, Pondichery.*

Meenakshisundaran, T. P. 1965, *A History of Tamil Literature*, Annamalai University, Annamalainagar.

——— 1965 *A History of Tamil Language*, Deccan College. Poona.

Vaiyapurippillai, S. 1956. *History of Tamil Language and Literature*, Madras.

முதல் தமிழ் அகராதி

தொல்காப்பியம் 'மொழி விஞ்ஞானமும்' 'சமூக வாழ்வியல் விஞ்ஞானமும்' அடங்கிய ஒரு தலை நூலாகும். அதன் முதல் பிரிவாகிய எழுத்ததிகாரத்தில் எழுத்திலக்கணமும் இரண்டாவது பிரிவாகிய சொல்லதிகாரத்தில் சொல்லிலக்கணமும் இறுதிப் பிரிவாகிய பொருளதிகாரத்தில் செய்யுளிலக்கணமும் அணியிலக்கணமும் வாழ்வியல் பொருளிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சொல்லதிகாரத்திலுள்ள 'உரியியல்' என்னும் பிரிவில் 120 சொற்கட்குப் பொருள் கூறியுள்ளார் ஆசிரியர் தொல்காப்பியனார். அதே அதிகாரத்திலுள்ள 'இடையியல்' என்னும் பகுதியிலும் ஒரு சார் சொற்கட்கு உரிய பொருள்கள் தரப்பட்டுள்ளன. பொருளதிகாரத்திலுள்ள 'மரபியல்' என்னும் பகுதியிலும் சொற்பொருள் அறிவிக்கும் கூறு அமைந்துள்ளது. இம்மூன்று இயல்களுக்குள்ளேயே உரியியலில்தான் முழுஅளவில் அகராதிக்கூறு அமைந்துள்ளது. எனவே இதனை 'முதல் தமிழ் அகராதி' எனலாம். ஆனால், தொல்காப்பியத்தில் பொருள் கூறப்பட்டுள்ள சொற்கள் இக்கால அகராதி போல் அகர வரிசையில் இல்லை என்பது ஈண்டு நினைவில் வைக்கற்பாலது.

—சுந்தர சண்முகனார்

தமிழ் அகராதிக் கலை பக். 6 (1971)

கழகவெளியீடு, சென்னை.

மொழியியல் 6, 3, (1983)

லண்டன் மொழியியல் கோட்பாடு

செ. சண்முகன்
மைசூர் பல்கலைக்கழகம், மைசூர்

1. முகவுரை

ஜெ. ஆர். ஃபர்த் என்பவரல் வெளியிடப்பட்டதும், அவர் பின்னால் அவரது மாணவரான ஹேலிடே என்பவரால் சீர்திருத்தப் பட்டதுமான சில மொழிக்கருத்துகளும், மொழி விவரணை கருத்துகளும் 'லண்டன் மொழியியல் கோட்பாடு' அமையக் காரணமாயிருந்தன. ஃபர்த்தின் மொழியியல் கொள்கைகள் தோன்ற முக்கியக் காரணமாக இருந்தவர்களில் மேலினோவ்ஸ்கி என்ற மானிடவியல் ஆராய்ச்சியாளரும் ஒருவர். ஃபர்த், மேலினோவ்ஸ்கி என்பவர்களின் முன்னால் லண்டனில் தோன்றிய மொழி ஆராய்ச்சியாளர்கள் மொழியின் ஒலி அமைப்புக் குறித்தும், அகராதி உருவாக்கம் குறித்தும் கூறியமையால் இவ்விரு ஆராய்ச்சி களும் 'லண்டன் மொழியியல் கோட்பாடு' வளர்ச்சியில் முக்கிய பங்கைப் பெற்றன என்பதில் ஐயமில்லை.

கிரேக்கர்கள் காலத்திலிருந்தே ''மொழி, என்பது எண்ணங்களை எடுத்துரைக்கப் பயன்படும் ஒரு கருவி'' என்ற கருத்து நிலையாக நின்று வருகிறது. 'மொழி' ஒரு செயலா? அல்லது ஒரு பொருளா? என்ற கேள்வி எழுவதுண்டு. சசூர் என்பார் 'மொழி' என்பதை ஒரு பொருள் என்றும், 'மொழியைப் பயன்படுத்தல்' ஒரு செயல் என்றும் கொண்டார். 'மொழி' என்ற சொல் பேச்சையும், அதன் அடிப்படையாக இருக்கும் மொழியையும் குறிக்கும் என்று கொண்டனர் சசூரின் பின்னால் வந்தவர்கள். மொழியைச் சமுதாயத்தில் நிலை பெற்றிருக்கும் ஒரு செயல் என விவரிப்பர் லண்டன் மொழியியலார். இதற்காகப் பல காரணங்களையும் சுட்டிக் காண்பிப்பர். மொழியைப் பயன்படுத்தும் எல்லா நேரங்களிலும் நாம் பிறருக்கு எண்ணங்களை வெளிப்படுத்த மட்டும் மொழியை உபயோகிப்பதில்லை. பிறரை, சில செயல்களைச் செய்யத் தூண்டுவதற்காகவும், நம் உடல் மற்றும் மனம்களில் ஏற்படும் சலனங்களைப் பிரதிபலிப்பதற்காகவும், பொழுதைப் போக்குவதற்காகவும் நாம் மொழியைப் பயன்படுத்துகிறோம். 'எண்ணங்களை வெளிப்படுத்த மட்டும் நாம் மொழியைப் பயன்படுத்துகிறோம்' என்ற கருத்து முழுமையானதல்ல.

மொழியைப் பயன்படுத்தும் முறை இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. பாடமொழி வேறு, பாட்டுமொழி வேறு. இடம், காலம், மனிதர், நோக்கம் இவைகளுக்கேற்ப மொழி வேறுபடுகிறது. லண்டன் மொழியியலார் மொழி மாறுபடும் விதம், மொழி மாறுபாட்டில் சூழ்நிலையின் தாக்கம் ஆகியவைகளைக் குறித்துப் பேசுவர்.

மக்கள் தங்களுக்கென சில செயல்களை வரையறுத்து, அதற்கு உருவம் கொடுத்து, அதன் வழி நின்று, நெறி தவறாது நடக்கும் போது அங்கே ஒரு 'சமுதாயம்' உருவாகிறது. ஒவ்வொரு சமுதாயமும் வேறொரு சமுதாயத்திலிருந்து வேறுபட்டது. ஒரு சமுதாயத்தில் உபயோகிக்கப்படும் மொழி அச்சமுதாயத்தின் அமைப்பைப் பிரதிபலிக்கும். ஒரு சமுதாயத்தினர் பயன்படுத்தும் மொழியிலுள்ள 'உறவு முறைச் சொற்கள்' அச்சமுதாயம் எவ்விதம் 'உறவு முறைகளை உருவாக்கியுள்ளது என்பதை வெளிப்படுத்தும். மொழி என்பது சமுதாயச் சூழ்நிலையின் ஒரு அங்கம். ஒரு சமு

தாயத்தில் பலவித பேச்சுச் சூழ்நிலைகள் தோன்றும், மீன்பிடி சூழ்நிலை, ஆஸ்பத்திரி சூழ்நிலை, வகுப்புச் சூழ்நிலை முதலியவை சிறு சூழ்நிலைகள் எனலாம்.

இச்சூழ்நிலைகளில் பேச்சும் வேறுபட்டுக் காணப்படும். ஆசிரியர்-மாணவர் பேச்சுவழக்குகள், டாக்டர்-நோயாளி, கணவன்-மனைவி பேச்சு வழக்குகளிலிருந்து மாறுபட்டவை. பேச்சுச் சூழல்களின் வேறுபாட்டால் பேச்சு வகைகளும், பேச்சுவழக்கு வேற்றுமைகளும் உருவாகின்றன. சமுதாயச்சூழலில் பேச்சுச்சூழல்கள் அடங்குகின்றன. பேச்சுச்சூழல்களில் வாக்கியங்கள், சொற்றொடர்கள் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. வாக்கியங்கள் சொற்களின் கோர்வையால் ஆனவை. சொற்களில் உருபன்களின் கோர்வையைக் காணலாம். உருபன்களில் ஒலியின் கோர்வையைக் காணலாம். மேற்கூறியதிலிருந்து நாம், ஒலியை உருபனின் அங்கம் எனவும், உருபனைச் சொல்லின் அங்கமெனவும், சொல்லைச் சொற்றொடரின் அங்கமெனவும், சொற்றொடரை வாக்கியங்களின் அங்கம் எனவும், வாக்கியங்களைப் பேச்சுச்சூழலின் அங்கம் எனவும், பேச்சுச்சூழலைச் சமுதாயச்சூழ்நிலையின் அங்கம் எனவும் கொள்ளமுடியும். மொழியை விளக்க விரும்புவோர் மொழிக்கூறுகளுக்கும் (ஒலி, உருபன், சொல், வாக்கியம்), மொழிக்கூறுகள் தோன்றும் சூழ்நிலைகளுக்கும் இடையே தோன்றும் தொடர்புகளை விளக்கவேண்டும் என்பர் லண்டன் மொழியியலார். இதை அவர்கள் ''சூழ்நிலைவிளக்க முறை'' என்ற தலைப்பின் கீழ் கொண்டு வருவார்கள்

'மொழிக்கென ஒரு அமைப்பு இருக்கிறது. அந்த அமைப்பை விளக்குவதே மொழியியலின் குறிக்கோள்' என்பதனை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து எல்லா நாட்டு மொழியியலறிஞர்களும் ஏற்றுக் கொண்டனர். மொழிக்கென அமைந்த அமைப்பை விளக்க வேண்டுமென்றால் ஒரு மொழியில் காணப்படும் மொழிக்கூறுகளையும். அம்மொழிக்கூறுகளின் இடையே நிலவும் தொடர்புகளையும் விளக்கவேண்டும் என்பதை 'அமைப்பு மொழியியலார்' வலியுறுத்துவர். லண்டன் மொழியியலாரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். ஒலி, சொல். வாக்கியம்

முதலியவைகளை மொழிக்கூறாக ஏற்றுக்கொண்டனர். மொழிக் கூறுகள் இரண்டு வகையானத் தொடர்புகளைக் காட்டுகின்றன என்றும் கூறினர். அத்தகைய தொடர்புகளாவன 1. தொடர் நிலைத் தொடர்பு, 2. பெயற்சி நிலைத்தொடர்பு. தொடர்நிலைத் தொடர்பை'அமைப்புத் தொடர்பு'எனவும் பெயற்சி நிலைத்தொடர் பைத் ''தொகுப்புத் தொடர்பு' எனவும் அழைக்கலாம். மொழிக் கூறுகள் தொடர்நிலைத் தொடர்பில் நின்று பெருங்கூறுகளான 'கோர்வை'யை உண்டாக்கும். மொழிக்கூறுகள் பெயற்சி நிலைத் தொடர்பையும் காட்டும். பெயற்சி தொடர்பைக்காட்டும் எல்லா கூறு களையும் ஒன்றாக நிறுத்தி அவைகளைத் 'தொகுதி' என அழைக் கலாம். 'அடி' என்ற சொல் ஒரு 'கோர்வை'. இதில் அ, ட், இ என்ற ஒலிகள் தொடர்நிலையில் நிற்கின்றன. அடி, இடி, ஒடி என்ற சொற்களில் முதல் ஒலிகளான அ, இ, ஒ என்பன பெயற்சி நிலையில் நிற்கின்றன. ஆகவே அவை மூன்றும் ஒரு தொகுதியின் கீழ் வருவன எனலாம். லண்டன் மொழியியலார் மொழியின் அமைப்பை விளக்க முயல்வர். அவர்கள் சிலமொழிக் கூறுகளை யும், அவை காட்டும் அமைப்பு, தொடர்புகளையும் விளக்குவர்.

மொழி சமுதாயச்சூழலின் அங்கமாகத் திகழும். சமுதாயச் சூழல்கள் வேறுபட்டுக் காணப்படுவதால் மொழிகளும் வேறுபட்டே காணப்படும். ஒரு மொழியின் இலக்கணத்தைப் படைக்கும் போது, அம்மொழி எவ்விதம் அதன் சமுதாயச்சூழலில் அங்கம் வகிக்கிறது, நிலைபெறுகிறது என்பதை மனதில் கொண்டு இலக்கணம் படைக்க வேண்டும். சூழ்நிலைகளைப் புறக்கணித்து, உலகில் காணப்படும் அத்தனை மொழிகளிலும் அமைப்பு ஒற்றுமை காணப்படும் என்ற கருத்தைக் கொண்டு இலக்கணம் படைக்கக் கூடாது. அதாவது மொழியியலார், மொழிக்கு 'பொதுஇலக்கணம்' படைக்காமல் 'தனி இலக்கணம்' படைக்கவேண்டும். தனி இலக்கணம் படைக்க வேண்டுமென்றால் மொழிநிலை பெறும் சமுதாயச்சூழலையும், மொழிக்கும், மொழிசார் சமுதாயச்சூழ லுக்கும் இடையே தோன்றும் தொடர்பையும் ஆராயவேண்டும். இத்தகைய கருத்துக்களை லண்டன் மொழியியலார் கொண்டிருந் தனர். இத்தகைய, ஆனால் முழுதும் ஒத்ததாயில்லாத சில கருத்துகளை ப்ளும்ஃபீல்டு, யெம்ஸ்லெவ் என்ற அறிஞர்களும்

கொண்டிருந்தனர். "ஒரு மொழியின் இலக்கணத்தை உருவாக்கும் போது அம்மொழி எவ்வித அமைப்பைக் காட்டுகிறதோ அதையே இலக்கணத்தார் வெளிக்கொணரவேண்டும். ஒரு வகையான அமைப்பு மொழியில் இருக்கக்கூடும் என்ற யூகத்தைப் பின்னணியாக வைத்தோ, அல்லது மொழியை ஆராய்வதன் முன்னர் மனதில் பதித்துவைத்திருக்கும் சில அமைப்புக்கருத்துகளை நிலைநாட்டும் நோக்கத்தோடோ இலக்கணத்தார் செயல்படக்கூடாது" என்பார் யெம்ஸ்லெவ் என்ற டென்மார்க் அறிஞர். பல இலக்கணத்தார், கிரேக்க, ரோம இலக்கணக்கோட்பாடுகளின் வழிநின்று, எல்லா மொழிகளிலும் பெயர், வினை முதலான இலக்கணக்கூறுகளை நிலை நாட்ட முற்படுவர். சிலமொழிகளில் கிரேக்க மொழியின் இலக்கணக்கூறுகளைப் போன்ற கூறுகளைக் காணமுடியாது. ப்ளும்ஃபீல்டு என்பாரும் ஒரு மொழியின் விவரணை அம்மொழி பேசுவோரிடமிருந்து பெறப்பட்ட மொழிக்குறிப்புகளைச் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்பார். ஒரு குறிப்பிட்ட அம்சம் மொழியில் இருக்கலாம் என்ற யூகத்தோடு மொழியை விவரிக்கக்கூடாது என்பார். சபீர் என்பாரும் மொழி அமைப்பில் சமுதாயம் முக்கிய பங்கை வகிக்கிறதென்பதை ஏற்றுக் கொள்வார். மேலும், ஒருமொழியின் சமுதாயச்சூழல் இன்னொரு மொழியின் சமுதாயச்சூழலிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதால், ஒருமொழியின் இலக்கணம் இன்னொரு இலக்கணத்திலிருந்து வேறுபட்டதாகவே இருக்கும் எனவும் கூறுவார். லண்டன் மொழியியலார் 'பொது இலக்கணம் படைத்தல், மொழிகளின் ஒற்றுமைகளைக் கண்டறிதல்' போன்ற கொள்கைகளை ஏற்காமல், 'தனி இலக்கணம் படைத்தல், மொழிகளின் வேற்றுமைகளைக் கண்டறிதல்' என்பனவற்றைத் தமது கொள்கையாகக் கொண்டனர்.

மேற்கூறிய "வேறுபாட்டு நோக்கு" லண்டன் மொழியியலாரின் விவரணையிலும் பிரதிபலிக்கிறது. மொழிகள் சமுதாயச் சூழல்களால் வேறுபடுகின்றன. ஒருமொழியின் கூறுகள் அவைகளின் முன்னாலும், பின்னாலும் நிற்கும் ஏனைய மொழிக்கூறுகளின் தாக்கத்தாலும், அவைகளைப் பெயற்சி செய்யும் வேறு மொழிக்கூறுகளின் நிலையாலும் வேறுபாடு அடைகிறது. ஆகவே மொழிக்கூறுகளின் "கோர்வையும்", "தொகுதியும்" மொழிக்

கூறு வேறுபாட்டில் முக்கிய பங்கைப் பெறுகின்றன. 'வேறுபாட்டு நோக்கு' காரணத்தால், ஒரு மொழிக்கூறை விளக்கும் போது மிக நுண்ணிய கோர்வை, தொகுதி சூழ்நிலைகளைத் தழுவிய விளக்கங்களை லண்டன் மொழியியலார் கொடுப்பார்கள். இதனைப் பின்வரும் 'ஒலி விவரணை' விளக்கும்.

'க்' என்ற ஒலி ஆங்கிலத்தில் ஒரு சொல்லின் முதல் ஒலியாக வரும் தன்மை கொண்டது. ஓரசைச் சொற்களை ஒலியின் சூழ்நிலை என்று எடுத்துக்கொண்டால், KT என்ற அசையில் 'க்' என்ற ஒலி 'ஈ' என்ற உயிரின் முன் வருகிறது. SKT 'சறுக்கு' என்ற அசையில் 'க்' என்ற ஒலி 'ஸ்' என்ற ஒலியின் பின்னாலும் 'ஈ' என்ற உயிரின் முன்னாலும் வருகிறது. இந்த இரண்டு 'க்' ஒலிகளும் (KT யின் 'க்' ஒலியும், SKT யின் 'க்' ஒலியும்) ஒன்றல்ல. ஏன்? KT என்ற அசையில் வரும் 'க்', 13 ஒலிகள் கொண்ட ஒரு ஒலித்தொகுதியின் அங்கம். அதாவது KT அசையில் வரும் 'க்' என்ற ஒலி நிற்கும் இடத்தில் பன்னிரெண்டு வேறு மெய்யொலிகளை இடமுடியும். SKT எனும் அசையில் வரும் 'க்' ஒலி ஆறு ஒலிகள் கொண்ட ஒரு ஒலித் தொகுதியின் ஒரு நபர். ஆகவே, ஒலியமைப்பில் (உருவாக்கம்) இரண்டு 'க்' ஒலிகளும் ஒன்றாயிருந்தாலும், பெயற்சி நிலைத் தொடர்பில் (பெயற்சி நிலை சூழ்நிலையில்) இரண்டும் வேறுபடுகின்றன. அவ்விரண்டு 'க்' ஒலிகளும் அவை நிற்கும் தொகுதியைப் பொறுத்து வேறுபடுகின்றன. இதிலிருந்து லண்டன் மொழியியலார் எவ்விதம் நுணுக்கமாக மொழிக்கூறு சூழ்நிலைகளை ஆராய்கிறார்கள் என்பது புலப்படும். வேறுபாட்டு நோக்குக் காரணமாக மிகநுண்ணிய தொகுதி, கோர்வை ஆகியனவற்றை ஆராய்வார்கள் லண்டன் மொழியியலார்.

இங்கு நாம், லண்டன் மொழியியல் வளர்ச்சியில் முக்கிய இடம் வகித்த மேலினோவ்ஸ்கி என்பாரின் கருத்துக்களையும், லண்டன் மொழியியல் கோட்பாடுகளை உருவாக்கிய ஃபர்த் என்பாரின் கருத்துக்களையும், லண்டன் மொழியியல் கோட்பாடுகளை ஒழுங்குபடுத்திய ஹேலிடே என்பாரின் கருத்துகளையும் விளக்குவோம்.

2. மேலினோவ்ஸ்கி [1884-1942]

'மொழி, சமுதாயச்சூழலில் அங்கம் வகிக்கும். மொழிக்கூறுகளின், மொழியின் பொருளை அறிய வேண்டுமென்றால் சமுதாயச் சூழல்களை ஆராய வேண்டும்' என்ற கருத்துக்களைப் பரவலாக கூறிச் சென்றார் மேலினோவ்ஸ்கி.

சமுதாயச் சூழலுக்கும், மொழிக்கும் இடையே நிலவும் தொடர்பைப்பற்றியும், மொழி விவரணையில் சமுதாய விவரணையையும் கொடுக்கவேண்டும் என்ற கொள்கையைப் பற்றியும் மேலினோவ்ஸ்கி தமது கட்டுரையான ''classificatory particles in kriwina'' [1920] என்பதில் விளக்கினார். க்ரிவினா என்ற மொழியின் ' பெயர் அடைக்கூறுகளை'' ஆராய்ந்த அவர், அவ் அடைக்கூறுகள் மிகுதியாக இருப்பதையும் அவைகளின் நிலையை இலக்கண ரீதியில விளக்க இயலாததையும் உணர்ந்தார். ஏன் ஒரு குறிப்பிட்ட அடைக்கூறு ஒரு குறிப்பிட்ட பெயர்ச்சொல்லுடனும் தோன்றுகிறது என்பதை இலக்கண ரீதியில் அவரால் விளக்கமுடியவில்லை. க்ரிவினா பேச்சுக்சூழல்களை ஆராய்ந்த அவர், பெயரடைக்கூறுகளுக்கும் சமுதாயச் சூழல்களுக்கும் தொடர்பு இருப்பதை உணர்ந்தார். பரிசு வழங்கும் சூழ்நிலைகளில் உபயோகிக்கப்படும் பெயர்ச்சொற்களுடன் ஒரு வகை அடைக்கூறும், வியாபாரச் சூழ்நிலையோடு தொடர்பாக வரும் பெயர்ச்சொற்களுடன் இன்னொரு வகை பெயரடைக்கூறும் வருவதைக் கண்டார். இதையே, பரவலாக ''இரண்டு மொழிக் கூறுகளின் இலக்கண, பொருள் சம்மந்தமான தொடர்புகள் சில வேளைகளில் சமுதாயச்சூழலின் வகையால் நிர்ணயிக்கப்படுகின்றன'' என்று கூறினார். இதை மிகைப்படுத்தி, பின் வரும் கருத்துக்களைக் கூறினார். ''ஒரு மொழியின் இலக்கண விளக்கம், பொருள் விளக்கத்தைத் தழுவ வேண்டும்; பொருள் விளக்கம், சமுதாய விளக்கத்தைத் தழுவவேண்டும். ஒரு மொழியை விவரிக்க வேண்டுமானால் முதலில் பரவலாக மொழி வழங்கும் சமுதாயச் சூழலை விளக்க வேண்டும். மேலும் இலக்கண, பொருள் அம்சங்கள் எவ்வித சமுதாயச் சூழ்நிலை அம்சங்களால் நிர்ணயிக்கப் படுகின்றன என்பதையும் விளக்கவேண்டும்''.

'Argonauts of the western Pacific' [மேலை பசிபிக்கின் அர்கோனாட்ஸ் 1922] என்ற புத்தகத்தில் வெளிப்படையாக, 'பொருளியல் கோட்பாடு' என்பது 'கலாச்சார, பண்பாட்டு கோட்பாடுகளின் ஒரு அங்கமே என்றார். கலாச்சாரக் கோட் பாடுகளை உருவாக்கும் முறைகளையும் தெளிவாக்கினார். ஒரு சமுதாயத்தின் அமைப்பு, அச்சமுதாயத்தின் பண்பாட்டு அமைப்பு, அந்த சமுதாயத்து மக்களின் செயல்கள், மக்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிடும் முறை, சமுதாயத்தில் வழங்கி வரும் கதைகள், வாய்ப்பாடல்கள், சுலோகங்கள் முதலியனவற்றைப் பற்றிய செய்திகளை முதலில் சேகரிக்கவேண்டும். இச்செய்தி களைத் தழுவி 'கலாச்சார கொள்கைகளை உருவாக்கவேண்டும். அத்தகைய கொள்கைகளின் கூட்டே 'கலாச்சாரக் கோட்பாடாக' நிலைபெறும்.

ஒரு சமுதாயத்தின் அங்கமான ஒருவனுக்கு வெளிப்படையாக அச்சமுதாய அமைப்புப் பற்றி சொல்லத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அச்சமுதாயத்தில் எதை, எப்படி, எங்கே செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்பதை அறிந்தவனாகவே இருப்பான். ஒவ்வொரு சமுதாயத்திலும் சில நெறிமுறைகள் 'விதி' களைப் போன்றிருக்கும். ஒரு சமுதாயத்தின் அங்கத்தினர் எல்லோரும் அத்தகைய நெறிமுறையை வழுவாது கடைபிடிப்பர். நெறிமுறைகளை அறிந்தவன் சமுதாய அங்கத்தினன் ஆகின்றான். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் இடையே அமைப்பில் வேறுபாடு காணப்பட்டாலும், சில வகைகளில் சமுதாயங்கள் ஒத்ததா யிருக்கும். ஒற்றுமையைக் காண விழைபவர்கள் சமுதாயங் களிடையே இருக்கும் 'பொது அமைப்பை' உணருவர். ஒரு சமுதாயத்தின் அங்கத்தினராக ஆனால்தான் அந்த சமுதாயத்தின் அமைப்பை அறிய முடியும். அதாவது, ஒரு சமுதாயத்தின் அங்கத்தினர்களைப் பார்த்து அவர்கள் எதைச்செய்கிறார்களோ அதைச் செய்து, எதை அவர்கள் தவிர்க்கிறார்களோ அதைத் தவிர்த்து, அவர்கள் எப்படிப் பேசுகிறார்களோ அதேபோல் பேசி, அவர்கள் எப்படிப் பழகுகிறார்களோ அப்படிப் பழகி செயல் பட்டால் ஒருவன் அந்த சமுதாயத்தின் அங்கத்தினராகும் தன்மையைப் பெறுவான். ஆகவே ஒரு சமுதாயத்தின் அமைப்பை

விவரிக்க விரும்புவர்கள் ஏறக்குறைய அச்சமுதாயத்தின் அங்கத் தினராகவே ஆகிவிட்டால், அவர்களது விவரணை பூர்த்தியான தாக இருக்கும் என்பார் மேலினோவ்ஸ்கி.

அர்கோனாட்ஸ் மக்களின் மொழி வழங்கும் சூழ்நிலைகளை ஆய்ந்த அவர், அம்மொழியில் மதத்தோடு தொடர்புடைய 'வித்தை சூழலில்' உபயோகிக்கப்படும் மொழிக்கும், சாதாரண பேச்சுச்சூழலில் உபயோகிக்கப்படும் மொழிக்கும் வேற்றுமை இருப்பதைக் குறிப்பிட்டார். 'வித்தை சூழல் மொழியில் காணப்படும் மொழிக்கூறுகளின் 'பொருள்' தனிப்பட்டவை என்றும், அந்தப் பொருளுக்கும், பேச்சுச் சூழல் மொழிக் கூறுகளின் பொருளுக்கும் தொடர்பு இல்லை எனவும் கூறினார். இதன் மூலம், 'மொழிக் கூறுகள் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் 'வேறுபட்ட பொருள் களைக் குறிக்கின்றன' என்பதை வலியுறுத்தினார்.

Problems of meaning in primitive languages [1923. பழங் குடி மொழிகளின் 'பொருள்கள்' காட்டும் பிரச்சினைகள்] என்ற கட்டுரையில், மேலினோவ்ஸ்கி, மொழிக்கூறுகளின் பொருளை அறியும் விதத்தைக் குறிப்பிட்டார். மொழிக்கூறுகளின் பொருளை அறியவேண்டுமென்றால், விளக்கவேண்டுமென்றால் அம்மொழிக் கூறுகளோடு தொடர்புடைய சமுதாய நிகழ்ச்சிகளை அறிய வேண்டும் என்றார். ஒரு மொழியின் கூறுகளை மொழி பெயர்க் கும் நேரத்தில் ஏற்படும் இடையூறுகள், அதன் காரணங்கள், இடையூறுகளைத் தவிர்க்கும் வழி ஆகியவற்றைக் குறித்தும் கூறினார். இந்தக் கட்டுரை, லண்டன் மொழியியல் வளர்ச்சியில் முக்கிய அங்கம் வகித்தது என்பதில் ஐயமில்லை.

மேலே கூறிய கட்டுரையினால் வலியுறுத்தப்பட்ட சில கருத்துகள் பின்வருமாறு. வித்தை சூழலில் காணப்படும் மொழி பேச்சுச்சூழலில் காணப்படும் மொழியிலிருந்து வேறுபட்டதல்ல. இக்கருத்து 'அர்கோனாட்ஸ்' என்ற கட்டுரையில் மேலினோவ்ஸ் கியால் கூறப்பட்ட கருத்துக்கு முரண்பாடான கருத்து. வித்தை சூழல்மொழி, சாதாரணப் பேச்சு மொழியைச் சார்ந்த ஒன்று. ஒரு மொழியை நாம் பொதுவாக 'கருத்து பரிமாற்றத்திற்காக உப

யோகப்படுத்துகிற கருவி' என்கிறோம். கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படல் என்பது ஒரு மொழியின் தன்மை என்றாலும் அதுவே முக்கியத் தன்மையாகாது. மொழியை நாம் பொழுதைப் போக்குவதற்காவும், மௌனம் சாதிப்பதனால் விளையும் எரிச்சலிலிருந்து நம்மை மீட்டுக்கொள்வதற்காகவும் பயன்படுத்துகிறோம் சில வேளைகளில்.

மொழி ஒருவகை செயல். அது செயலாக இருப்பதால்தான் அதில் தோன்றும் மொழிக்கூறுகள் அந்தமொழி பயன்படுத்தப் படும் இடம், காலம் என்பவற்றிற்கேற்ப வெவ்வேறான பொருளைப் பெறுகின்றன. இடம், காலம், சூழ்நிலை இவைகளின் பின்னணியிலிருந்து மொழியையோ, மொழிக்கூறுகளையோ பிரிக்கமுடியாது. மொழிக்கூறுகளுக்குப் பொருள் கொடுக்கவும் முடியாது. மேற்கூறியநிலை பழங்குடி மொழிகளுக்கு அருமையாகப் பொருந்தும் நிலையாகும். இதற்காக சில காரணங்கள் உண்டு. பண்பட்ட மொழிகளுக்குச் சொல்லகராதி இருக்கும். சொல்லகராதியைப் புரட்டினால் மொழிக்கூறுகளின் பொருள்களை அறியமுடியும். பல பழங்குடி மொழிகளுக்குச் சொல்லகராதிகள் கிடையாது, எழுத்துவடிவமே இல்லாததாகவும் அம்மொழிகள் இருக்கலாம். மேலும் அம்மொழிகளைப் பேசும் மக்கள் தனியாக சொற்களை உபயோகிப்பதும் இல்லை. மொழியைப் பயன்படுத்தும் போது சொற்றொடர்களையோ, வாக்கியங்களையோ உபயோகிப்பர். அவர்கள் உபயோகிக்கும் சொற்றொடர் மற்றும் வாக்கியங்களின் பொருளை அறியவேண்டுமானால் அக்கூறுகளின் பின்னணியில் இருக்கும் சமுதாயச்சூழல் பேச்சுச்சூழல், சமுதாயச் செயல்கள் முதலியனவற்றை உற்று நோக்கவேண்டும். சொற்றொடர், வாக்கியங்களின் பொருளை உணர்ந்தபின்தான் ஒருவர் சொற்களின் பொருளை பிரித்தறியமுடியும். 'எழுத்துமொழிகள்' சூழ்நிலைகளோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிராத ஒரு வகை மொழி. பொதுவாக, மொழியின் நிலைபேற்றில், மொழிக் கூறுகளின் பொருள் குறிப்பில் சூழ்நிலை ஒரு இன்றியமையாத பங்கை வகிக்கிறது,

சூழ்நிலைகளை மனதில் நிறுத்தியே பழங்குடி மொழிக் குழந்தைகள் தங்கள் மொழியைக் கற்கின்றன. சூழ்நிலையைப்

பின்னணியாக வைத்தால்தான் 'மொழிபெயர்ப்பு' எளிதாகும். சூழ்நிலையின் அடிப்படையில்தான் மொழிக்கூறுகளின் பொருள் நிர்ணயிக்கப்படுகிறது என்ற மேலினோவ்ஸ்கியின் கருத்தைச் சிறிது வேறுபடுத்தித் தெளிவாக விளக்குவர் லண்டன் மொழியியலார். மேலினோவ்ஸ்கி என்பாரின் மொழி மற்றும் மொழியியல் சார்பானக் கருத்துக்களைப் பின் வருமாறு தொகுத்துக்கூறலாம்.

மொழி என்பது ஒருவகை சமுதாயச் செயல். சூழ்நிலைகளின் தாக்கத்தால் மொழி வெவ்வேறு பயன்களை அடைகிறது. மொழி, பேச்சுவடிவமாகும்போது வாக்கியங்கள் உருவாகும். பேசும்போது, ஒருமொழியை உபயோகிப்பவர்கள் வாக்கியங்களை உருவாக்குவர். ஆகவே வாக்கியங்கள்தாம் முதல்நிலை மொழிக் கூறுகள். ஆகவே மொழியை விவரிக்கும்போது வாக்கியங்களையே முக்கியமாக விவரிக்கவேண்டும். ஐரோப்பிய மொழியியல் வரலாற்றில் சொற்கள்தான் முக்கியத்துவம் பெற்றன. இலக்கணங்கள் சொற்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டன. ஆனால் சொல் சார்ந்த இலக்கணம் முழுமையானதல்ல.

சமுதாய, பேச்சுச் சூழ்நிலைகள் மொழி பயன்படுத்தப்படுவதிலும், மொழிக்கூறுகளின் பொருளைக் குறிப்பதிலும் முக்கிய பங்கை வகிக்கிறது. சூழ்நிலை என்பதில் மொழி பேசப்படும்போது அதன் பின்னணியில் நிற்கும் வெளியுலகச்சூழல், பேசுவோரின் ஆசை, அறிவு, நோக்கம் முதலியவை அடங்கும். மொழிகளை எழுத்துவடிவம் பெற்ற மொழி, எழுத்துவடிவம் இல்லாத மொழி என வகைப்படுத்தலாம். மொழியை வெவ்வேறு காரணங்களுக்காகப் பயன்படுத்தலாம். மொழியைக் கருத்துப் பரிமாற்றத்திற்காக பயன்படுத்தலாம். இந்தப் பயனை ஐரோப்பிய மரபு மொழியியலார் விரிவுபடுத்தி விளக்குவர். மனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினன் ஆகும் வகைக்காகவும், பிற மனிதர்களுடன் சமுதாயத் தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும் மொழியைப் பயன்படுத்தலாம். சமுதாயத்தொடர்பு உருவாக்கும் பயன்தான் மொழியின் முக்கிய பயன்.

மொழிக்கூறுகளின் பொருள்களை விவரிக்கும் வகைக்காக மொழிதுவங்கும் சமுதாய கலாச்சார பின்னணிகளைப் பயன்படுத்த

வேண்டும். மொழி விவரணை என்பது கலாச்சார விவரணையின் ஒரு அங்கம். ஒவ்வொரு சமுதாயமும், காலாச்சார சூழல்களும் பிற சமுதாயம், கலாச்சார சூழல்களிலிருந்து வேறுபட்டுக் காணப் படும். இதன் விளைவாக வெவ்வேறு சமுதாயங்களில் காணப் படும் மொழிகளும் வேறுபட்டே இருக்கும். இரண்டு மொழிகளின் கூறுகள், அமைப்புகள் ஒத்தன போன்று தோன்றினாலும், அம் மொழிகளால் (மொழிக்கூறுகள்) வெளிப்படுத்தப்படும் பொருள்கள் வேறுபட்டனவாயிருக்கும். இதனால்தான் மொழிபெயர்த்தல் கடினமாகிறது.

3. ஜெ. ஆர். ஃபர்த் (1890 - 1960)

ஃபர்த்தின் ''மொழியியல் கொள்கைகள்'' மொழியைப்பற்றிய குறிப்புகளின் அடிப்படையில் எழுந்தவை. அவரது ''மொழிக் கொள்கை'' யில் இந்திய மொழிக்கொள்கையின் பிரதிபலிப்பைக் காணலாம். இந்திய மரபு மொழியியலார், மொழிக்குறிப்பு களின் அடிப்படையில், மொழிக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'இலக்கணம்' படைத்தனர். பாணினியின் இலக்கணம் வெவ்வேறு இந்திய மரபு இலக்கணங்கள் முதலியன இதற்கு சான்று. ஃபர்த், ஐரோப்பிய மரபு இலக்கணத்தாரைப்போல் 'பொது இலக்கணம்' படைப்பதைத் தமது குறிக்கோளாக கொள்ளவில்லை. இந்தியாவி லும், பர்மாவிலும் ஆங்கிலேயப் பிரதிநிதியாகப் பணியாற்றி, பின் லண்டன் சென்று தனது மொழியியல் பணியைத் துவக்கி னார். அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் மொழியியல்துறைத் தலைவராக இருந்த சமயத்தில்தான் (1940) அவரது 'மொழிக் கொள்கைகள்' வடிவம் பெற்றன. அவரது பழைய கருத்துக் களைத் தொகுத்து நோக்கும்போது அவை சிதறியவை போன்று காணப்பட்டாலும், அவரது புதிய கருத்துகளின் முன்னால் அவை களை நிறுத்தும்போது, அவை எவ்விதம் புதுக்கருத்துக்களாக வடிவெடுத்தன என்பது புலப்படும். அவர் குறிப்பிட்ட சில நிலை யான மொழியியல் கருத்துகள் பின்வருமாறு :

மொழி வெவ்வேறு மட்டங்களைத் தன்னுள் கொண்டிருக்கும். மொழி மட்டங்களில் அம்மட்டங்களுக்கென அமைந்த மொழிக் கூறுகள் காணப்படும். ஒருமொழியை விவரிக்க வேண்டுமென்றால்

அம்மொழியில் காணப்படும் வெவ்வேறு மட்டங்கள், அம்மட்டங்களில் காணப்படும் மட்டமொழிக்கூறுகள், அக்கூறுகளின் இடையே தோன்றும் தொடர்நிலைத்தொடர்பு மற்றும் தொகுதி நிலைத் தொடர்பு ஆகியவைற்றை விளக்கவேண்டும். இதற்காக மட்டச் சூழ்நிலைகளையும் ஆராயவேண்டும்.

ஒலியமைப்பு, பொருளமைப்பு ஆகியவற்றை விரிவாக விளக்க முயல்வார் ஃபர்த். ஃபர்த் என்பாரை நினைக்கும் போதெல்லாம் அவர் வலியுறுத்திய 'prosodic analysis' (பரவல் விவரணை)-ம், 'சூழ்நிலை விளக்கம்' (Contextual description) என்ற கொள்கையும் நம் கண்முன் தோன்றுவது இயற்கை.

3. 1 ஃபர்த்தின் முதல் நிலை

ஃபர்த் என்பாரின் பழைய கருத்துகள் சில பின்வருமாறு

மொழி என்பது பல வகை சூழ்நிலைகளின் அமைப்பு. மொழியில் பலவகையான மட்டங்களைக் காணலாம். அவையாவன ஒலிமட்டம், உருபன்மட்டம், சொல்மட்டம், சொல் தொடர் மட்டம், பொருள் மட்டம் என்பன. ஒவ்வொரு மட்டத்திற்கும் ஒவ்வொரு மொழிக்கூறு அடிப்படை மட்டக்கூறாக இருக்கும். ஒலி, உருபன். சொல், இலக்கணக் கூறுகள், பொருள் ஆகியன வெவ்வேறு மட்டக்கூறுகள், ஒவ்வொரு மட்டக்கூறுகளும் அவைகளுக்கான மட்டச்சூழ்நிலைகளில் தோன்றும். ஒலிச்சூழ்நிலை, உருபன் சூழ்நிலை, சொல் சூழ்நிலை, சொல் தொடர் சூழ்நிலை, சமுதாயச்சூழ்நிலை ஆகியன வெவ்வேறு மட்டச்சூழ்நிலைகள். ஒரு மொழியை ஆராயும் போது, பல வகை மொழிக்களையும், அவை நிற்கும் சூழ்நிலைகளையும் அந்தந்த மட்டங்களில் விவரிக்க வேண்டும்.

மொழியில் காணப்படும் மட்டங்கள் தனிநிலை கொண்டவை என்றாலும், அவை தொடர்பற்றவை அல்ல. இதை இரண்டு முறைகளில் வெளிப்படுத்த முடியும். 1) ஒலிமட்டத்தைச் சார்ந்த கூறுகள் (ஒலிகள்) சில சமயங்களில் இலக்கண மட்டத்தைச் சார்ந்த கூறுகளை வேறுபடுத்த உபயோகிக்கப்படும். அதாவது ஒலிகளின் இடையே தோன்றும் வேறுபாடுகள் இலக்கணக்கூறுகளை

வேறுபடுத்தும் வகைக்காகப் பயன்படுத்தப்படும். தமிழில் 'ட' என்ற ஒலியும் 'ட்ட' என்ற ஒலியும் 'நீள்மை' என்ற ஒலிக்கூறால் வேறுபடுபவை. இந்த, மெய்-குறில், நெடில் வேறுபாடு தமிழில் இலக்கணக் கூறுகளை வேறுபடுத்த பயன்படும். 'படு' என்ற சொல் ஒரு செயலையும், 'பட்டு' என்ற சொல் வினைஎச்சத்தையும் குறிக்கும். வினை-வினை எச்ச வேறுபாடுகள் மெய்க்குறில்-நெடில் களான 'ட்' ,ட்ட' என்பனவற்றால் நிலை நாட்டப்படுகின்றன. இதிலிருந்து ஒலிமட்டத்திற்கும், இலக்கண மட்டத்திற்கும் இடையே தொடர்பு இருப்பதை உணர முடியும் 2 ஒரு மொழி யில், ஒரு குறிப்பிட்ட மட்டக்கூறால் வெளிப்படுத்தப்படும் 'பொருள் மயக்கநிலை' அம் மொழிக்கூறு வேறு மட்டத்தில் தோன்றும் போது தெளிவாக்கப்படும். சில நேரங்களில் கீழ் மட்ட மொழிக் கூறுகள், மேல்மட்டத்தில் பங்கெடுக்கும். அத்தகைய நிலையில் அம்மொழிக்கூறுகள், கீழ்நிலையில் காட்டும் 'பொருள் மயக்க நிலை' இல்லாமல் ஆகிவிடும். 'ஆடு' என்ற சொல் 'பொருள் மயக்கம்' காட்டும் சொல். இந்த சொல் இலக்கண மட்டத்தில் இரண்டு இலக்கணக் கூறுகளின் அங்கமாகிறது (வினை-பெயர்). இலக்கண மட்டத்தில் 'ஆடு' என்ற சொல்லின் பொருள் மயக்க நிலை இல்லாமல் போய் விடுகிறது. இதிலிருந்தும் நாம் வெவ் வேறு மொழிமட்டங்களின் நிலை பேற்றையும், மட்டத்தொடர்பு களின் நிலைபேற்றையும் உணரமுடிகிறது.

மொழிக்கூறுகளின் பொருளை அறிய வேண்டுமென்றால், அம்மொழிக்கூறுகள் அவைகளுக்கென அமைந்த மட்டத்தில் எந்த எந்த மொழிக்கூறுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன என் பதை ஆராய வேண்டும். ஒரு மொழிக்கூறின் சூழலை அறிந்தால் தான் அதன் பொருளை அறிய முடியும். இத்தகைய கருத்து, பின்னர் 'சொல் தொடர்ச்சி' (collocation) கொள்கை எழ காரண மாக அமைந்தது. 'ஏப்ரல்' என்றசொல் ஒரு மாதத்தின் பெயர். அதன் 'பொருள்' பிற மாதங்களைக் குறிக்கும் சொல்லிலிருந்து சொற்களின் பொருள்களிலிருந்து வேறுபட்டது. இதனை நாம் 'சொல் தொடர்ச்சி' கொள்கையின் மூலம் உணரலாம். 'ஏப்ரல்' என்ற சொல், ஆங்கிலத்தில் 'ஃபூல்' என்ற சொல்லோடு இணையும் தன்மை கொண்டது. இந்த சொல் தொடருக்கு

ஆங்கில சமுதாயம் ஒரு தனி 'குறிபொருளையும்' கொடுக்கிறது. வேறு மாதப்பெயர்கள் 'ஃபூல்' என்ற சொல்லோடு இணைந்து தனியான ஒரு பொருளைக் கொடுப்பதில்லை. தமிழிலும் இத் தகைய 'சொல் தொடர்ச்சி' களைக் காண்பிக்கும் சொற்களைக் காண முடியும் ('ஆடிக்காற்று, தைப்பொங்கல், கார்த்திகை தீபம் மார்கழிப் பனி, ஆடிக்கிருத்திகை' முதலியன).

பேச்சில் பலவகையான ஒலிகளைக் காணலாம். எல்லா ஒலி களும் 'பயன் ஒலிகளாகவோ அல்லது மொழி ஒலிகளாகவோ' ஆவதில்லை. ஒலிகள் ஒலிச்குழல்களில் தோன்றும். ஒலி உருவில் தொடர்பான ஒலிகள் ஒத்த சூழ்நிலைகளில் வராமல் இருக்கும். அத்தகைய ஒலிகளை ஒன்றாக சேர்த்து ஒரு 'பயன் ஒலி' யின் கீழ் அடக்கமுடியும். 'பயன் ஒலிகள்' 'எதிர்ப்புத்தன்மையைக் கொண்டதாக இருக்கும். ஒலி உருவில் ஒத்த, ஆனால் எதிர்ப்புத் தன்மையைக் காட்டாத, ஒத்த சூழ்நிலைகளில் தோன்றாத ஒலி களை 'மயக்க ஒலிகள்' எனலாம். மயக்க ஒலிகள்' பயன் ஒலியின் அங்கமாகத் திகழும். மேற்கூறிய கொள்கைகள் அமெரிக்க மொழி யியலிலும் பிரபலப்படுத்தப்பட்டன. ஃபர்த் என்பார், மேற்கூறிய கொள்கைகளை டேனியல் ஜோன்ஸ் என்பாரின் கொள்கைகளைத் தழுவியது என்பார். தமிழில் 'க்' என்ற மெய் ஒரு பயன் ஒலி. தொடர்ச் சூழலில் தோன்றும் உயிரொலிகளும் ஒத்தவையல்ல. முதல் சூழலில் தோன்றும் ஒவ்வொரு உயிரொலியும் 1 அங்கத்தினரைக் கொண்ட ஒரு தொகுதியின் ஒரு நபர். இரண்டாவதாகக் கூறிய சூழலில் நிற்கும் ஒவ்வொரு உயிரொலியும் 18 அங்கத்தினரைக் கொண்ட ஒரு தொகுதியின் ஒரு நபர். 'இ' என்ற ஒலியே மெய்+உயிர்+மெய் என்ற சூழலிலும், மெய்+உயிர் என்ற சூழலி லும் தோன்றிய போதிலும் அந்த இரண்டு 'இ' ஒலிகளும் ஒத் தவையல்ல.

ஒரு அசையைத் தேர்ந்தெடுத்து [எ.கா. மெய்+ஒலி+மெய் அசை] அதில் வரும் உயிரொலிகள் எந்தெந்த மெய் ஒலிகளின் முன்னரும் பின்னரும் வருகின்றன என்பதை மிகத் துல்லியமாகக் கூறும் போது அவ்விளக்கம் 'குறிப்பு ஒலிச் சூழ் நிலை விளக்கம்' ஆகி விடுகிறது. ஆங்கிலத்தில் குறிப்பாக மூவொலி அசைகளில் 'd' என்ற மெய்யெழுத்திற்கும் 'b' என்ற மெய்யெழுத்திற்கும்

இடையே வரும் 'i' என்ற ஒலி 16 ஒலியங்கங்களைக் கொண்ட ஒலித்தொகுதியின் ஒரு அங்கமாக நிற்கும். (bTd) 'p''l' என்ற மெய்யொலிகளின் இடையே தோன்றும் 'u' என்ற உயிரொலி, 11 ஒலிகளை அங்கங்களாகக் கொண்ட தொகுதியில் அங்கமாகத் திகழும்.

மேற்கூறியவைகளிலிருந்து ஒரு ஒலியின் நிலையை அது நிற்கும் அசையின் அமைப்பு மூலமும், அவ்வசைகளில் தோன்றும் பொது ஒலிகள் மூலமும், அசைகளில் காணப்படும் குறிப்பான சூழ்நிலை ஒலிகளின் மூலமும் விளக்கமுடியும் என்று கண்டோம். ஒரு ஒலி நிற்கும் சூழல், பொதுவான ஒலிச்சூழலாகவோ, குறிப்பான ஒலிச்சூழலாகவோ இருக்கலாம், பொதுவான மற்றும் குறிப்பான ஒலிச்சூழல்களுக்கு ஏற்ப ஒலிகளும், ஒலிகளின் தொகுப்பும் வேறுபடும். குறிப்பு ஒலிச்சூழ்நிலை விளக்கங்கள், பின்னர் 'பரவல் ஒலி விளக்கம்' ஏற்பட ஏதுவாயிருந்தன.

ஃபர்த்தின் மொழிக் கொள்கையில் ஒலியமைப்பு விவரணையும் பொருள் விவரணையும் [குறிப்பாக சூழ்நிலை விவரணை] தொடக்கத்திலிருந்தே முக்கியப் பங்கைப் பெற்றன. மேலினோவ்ஸ்கி மொழிச்சூழலில் சமுதாயச்சூழலை இணைப்பர். சமுதாயச்சூழலில் மொழி வழங்கும் கலாச்சாரச்சூழல் மொழிபேசுவோரின் வரலாறு, வளர்ச்சி, மொழிபேசுவோர் செய்யும் செயல்கள் முதலியவைற்றையும் அடக்குவார். ஃபர்த் இத்தகைய செய்திகளைப் 'பரந்த மொழிச்சூழலை' விவரிக்கும் வகையில் எடுத்தாள்வார்.

ஃபர்த் என்பார் 'குறிப்பு மொழிச்சூழல்' என்ற ஒரு சூழலையும் விளக்குவார். ஒருவர் வேறொருவருடன் பேசும் போது, அப்பேச்சோடு தொடர்பாக நிற்கும் சூழலை 'குறிப்பு மொழிச் சூழல்' என்பார். குறிப்பு மொழிச்சூழலை விளக்க வேண்டுமென்றால், யார் யார் மொழியைப் பயன்படுத்துகிறார்கள், எங்கே, எப்போது எப்படி, எந்த நோக்கோடு மொழியைப் பயன்படுத்துகிறார்கள் என்பன போன்ற செய்திகளைக் கொடுக்க வேண்டும். குறிப்பு மொழிச்சூழல்களில் தோன்றும் பேச்சுக்களும், வழக்குகளும் வேறுபட்டவை, குறிப்பானவை. அவைகளின் குறிப்புத் தன்மையையும்

வேறுபட்ட தன்மையையும் விளக்க வேண்டு மென்றால், அவைகளோடு குறிப்புச் சூழ்நிலையையும் இணைக்க வேண்டும். இத்தகைய 'இணைத்தல்' செயலே பொருளியலின் கடன்.

பேச்சுக்கள் சூழ்நிலைக்குத் தருந்தாற் போல் மாற்றமடைகின்றன. இத்தகைய வேறுபாடு தோற்றுவிக்கும் பேச்சுக்களை விளக்க, அவை நிற்கும் சூழ்நிலையோடு அப்பேச்சுக்களைத் தொடர்புபடுத்த வேண்டும். இத்தகைய கருத்துக்களைக் கொண்டமையால் ஃபர்த், வேறுபாட்டு விளக்கத்தில் அதிகக்கவனம் செலுத்தினார் என்பது தெளிவு.

3.2 ஃபர்த்தின் இரண்டாம் நிலை

மொழி விவரணை குறிப்பாகவும், விஞ்ஞான ரீதியில் அமைந்ததாகவும், மொழியின் செயல்பாட்டை விளக்குவதாகவும் அமைதல் வேண்டும் என்பார் ஃபர்த். கிரேக்க, ரோம மொழியியல் கொள்கைகள் தத்துவ ரீதியிலும், இந்திய மொழியியல் கொள்கை சோதனை (செயல் முறை) ரீதியிலும் அமைந்தவை. கிரேக்க, ரோம மொழியியல் கொள்கைகளை மரபாக ஏற்று வரும் ஆங்கில மொழியியல் சூழலில் ஃபர்த் நின்றிருந்த போதிலும் இந்திய மொழிக் கொள்கைகளை அவர் சார்ந்து நின்றார் என்பதை அவரது கட்டுரைகள் மூலம் நாம் உணரலாம். இந்திய மொழியியல் கொள்கைகளில் சில முக்கிய அம்சங்களைக் காணலாம். 1.மொழியின் செயல்பாடு, மொழியின் நிலைபேறு முதலியனவற்றை ஆராய்வதன் மூலம் பெறும் குறிப்புகளின் மூலம் மொழியை விவரித்தல். 2. மொழியை விளக்குகையில் எந்தவித மொழியம்சத்தையும் விடாமல் விவரித்தல். 3. முரண்பாடற்ற முறையில் மொழியை விவரித்தல். 4. எளிய விவரணையைப் பின்பற்றல். இந்திய மொழியியல் கொள்கை பாணினியின் காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வரும் கொள்கை எனலாம்.

பொதுவாக 'மொழியியல் கொள்கையில்' மொழி பற்றிய, மொழி ஆய்வு பற்றிய, மொழி விவரணை பற்றிய கருத்துகள் இடம் பெறும். மொழியைப் பற்றிய கொள்கையில் உலக மொழிகள் எவ்விதம் ஒத்திருக்கின்றன, வேறுபடுகின்றன என்பதையும், மனிதரால் உபயோகப்படுத்தப்படும் மொழி எவ்விதம் பிற மொழிகளிலிருந்து வேறுபடுகின்றன என்பதையும் விளக்க வேண்டும்.

'மொழி ஆய்வுக் கொள்கையில்' ஒரு மொழியின் சிறப்பு அம்சங்களைக் கண்டு கொள்ளும் விதத்தை விளக்க வேண்டும். மொழியம்சங்களின் நிலைபேறு, அமைப்பு, முதலியனவற்றைக் கண்டு கொள்ளும் விதத்தையும் விளக்க வேண்டும். நமது இலக்கி யங்களுக்குத் தகுந்தாற்போல் மாறுபட்ட அமைப்புகளைக் காட்டுவது போல் தோன்றும் தன்மை கொண்டது மொழி. மொழி ஆய்வாளர்கள் வெவ்வேறு வகையில் மொழியை ஆய்வார்கள். சிலர் மொழியில் மொழிக்கூறுகளையும் அவை காட்டும் தொடர்பு களையும் ஆய்வார்கள். சிலர் பெரு மொழிக்கூறு உருவாக்கம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள் சிலர் பெருமொழிக்கூறுகளை அடிப்படைக்கூறுகளாகக் கொண்டு 'சிதைப்பு முறை' மூலம் சிறு மொழிக்கூறுகளைப் பெற முயல்வர். இவைகளுக்கு ஏற்ப மொழி ஆய்வுக் கொள்கைகளும் வேறுபடும். சிலர், மொழி ஆய்வுக் கொள்கைகளில், மொழிக்கூறுகளை சிதைத்தல், கண்டு கொள்ளல், ஒழுங்குபடுத்தல் வகைப்படுத்தல் ஆகியனவற்றை அடக்க வேண்டும் என்பார்கள்.

மொழி விவரணைக் கொள்கையில் மொழி ஆய்வில் கிடைத்த செய்திகளைத் தொகுத்து வெளியிடும் விதத்தைக் கூற வேண்டும். மொழியின் அமைப்பு, செயல் ஆகியனவற்றை விவரிக்கும் விவரணையை 'இலக்கண உரு' எனலாம். பலவித இலக்கண உருக்களை நாம் காண முடியும். ஒரு மொழி ஆராய்ச்சியாளன் உருவாக்கும் இலக்கண உரு அவனது கொள்கை, அக்கறை, அவன் விளக்க முயலும் மொழியம்சம் இவைகளைப் பொறுத்து வேறுபடும். 'இலக்கண உருக்கள், மொழிக்கூறு உருவாக்கம், மொழிக்கூறு சிதைப்பு, மொழிக்கூற்றுத் தொடர்பு ஆகியனவற்றை விளக்குபவையாக அமையும்.

மொழி, மொழி விவரணை ஆகியனவற்றைப் பற்றிய சிரம மான விளக்கத்தை ஃபர்த்தின் இரண்டாம் நிலை கட்டுரைகளில் காணமுடியும். மொழி, சமுதாயத்தோடு பின்னிப்பிணைந்து நிற்கும் செயல்களில் ஒன்று. ஆகவே மொழியைப் பிரதிபலிக்கும் 'பேச்சு' ஒருவகை சமுதாயச்செயல். பேச்சு சமுதாயத்தில் பெறும் நிலையினைப் பொறுத்து, பேச்சின் பொருள் கொள் தன்மையை விளக்கமுடியும். பேச்சு தோன்றும் சமுதாயச் சூழ்நிலைகளை

உணருவதன் மூலம் பேச்சின் பொருளை விளக்க முடியும். பேச்சில் ஒலிகள், சொற்கள், இலக்கணக் கூறுகள் முதலியன தோன்றும். இத்தகைய கூறுகளின் இடையே நிலவும் தொடர்பும் பேச்சுச் சூழலின் அங்கமாக இருக்கும்.

மொழி விவரணைகளில் பலவகைகளை விளக்குவார் ஃபர்த். ஒலிமட்டத்தைச் சூழ்ந்த சூழ்நிலை விவரணையை 'ஒலிமட்ட சூழ் நிலை விவரணை' என்பார். இச் சூழ்நிலையை விவரிக்கும் போது 'தனி ஒலி' 'பரவல் ஒலி' என்ற இரண்டு வகையான ஒலிகளை அடிப்படைக் கூறுகளாகக் கொள்வார். பரவல் ஒலி என்ற (rosodies) என்ற ஒரு கருத்தை முக்கியமாக விளக்குவ தால், ஃபர்த்தின் ஒலிக்கொள்கையை 'பரவல் ஒலி விளக்கக் கொள்கை' என்பர் சிலர். சொல்மட்டச் சூழ்நிலையை விளக்கும் போது குறிப்பாக 'சொல்லிணைப்பு' (collocation) என்ற ஒரு புதுக்கருத்தை விளக்க முயல்வார். 'சொல்லிணைப்பு' என்பதைச் சொற்களின் தொடர்நிலைத் தொடர்பு என்று கொண்டு, அத்தொடர்பு பொருளின் அடிப்படையில் நிலை பெறும் ஒன்று எனவும் கூறுவார். இலக்கணமட்ட சூழ்நிலை விளக்கத்தில் இலக்கணக் கூறுகளின் தொடர்புகளைப் பரவலாக விளக்குவார். குறிப்பாக, இலக்கணக் கூறுகளின் தொடர்நிலைத் தொடர்பை விளக்கி, அதற்கு 'இலக்கணக்கூறிணைப்பு' (colligation) என்ற பெயரையும் சூட்டுவார். ஒரு மொழிக் கூறை அதன் மட்டத்தில் மட்டும் நிறுத்தி விளக்கப்படும் விவரணை 'தனி விவரணை'; ஒரு மட்டக்கூறு இன்னொரு மட்டக் கூறோடு கொண்டிருக்கும் தொடர்புகளை விளக்கும் விவரணை 'பரவல் விவரணை'. இந்த இரண்டு விவரணைகளிலும் 'பரவல் விவரணையே' சிறந்தது எனவும் கருதுவார். ஒரு மொழிக்கூறு எவ்விதம் வெவ்வேறு மட்டம் தாண்டிய சூழ்நிலைகளில் நிற்கிறது செயல்படுகிறது என்பதை விவரிக்கும் விவரணையே 'பரவல் விவரணை' என அழைக்கப்படும்.

மொழிகளில் அவைகளுக்கென்றே அமைப்புக் காணப்படும் மொழியமைப்பு, மொழிக் கூறுகளின் தொடர்புகள் வெளிப்படை யானதாகவோ மறைநிலைத் தன்மையுடையதாகவோ இருக்கும். மொழிக்கூறுகள் தொடர் நிலையில் நிற்கும் போது ஏற்படும்

தொடர்பு 'வெளிப்படைத் தொடர்பு'. மொழிக்கூறுகள் பெயற்சி நிலையில் நிற்கும் போது தோன்றும் தொடர்பு 'மறைநிலைத் தொடர்பு'. மொழிக் கூறுகளின் தொடர்நிலையால் உருவாகும் பெருமொழிக்கூறு 'மொழிக்கூற்றுத் தொடர்'. மொழிக்கூறுகளின் பெயற்சி நிலைத் தொடர்பால் இணைக்கப்பட்டு உருவாக்கப்படும் 'மொழிக்கூற்றுத் தொகுப்புகள் 'மொழிக்கூற்றுத்தொகுதி' எனப் படும். மொழிக்கூற்றுத் தொடர்களுக்கும் அவற்றில் பங்கெடுக்கும் மொழிக்கூறுகளுக்கும் இடையே நிலவும் தொடர்பு 'முழு-அங்கத் தொடர்பு. ஒரு மொழிக்கூற்றுத் தொகுதிக்கும், அதன் உள்ளே அங்கம் வகிக்கும் மொழிக் கூறுகளுக்கும் இடையே நிலவும் தொடர்பும் 'முழு-அங்கத் தொடர்பே'.

மேற்கூறிய, மொழியைப் பற்றிய மொழிக்கூறுகளைப் பற்றிய கொள்கைகள் ஃபர்த்தாலும், பிற லண்டன் மொழியியலாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டக் கொள்கைகள். ஆகவே அவரது மொழி ஆய்வுக் கொள்கையும், மொழி விவரணைக் கொள்கையும் இவற்றைச் சார்ந்தனவாகவே இருக்கும். மொழியின் விவரணை யில் மொழிக்கூறுகளின் முழு- அங்கத் தொடர்புகளை விளக்க முயல்வதால், மேலும் அத்தகைய விளக்கங்களால் மொழியின் அமைப்பை வெளிப்படுத்தமுடியும் என்று கொண்டதால், லண்டன் மொழியியலாரின் கொள்கையை 'அமைப்புக் கொள்கை' எனவும் அழைப்பர் மொழியியலார்.

மொழி அமைப்பை விளக்கச் சில சொற்கள் தேவைப்படும். எல்லா மொழியியலாரும் ஒரே மாதிரியான கலைச்சொற் களைப் பயன்படுத்துவதில்லை. ஃபர்த், வேறு மொழியியலாரைப் போன்று, தான் உபயோகிக்கும் (மொழி விவரணைக்கு) கலைச் சொற்கள் நிலையானவை என்றோ, பிறர் அவைகளைப் பயன் படுத்த வேண்டுமென்றோ கூறவில்லை. மொழியியலாரின் கடமை, ஒரு மொழி எவ்விதம் செயல்படுகிறது என்பதை விளக்குவதே. அவ்விளக்கத்தைப் பூர்ணமாக்கும் வகையில் புதிய கலைச்சொற் களை உருவாக்கி, மொழியியலார் பயன்படுத்தலாம். நிலையான கலைச்சொற்களை (பிறரால் ஏற்படுத்தப்பட்டவைப் பயன் படுத்தித்தான் மொழியின் அமைப்பை விளக்க வேண்டுமென்ற கொள்கையை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை.

அத்தகைய கட்டுப்பாடுகள் மொழிவிவரணைக்கு இடையூறாகத் தான் அமையும். மொழியியலாருக்கு மொழியின் செயல்பாட்டு விவரணையே முக்கியமானது. கலைச்சொற்கள் முக்கியமானவை அல்ல. மேலும் கலைச்சொற்கள், மொழி விவரணை முறைகளின் அடிப்படையில் வேறுபட்டனவாயிருக்கும். இத்தகைய கருத்துக் களைப் ஃபர்த் கொண்டிருந்தபோதிலும், 'தொடர், தொகுதி' போன்ற கலைச்சொற்களை முரண்பாடு இல்லாமல் பயன் படுத்துவார்.

ஃபர்த்தின் மொழி விவரணையும், ப்ளூம்ஃபீல்டின் மொழி விவரணையும் 'அமைப்பு விவரணை' என்ற பொதுத்தலைப்பால் அழைக்கப்பட்டாலும், இரண்டுக்கும் இடையே வேற்றுமைகள் உண்டு. ப்ளூம்ஃபீல்டும், அவரைச் சார்ந்த அமெரிக்க அமைப்பு மொழியியலாரும் மொழிக்கூறுகளின் தொடர்நிலைத் தொடர் பையே முக்கியமாக விளக்குவர் தங்கள் மொழி விவரணையில். அவர்கள் 'கண்ணுக்கு புலனாகும் மொழி அமைப்புகளே நிலை யானவை' என்றும், 'கண்ணுக்கு புலப்படும் அமைப்புகளை விளக்குவதே விஞ்ஞான ரீதியிலமைந்த விளக்கமுறை என்றும் கொள்வர். கண்ணுக்குப் புலனாகும் அமைப்புகள் மொழிக்கூறு களின் தொடர்நிலை அமைப்புகளே. ஆகவே தொடர்நிலையில் பங்கெடுக்கும் மொழிக்கூறுகளைத்தான் அமெரிக்க மொழியியலார் விளக்க முயல்வர். பெயற்சிநிலைத் தொடர்பில் பங்கெடுக்கும் கூறுகளையும், அவற்றின் தொகுதியையும் விரிவாக விளக்குவ தில்லை. ஃபர்த்தின் விவரணையில், மொழிக்கூறுத் தொகுதி களும், தொடர்களும் சமநிலையில் பிளக்கப்படும். ஃபர்த், தன்னைப் போன்ற மொழி விவரணையாளர்களை (மொழி யியலாரை) 'அமைப்பு மொழியியலார்' என்றும், ப்ளூம்ஃபீல்டின் வழி வந்தவர்களைத் 'தொடரமைப்பு மொழியியலார்' என்றும் அழைப்பர் (Structural linguist. Structuralist linguist).

ஃபர்த்தின் மொழி விவரணை சூழ்நிலை விவரணை; அவரது மொழி ஆய்வு, சூழ்நிலை ஆய்வு, பேச்சு, மொழி இவைகளை ஆராயும் போது இரண்டு வகையான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். 1. மொழியில் காணப்படும் மொழிக்கூறுகளின் தொடர்பு பற்றிய விளக்கம். 2. மொழி துலங்கும் பேச்சுச்சூழல்

மற்றும் சமுதாயச்சூழல் பற்றிய விளக்கம். முதல் விளக்கத்தை 'மொழி விளக்கம்' எனவும் இரண்டாவது விளக்கத்தைச் 'சூழ் நிலை விளக்கம்' எனவும் குறிக்கலாம்.

மொழி விளக்கத்தில் இரண்டு விஷயங்களை விளக்க வேண்டும். 1. மொழிக்கூறுகளின் அகத்தொடர்பு 2. மொழிக்கூறுகளின் புறத் தொடர்பு. அகத்தொடர்பை விளக்கும் போது மொழிக்கூறுகள் தொடர்நிலையில் நிற்பதையும், தொகுதிநிலையில் நிற்பதையும் விவரிக்க வேண்டும். புறத்தொடர்பை விளக்கும்போது மொழிக் கூறுகள் பேச்சுச்சூழலோடு கொண்டிருக்கும் தொடர்பையும், பேச்சுச் சூழலில் மொழிக்கூறுகள் ஏற்படுத்தும் விளைவையும் விவரிக்க வேண்டும். வெளியுலகப் பொருள்கள், மொழியைப் பேசுவோர், கேட்போர், அவர்களின் நிலை, செயல்கள் ஆகியன, சூழ்நிலைக் கூறுகளாக நிலை பெறும்.

ஒலிகள், சொற்கள், இலக்கணக்கூறுகள் ஆகியன மொழிக் கூறுகள். அவை தோன்றும் மட்டங்கள் முறையே ஒலிமட்டம், சொல்மட்டம், இலக்கணமட்டம் என்பன. மேற்கூறிய மூன்று மட்டங்களும் ,மொழியின் மட்டங்கள்'. இவைகளையன்றி 'சூழ் நிலை மட்டம்' என்ற மட்டமும் மொழியோடு தொடர்புடையது. சூழ்நிலை மட்டம் என்பது மொழி நிலவும் பேச்சுச்சூழலையும், சமுதாயச்சூழலையும் தன்னுள் அடக்கும். ஒலிகள், 'சிறுசெயல் திறன்' கொண்ட மொழிக்கூறுகள். சொற்கள், இலக்கணக்கூறுகள் ஆகியவை 'பெரும் செயல் திறன்' கொண்ட மொழிக் கூறுகள். ஒலிமட்டக்கூறுகளை (ஒலிகளை) சூழ்நிலை விளக்கத்துக்கு உட் படுத்தும் போது, குறிப்பிட்ட ஒலிகளின் ஒலித்தொடர்நிலை, ஒலித் தொகுதிநிலை என்ன என்பதை விளக்க வேண்டும். முதலில் குறிப்பிட்ட ஒலிகள் எந்த எந்த ஒலிகளுடன் இணைந்து ஒலித் தொடர்களை உண்டாக்கும்; எந்த ஒலிகளுடன் இணைவதில்லை என்பனவற்றை விளக்கவேண்டும். மேலும் ஒலிகள் ஒரு அசையில் எந்தெந்த இடங்களில் நிற்கின்றன என்பதையும் விளக்க வேண்டும். மேலும் எந்தெந்த ஒலிகளால் ஒரு குறிப்பிட்ட ஒலியை இடப் பெயற்சி செய்ய முடியும்; இடப்பெயற்சியால் தொடர்புறும் ஒலித் தொகுதிகள் ஒரு அசையின் எந்த பகுதியில் தோன்றுகின்றன (முதலிலா? இடையிலா? கடையிலா?) என்பதையும் விளக்க

வேண்டும். பொதுவாக ஒலிகளின் தொடர்நிலை, பெயற்சிநிலை, பரவல் ஒலி வகைகள், தனி ஒலி வகைகள் ஆகியனவற்றைக் குறித்த விவரணையைக் கொடுக்க வேண்டும்.

சொல்மட்ட மொழிக்கூறுகள் சொற்கள். ஒரு மொழியில், சொற்கள் செயல்படும் விதத்தை அறிய 'சொல் இணைப்புகளை' விளக்க வேண்டும். சொற்கள் வேறு சொற்களோடு தொடர் நிலையில் தோன்றும். இத்தகைய 'தொடர்நிலை இணைப்பு' இலக்கண அடிப்படையிலோ, பொருள் அடிப்படையிலோ ஏற்படலாம். பொருளடிப்படையிலான சொல்லிணைப்பை 'விசேட சொல்லிணைப்பு' (collocation) எனலாம். 'ஏப்ரில்' என்ற சொல் 'ஃபூல்' என்ற சொல்லோடு இணைந்து 'ஏப்ரல் ஃபூல்' என்ற தொடர் உருவாகும். 'மே' என்ற மாதத்தைக் குறிக்கும் சொல் 'ஃபூல்' என்ற சொல்லோடு இணைந்து 'மே ஃபூல்' என்ற விசேட சொல்தொடர் (சொல் இணைப்பு) உருவாகாது. சொற்கள் பெயற்சிநிலைத் தொடர்பையும் காட்டும். சொற்கள் பொருள் கொண்டவை. சொற்களின் பொருளை அச்சொற்கள் நிற்கும் சூழ்நிலைகளின் மூலமும், அச்சொற்கள் குறிக்கும் சூழ்நிலை அம்சங்களின் மூலமும், அச்சொற்களின் 'விசேட சொல்லிணைப்பு'த் தன்மையின் மூலமும் அறிந்து கொள்ள முடியும்.

இலக்கண மட்டத்தில் இலக்கணக்கூறுகள் எவ்விதம் தொடர் நிலைத் தொடர்பையும், பெயற்சிநிலைத் தொடர்பையும் காட்டுகின்றன என்பதை விளக்கவேண்டும். பெயற்சிநிலைத் தொடர்பின் அடிப்படையில் உருவாகும் இலக்கணக் கூறுகளின் தொகுதியை 'இலக்கணக் கூற்றுத்தொகுதி' எனலாம். இலக்கணக் கூறுகளின் தொடர்நிலைத் தொடர்பை விளக்க 'விசேட இலக்கண இணைப்பு' என்ற கருத்தைப் பயன்படுத்தலாம். இதை விளக்கும் வகையில் 'தின்னேன்' என்பார். (1967) 'எதிர்மறை இலக்கணக் கூறான' 'not' என்ற சொல்லுக்கும் 'இயக்க இலக்கணக் கூறான am, is, are, were என்பவைகளுக்கும் இடையே தோன்றும் தொடர்நிலைத் தொடர்பை விவரிப்பர். இதை (am, not, was, not) விசேட இலக்கண இணைப்பு என்பார்.

'சூழ்நிலை மட்டத்தில்' பேச்சு சூழ்நிலைகளைப்பற்றி பொதுவாக விளக்க வேண்டும். பேச்சு நிலவும் சூழ்நிலைகளைப் பல

வகைகளாகப் பிரிக்கமுடியும். மதச்சூழ்நிலை, கொடுக்கல் வாங்கல் சூழ்நிலை, கதை சொல்லும் சூழ்நிலை, மந்திரம் ஓதும் சூழ்நிலை, ஆணை இடும் சூழ்நிலை, இகழும் சூழ்நிலை, புகழும் சூழ்நிலை, பயனில பேசும் சூழ்நிலை என சூழ்நிலைகளைப் பலவாறாகப் பிரிக்கலாம். சூழ்நிலையை விளக்கும்போது அதில் பங்கெடுப்பவர்களைப் பற்றிக் கூறவேண்டும். குறிப்பாக, பங்கெடுப்பவரின் தன்மை, பங்கேற்கும்நிலை, பங்கெடுப்பவர் குணம், அசைவுகள், செயல்கள் முதலியனவற்றைப் பற்றியும் கூற வேண்டும். மேலும் பேச்சோடு சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள், பேச்சினால் ஏற்படும் விளைவுகள் ஆகியனவற்றையும் விவரிக்க வேண்டும்.

சூழ்நிலை மட்டத்தில் காணப்படும் சூழ்நிலைக் கூறுகளின் விளக்கம் 'சூழ்நிலை விளக்கம்' எனப்படும். சூழ்நிலை மட்டத்தில் 'அகத்தொடர்பு', 'புறத்தொடர்பு' என்ற இரண்டையும் விளக்கவேண்டும். 'சூழ்நிலை அகத்தொடர்பில்' பேச்சை பேசுகின்றவர்களின் தன்மை, அவர்களின் பங்கு, அவர்களது பேச்சு, உடல் சலனங்கள், பேச்சினால் ஏற்படும் விளைவு ஆகியனவற்றை விளக்கவேண்டும். 'சூழ்நிலை புறத்தொடர்பில்' பேசுகின்றவர்களின் சமுதாயநிலை மதம், வசதி, இனம், வயது முதலியன) பேச்சு வகை (இருவர் பேச்சு, தனியொருவர் தானாக பேசும் பேச்சு) பேச்சின் பயன் (இகழல், புகழல், ஆணைஇடல்) ஆகியனவற்றை விளக்கவேண்டும். சூழ்நிலையும், சூழ்நிலைக் கூறுகளும் 'பேச்சுப்பகுதிகளைப்' பிரித்தெடுக்கவும், பேச்சுப்பகுதிகளோடு சம்மந்தப்பட்ட வெளியுலக நிகழ்ச்சிகளை இணைக்கவும் உதவும்.

சூழ்நிலை ஆய்வு, சூழ்நிலை விளக்கம் என்பவை பொதுவானவை. ஒவ்வொரு மட்டத்தின் சூழ்நிலைகள் வேறுபட்டவை. சூழ்நிலை விளக்கங்களை ஒலிச்சூழ்நிலை விளக்கம், சொல் மற்றும் இலக்கணச் சூழ்நிலை விளக்கம், சமுதாயச் சூழ்நிலை விளக்கம் என வகைப்படுத்தலாம். ஃபர்த்தும் அவரைச் சார்ந்தவர்களும் ஒலிச்சூழ்நிலையைப்பற்றி மிக நுண்மையாக விளக்கினர்.

3. 3 ஒலிவிவரணை

ஃபேர்த்தின் ஒலியாராய்ச்சியை 'படர் ஒலி' ஆராய்ச்சி எனலாம். ஒலியியலில் தனி ஒலி, படர் ஒலி, அவற்றின் நிலை ஆகியனவற்றை விளக்க முயல்வார் ஃபேர்த். ஒலிகள் தொடர் நிலையில் நின்று அசை, சொல் முதலியவைகளை உருவாக்கும். ஒரு ஒலிநிற்கும் நெருங்கிய சூழ்நிலை அசையாகும். அசையில் காணப்படும் ஒலிநிலை இடத்தில் பெயற்சி செய்யப்படும் ஒலி களைத் 'தனி ஒலி' எனலாம். 'ஆடு' என்ற அசையில் ஆ, ட், உ என்ற மூன்று ஒலிகளைக் காணலாம். 'ஆ' என்ற ஒலி 'முதல் ஒலிநிலை இடத்தில் நிற்கிறது. 'ட்' என்ற ஒலி இரண்டாம் இடத்தில் நிற்கிறது. தனி ஒலிகளையல்லாமல் 'ஒலித் தொடர்' (அசை) களில் 'படர் ஒலிக் கூறுகளையும்' காணலாம். ஒரு அசையின் முதல் ஒலிநிலை இடம் முதல் கடை ஒலிநிலை இடம் வரையிலோ, அல்லது ஒரு சொல்லின் தொடக்கம் முதல் கடைசி வரையிலோ சில ஒலிக்கூறுகள் படர்ந்து நிற்கும். அத்தகைய ஒலிக்கூறுகளை 'படர் ஒலிக்கூறுகள்' எனலாம். படர் ஒலிக் கூறு களைத் தனியாகப் பிரித்து, தனித்தன்மைகொண்டது என்று கூறும் போது அவை 'படர் ஒலிகள்' என்ற பெயரைப் பெறும். அழுத்த உச்சரிப்புகள், நீட்டல் உச்சரிப்பு, நாத உச்சரிப்பு, உதட்டொலி உச்சரிப்பு, மூக்கொலிப்பு, அண்ண ஒலிப்பு, மூச்சுதள்ளொலிப்பு முதலியன ஒலித்தொடர் முழுவதும் படந்து காணப்படுவதால் அவைகளைப் 'படர் ஒலிக்கூறுகள்' எனலாம்.

படர் ஒலிகள் (அல்லது பரவல் ஒலிகள்) அசையமைப்பு, இலக்கண அமைப்புகளான சொற்றொடர், வாக்கியம் ஆகியன வற்றில் படர்ந்து காணப்படும். ஒலிகள் தொடர்ச்சியாக நின்று மொழிக்கூறுகளான அசை, சொல் சொற்றொடர் ஆகியவற்றை உருவாக்கும். படர் ஒலிகளை அவை நிற்கும் (படர்ந்து நிற்கும்) மொழிக்கூறுகளின் அடிப்படையில் அசை படர் ஒலி. சொல் படர் ஒலி. சொற்றொடர் படர் ஒலி, வாக்கியப் படர் ஒலி என வகைப் படுத்தலாம். ஒன்றிற்கு மேற்பட்ட படர் ஒலிகளையும் ஒரு குறிப் பிட்ட மொழிக்கூறில் நாம் காணக்கூடும். ஒரு குறிப்பிட்ட சொல்லே அழுத்தப்படரொலி, நீட்டல் படரொலி, நாதப்பட ரொலி. மூக்குப்படரொலி, மூச்சுத்தள் படரொலி ஆகியனவற்றைத்

தாங்கி நிற்கும். வாக்கியங்களில் intonation என்ற படரொலி யைக் காணலாம்.

அமெரிக்க மொழியியலார், இரண்டு ஒலிகள் தொடர்ச்சியாக நிற்கும் போது ஒன்றின் மேல் இன்னொன்று தாக்கத்தை ஏற் படுத்தும் எனவும், அதனால் ஒலிகளின் உச்சரிப்புத் தன்மை கள் சிறிது வேறுபடும் எனவும், அவ்வேறுபாடுகளை, தாக்கும் ஒலிகளின் தன்மையால் விளக்க முடியும் எனவும் கூறுவர். சாதாரண ஒலிகளைத் 'தனி ஒலி' என்றும், பிற ஒலிகளின் தாக்கத்தால் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அதனால் ஏற்படும் தனி ஒலியின் பிற வடிவங்களை 'மாற்றொலி' என்றும் அழைப்பர். வெவ்வேறு மாற்றொலிகளை அவைகளின் ஒலியமைப்பு ஒற்று மையை வைத்தும், அவை தோன்றும் சூழ்நிலையை வைத்தும் ஒரு ஒலியனின் கீழ் கொண்டு வரமுடியும் எனவும் விளக்குவார். ஃபர்த், மாற்றொலியன்களையும், அவைகளின் தன்மைகளையும் அறிந்திருந்த போதிலும், அவற்றை ஒரு குறிப்பிட்ட ஒலியனின் அங்கமாக விளக்க முற்படுவதில்லை. மாற்று ஒலிகள், சில பரவல் ஒலிகளின் 'படர்ச்சி'யை விளக்கும்போது தானாகவே மாற்றொலி களின் நிலையும் விளக்கப்பட்டு விடும் என்பார். (அமெரிக்க மொழி இயலார் /k/ என்ற ஆங்கில ஒலியனின் கீழ் [$^{=}$], [k^{c}] என்ற மாற்றொலிகளை அடக்குவர். [$k^{=}$] என்ற மாற்றொலி 'பின்னுயிரொலி' களான u, o என்பவைகளின் முன்னாலும், [k'] என்ற மாற்றொலி, முன்னுயிரொலிகளான i, e என்பவை களின் முன்னாலும் வரும் என்பர். (எ. கா. 1. $k^{=}$ūl, $k^{=}$ɔ. (cool, coal) 2. k'id, k'il, k'Etḷ (kid. kill, kettle). ஃபர்த், /k/ என்ற ஒலியனையும், அதன் கீழ் மாற்றொலிகளான [k'], [k=] என்பவைகளைக் கொண்டு வரும் விதத்தினையும் விளக்கு வதில்லை. 'அண்ண ஒலிப்பு' என்ற 'பரவல் ஒலிக்கூறு', kid, kill, kettle என்ற சொற்களில் தோன்றுகிறது என்று மட்டும் கூறுவார். அமெரிக்க மற்றும் ஃபர்த்தின் ஒலிவிளக்கம் எவ்விதம் வேறுபடுகிறது என்பதைப் பின் வரும் எடுத்துக்காட்டு விளக்கும்.

அமெரிக்கன்	லண்டன் (ஃபர்த்தியன்)
/kil/ —— [k'il]	$\frac{\quad\quad}{kil}$ i

/kūl/ —— [k⁼uwl] $\frac{\text{———}\ \ u}{\text{kūl}}$

∴ /k/ —— 1. [k'] /–i, e
2. [k⁼] /–u,o

ஒலி பரவல்ஒலி, ஒலித்தொடர்களான அசை, சொல் முதலியவனவற்றில் தோன்றும் போது, ஒலித்தொடர் சில உச்சரிப்பு வேறுபாடுகளை அடையும். 'நீட்டல் பரவல்ஒலி' ஒரு ஒலித்தொடரில் நிற்கும் போது, அவ்வொலித் தொடரில் காணப்படும் சில ஒலிகள் 'குரலொலி' களாக மாற்றப்படும்.

லண்டன் ஒலியியல் கொள்கையில் சில சிறப்பு அம்சங்களைக் காணலாம். 1) சொற்களை மட்டும் ஒலிவர்ணனைக்காக உபயோகிக்கப்படும் மேல்மட்டக்கூறாக லண்டன் மொழியியலார் கொள்வதில்லை. ஒலிவர்ணனை, சொல்லின் மேல் மட்டத்தில் காணப்படும் சொற்றொடர், வாக்கியம் ஆகியனவற்றையும் சார்ந்து நிற்கும் என விளக்குவர். அமெரிக்க மொழியியலாரில் பலர் ஒலிவர்ணனை, ஒலியாராய்ச்சி முதலியவைகளுக்குச் சொற்களை மட்டும் மேல்மட்டக்கூறாகக் கருதுவர். 2) ஒலிச்சூழ்நிலையின் தாக்கத்தால் (ஒரு ஒலியின் முன்னரும், பின்னரும் நிற்கும் ஒலிகள், அக்குறிப்பிட்ட ஒலியின் சூழ்நிலையாக அமையும்) ஏற்படும் மாற்றொலிகளை எல்லாம் ஒரு பொது ஒலியின் கீழ் (ஒலியன்) கொண்டு வர முயல்வதில்லை. சுற்றுப்புறத்தின் தாக்கத்தால் உருவாகும் ஒலி மாற்றத்தன்மைகளைப் 'பரவல் ஒலித்தன்மை, அல்லது பரவல் ஒலியம்சம் என தனியாகப்பிரிப்பார்கள். 3) ஒலியாராய்ச்சியில் பொது மொழியொலிகளையும், பொது மொழியொலிக்கூறுகளையும் நிலை நாட்டுவது அவர்களது நோக்கமல்ல. ஒவ்வொரு மொழிக்கும் உரியதான தொடர் ஒலிகளையும். (தனி ஒலி) பரவல் ஒலிகளையும் பிரித்து வகைப்படுத்துவதில் அக்கறை கொண்டனர். இரண்டு மொழிகள் ஒரு குறிப்பிட்ட தொடர் ஒலியையோ, பரவல் ஒலியையோ, தனிஒலி, பரவல்ஒலி அம்சங்களையோ காண்பிக்கக் கூடும். இத்தகைய ஒற்றுமைகளைத் திரட்டி 'உலக மொழிகளில் இன்னின்ன பொதுவான பரவல், தனிஒலிகள் காணப்படும்' என்ற பொதுமையான கூற்றுக்களைக் கூற முயல்வதில்லை லண்டன் மொழியியலார். 4) தனி ஒலிகளை

அவை நிற்கும் 'ஒலித்தொடர்', 'ஒலித்தொகுதி' ஆகியனவற்றின் மூலம் விளக்குவர். 5) பரவல் ஒலிகள், சில பரவல் ஒலியம் சங்களால் வெளிப்படும் என்றும், அவை மொழிக்கூறுகள் முழுவதுமோ, மொழிக்கூறுகளின் சில பகுதிகளிலோ படர்ந்து காணப்படலாம் என்றும் கூறுவர். 6) லண்டன் ஒலியாராய்ச்சி 'பல்நிலை ஒலியாராய்ச்சி' எனப்படும். ஒலிகளை, அவைகளின் தொடர்நிலை அடிப்படையிலும் விளக்குகின்ற காரணத்தால் மேற்கூறிய பெயரைக் கொண்டது லண்டன் ஒலியியல் கொள்கை. மேலும் ஒலியாராய்ச்சியை 'பல் தொகுதி' ஆராய்ச்சி எனவும் அழைக்கலாம். அக அமைப்பில் தொடர்புள்ள (ஒற்றுமையைக் காட்டும்) ஒலிகளை, அவை ஒலித்தொடர்களில் நிற்கும் இடத்தை வைத்து அவைகளை வெவ்வேறு ஒலித்தொகுதிகளில் உள்ளடக்குவர். ஒரு குறிப்பிட்ட ஒலியே, இரண்டு மூன்று தொகுதிகளின் அங்கமாகலாம். பல ஒலித்தொகுதிகளை, ஒலிவிவரணையில் ஏற்படுத்துவதால் அவர்களது ஆராய்ச்சி 'பல்தொகுதி' ஆராய்ச்சி எனப்படும். ஆங்கிலத்தில் 'மெய் + உயிர்' என்ற அமைப்பைக் கொண்ட அசையில் தோன்றும் 'K' என்ற மெய்யொலியும் (K + T), 'மெய் + மெய் + உயிர்' என்ற அமைப்பைக் கொண்ட அசையில் தோன்றும் 'K' என்ற ஒலியும் (S + K + T), அக அமைப்பில் ஒத்ததாக இருந்தபோதிலும், அவை நிற்கும் 'ஒலித்தொடர், ஒலித்தொகுதி, ஆகியவற்றின் அடிப்படையில், அவ்விரண்டு ஒலிகளையும் வேறுபடுத்துவர் லண்டன் மொழியியலார். முதலில் கூறிய 'K' என்ற மெய்யொலி, 13 மெய் ஒலிகளைக் கொண்ட ஒரு தொகுதியிலும், இரண்டாவது 'K' ஒலி, 7 மெய்யொலிகளைக் கொண்ட ஒரு தொகுதியிலும் அங்கம் வகிக்கின்றன.

இன்னொரு வகையிலும் லண்டன் ஒலியியல் விவரணையை 'பல்நிலை விவரணை' எனலாம். லண்டன் மொழியியலார் ஏற்படுத்தும் 'பரவல் ஒலிக் கொள்கையை' விளக்க வேண்டுமென்றால் சொல்லமைப்பு, சொற்றொடரமைப்பு ஆகியனவற்றை விளக்க வேண்டும். பரவல் ஒலி, சொல் மற்றும் சொற்றொடர், வாக்கியம் ஆகியனவற்றின் அங்கமாக இருக்கும். ஆகவே ஒலி விவரணையில் சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றின் விவரணையையும் இணைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மேலும் சில ஒலிக் கூறுகள் எவ்விதம் ஒரு மொழியின் இலக்கண அமைப்பில் பங்கேற்கின்றன என்பதையும் லண்டன் மொழியியலார் விளக்குவர். ஒலிகள், சொற்கள், சொற்றொடர்கள் முதலியன தொடர்புடைய கூறுகள் எனவும், ஒலியானது பிற கூறுகளின் அமைப்பில், பிற கூறுகளின் நிலைபேற்றில் பங்கெடுக்கின்றன எனவும், ஒலிவிவரணைக்குப் பிற கூறுகளின் விவரணையும் இன்றியமையாதது என்றும் கூறுகிறபடியால் லண்டன் ஒலி விவரணையை 'பல் நிலை விவரணை' எனக்கூறமுடியும்.

லண்டன் ஒலியாராச்சியில் இந்திய எழுத்தமைப்புகள் தாக்கத்தை ஏற்படுத்தின. ஒலியாராச்சியில், தனி ஒலிகள் (தொடர் ஒலிகள்) பரவல் ஒலி (படர் ஒலி), அவைகள் நிற்கும் 'ஒலித் தொடர்', ஒலித் தொகுதி, பரவல் ஒலிகளின் படற்சி (பரவல் வியாப்தி), இலக்கண அமைப்பில் தனி மற்றும் பரவல் ஒலிகளின் பங்கு ஆகியனவற்றை விவரிப்பர்.

ஒலித்தொடர்களில் வரிசையாக (தொடர்ச்சியாக) நிற்கும் ஒலிகள் 'தனி ஒலிகள்'. தனி ஒலிகள் தமக்கென்ற அக அமைப்பைக் கொண்டிருக்கும். அந்த அக அமைப்புச் சூழ்நிலையால் நிர்ணயிக்கப்படுவதில்லை. மொழியின் உயிர், மெய் ஒலிகள் எல்லாம் தனி ஒலிகள். அவைகளுக்கு ஒலிப்பியியல் விவரணைகளைக் கொடுக்கமுடியும் மொழியியலாரால். தனி ஒலிகள் தொடராக நின்று 'ஒலித்தொடர்களை' உருவாக்கும்.

ஒலித்தொடர்களின் மேலே படர்ந்து காணப்படும் ஒலியம்சங்கள் 'பரவல்ஒலிகள்'. ஃபர்த்தால் உருவர்க்கப்பட்ட 'பரவல் ஒலி' என்ற கருத்து, அமெரிக்க மொழியியலாரான 'ஹேரிஸ்' என்பவர் கொண்ட 'நீள் ஒலியம்சம்' என்ற கருத்தோடு ஒத்தது எனக்கருதுவர் சிலர். ஆனால் லண்டன் மொழியியலார் 'படர் ஒலியம்சத்தையும்', 'நீள் ஒலியம்சத்தையும்' வேறுபடுத்துவர். நீள் ஒலியம்சம் தனித்து நிற்கும் தன்மை வாய்ந்தது. அவைகளை, தனி ஒலிகளைப் பிரித்தெடுப்பது போல் பிரித்தெடுத்துத் தனி ஒலிக்கான அந்தஸ்தை அமெரிக்க அறிஞர்கள் கொடுப்பர். பரவல் ஒலி, தனி ஒலி போன்றதல்ல. பரவல் ஒலி பரவி நிற்கும் பரப்புக்கும், நீள் ஒலி பரவி நிற்கும் பரப்புக்கும்

வித்தியாசம் உண்டு. மேலும் படர் ஒலிகளும், படர் ஒலி அம்சங்களும் ஒரு மொழியின் இலக்கண அமைப்போடு தொடர்புடையதாயிருக்கும். பரவல் ஒலிகள் சில வேளைகளில், சில இலக்கணக் கூறுகளை வெளிப்படுத்தும் பிரதிநிதிகள் போன்று தோன்றும். 'சுண்டானீஸ்' என்ற மொழியில் (Robins. R. H. 1953) 'மூக்கொலிப்பு' ஒரு 'பரவல் ஒலியம்சம்'. ஒரு சொல்லில் காணப்படும் வெவ்வேறு உருபன்களில் ஒரு உயிரொலி மட்டும் 'மூக்கொலிப்பு' அம்சத்தைப் பெறும். அதாவது மூக்கொலிப்பு சாரும் உயிரொலிகளின் எண்ணிக்கையைக் கொண்டு ஒரு சொல்லின் உருபன் எண்ணிக்கையை அறிய முடியும். mãrios என்ற சொல்லில் ஒரு மூக்கொலி சார் உயிர் ஒலி இருப்பதால் அது ஒரு உருபனைக் கொண்ட சொல் என்றும், 'mãriãk' என்ற சொல்லில் இரண்டு மூக்கொலிப்பு சார்ந்த உயிரொலிகள் இருப்பதால், அச்சொல், இரண்டு உருபன்களைக் கொண்ட ஒரு சொல் எனவும் கூறலாம். 'தெரேனா' என்ற மொழியில் (J. T. B. Samuel. 1960) மூக்கொலிப்பு ஒரு பரவல் ஒலியப்சம். 'தன்மை இடம்' என்ற இலக்கணக்கூறை வெளிப்படுத்தும் பிரதிநிதியாக அது திகழ்கிறது (ãyõ : e'mõ?u).

படர் ஒலிகளைக்குறித்த வர்ணனையில் அவை நிற்கும் இடம், அவைகளின் 'படற்சி' (பரப்பு) ஆகியனவற்றை விளக்குவர் லண்டன் மொழியியலாரும், ஃபர்த்தும். படர் ஒலிகள். தனிஒலிகளையும், தனி ஒலித்தொடர்களையும் சார்ந்து நிற்கும். பரவல் ஒலிகளை, அவை சார்ந்து நிற்கும் ஒலித்தொடர்வகைகளின் அடிப்படையிலும், அவைகளின் வியாப்தியின் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம். ஒலித்தொடர் வகைகளின் அடிப்படையில், பரவல் ஒலிகளை, அசையம்சப்பரவல் ஒலி, அசைப்பரவல் ஒலி, சொல் பரவல் ஒலி, சொற்றொடர் பரவல்ஒலி, வாக்கியப் பரவல் ஒலி என வகைப்படுத்தலாம். பரவல் ஒலிகள் ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு மொழிக்கூறிலும் வேறுபட்டுக் காணப்படும். ஒரே பரவல் ஒலியம்சம் அசை, சொல் முதலியனவற்றில் பங்கெடுக்கும் மொழிகளில் காணப்படும் பரவல் ஒலியம்சங்கள் சில பின்வருமாறு: அழுத்த (விசை) ஒலிப்பு, நீட்டல் ஒலிப்பு, நாத ஒலிப்பு, சுருதி ஒலிப்பு, அண்ண ஒலிப்பு, உதட்டொலிப்பு, மூச்சொலிப்பு, மூச்சுத்தள்ளொலிப்பு, முதலியன. வாக்கியப் பரவல் ஒலியாக 'நாதத்தொடர்

ஒலிப்பு' வரும். நீட்டல், நாத, அழுத்த ஒலிப்புகள் சொல்லின் படரொலியாக வரும். மூச்சுத்தள்ளொலிப்பு, நீட்டல் ஒலிப்பு, நாத ஒலிப்பு முதலியன அசை பரவல் ஒலியாக வரும். அண்ண ஒலிப்பு, உதட்டொலிப்பு, 'ட'கார ஒலிப்பு முதலியன அசையங்கப் பரவல் ஒலியாக வரும். பரவல் ஒலிகள் தொடர்நிலையிலும் பெயர்ச்சி நிலையிலும் நிற்பதைக்காண முடியும். அழுத்த ஒலிப்பு பரவல் ஒலிகள் பெயற்சி நிலையிலும், நாத ஒலிப்புகள் தொடர்ச்சி நிலையிலும் நிற்பதை நாம் மொழிகளில் காணலாம். ஆங்கிலத்தில் 'KT' என்ற சொல்லில் (Key), 'மூச்சுத்தள்ளொலிப்பு' என்ற படர்ஒலியம்சம் இருக்கிறது. அதை 'ஹ'கார படரொலி மூலம் விளக்கலாம். 'Key' என்ற சொல்லின் தனி மற்றும் பரவல் ஒலீ விவரணைப் பின்வருமாறு;

$$\overline{k\ i\ :}\ h = \overline{k + i\ :}\ h$$

$C_{13}\ V_7$

('k' என்ற தனி மெய்யொலியும், 'i :' என்ற தனி உயிரொலியும் நிற்கும் ஒலித்தொடர் தான் /k i :/. அவ்வொலித் தொடரில் 'மூச்சுத்தள்ளொலிப்பு' என்ற படரொலியம்சம் பரந்து நிற்கிறது). ஒலியியல் கொள்கையை விளக்கும் போது மொழி விவரணையைத் தழுவிய 'தொடர்பு புதுப்பித்தல்' என்ற கருத்தை ஃபேர்த் குறிப்பாக விளக்குவார். மொழி விவரணைகளை நாம் வளர்ச்சியின் அடிப்படையில் புதுப்பிக்கலாம். அவ்வாறு புதுப் பிக்கும் போது, மொழி ஆராய்ச்சியில் கண்டு பிடித்த சில உண்மைகளையும், ஏராளமான மொழி பற்றிய குறிப்புகளையும் இணைக்கவேண்டும்.

3. 4 சொல் விவரணை

மொழியில் காணப்படும் சொற்களும், தொடர்நிலை மற்றும் பெயற்சி நிலைகளைக் காட்டிநிற்கும். தொடர்புநிலையில் நிற்கும் சொற்களை நன்றாக விளக்குவர் லண்டன் மொழியியலார். சொற்கள் தொடர் நிலையில் நிற்பதைச் 'சொல் தொடர்ச்சி' என்பர். சொல் தொடர்ச்சிகள், சாதாரணமானவைகளாகவும், முக்கியமானவைகளாகவும், மரபு வழி வந்ததாகவும் இருக்கலாம். 'நல்லபெண்' என்ற 'சொல் தொடர்ச்சி', சாதாரண

சொல் தொடர்ச்சியின் எடுத்துக்காட்டு. 'கார்த்திகை தீபம்' சொல் தொடர்ச்சி 'அசாதாரணமான அல்லது முக்கியமான சொல் தொடர்ச்சி. ஏனென்றால் அத்தொடர்ச்சி ஒரு குறிப்பிட்ட 'குறுகிய பொருளை' உணர்த்துகிறது. 'ஆடிப்பட்டம், சித்திரை மாதப்பிறப்பு, கோடை விடுமுறை, பொடி உழவு' முதலியவற்றை யும் அசாதாரண சொல் தொடர்ச்சி காட்டும் தொடர்கள் எனலாம். சில சொற்கள் ஒரு குறிப்பிட்ட மொழியில், வழிவழியாக தொடர்ச்சி நிலையில் நிறுத்தப்பட்டு உபயோகிக்கப்படும். அத்தகைய தொடர்களின் பொருளை, அத்தொடரின் அங்கங்களாக நிற்கும் சொற்களின் பொருள்களை சேர்ப்பதன் மூலம் பெற முடியாது. அத்தகைய 'சொல் தொடர்ச்சி' களை 'மரபுச்சொல் தொடர்ச்சி' எனலாம். (எ. கா. மலடிமகன், குதிரை கொம்பு, உள்ளங்கை நெல்லிக்கனி முதலியன) சொல் தொடர்ச்சியை, பழக்கமான (பயிற்சியான) சொற்கூட்டுகள் என விளக்குவர் ஃபர்த். ஆங்கிலத்தில் 'pretty' 'hand some' என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கின்றன என்று கொள்ளலாம். இருந்தாலும் அவைகளின் 'சொல் தொடர்ச்சி நிலையில்' வேறுபாடு காணப் படுகிறது. 'pretty boy hand some girl' என்ற சொல் தொடர்ச்சி கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஆனால் pretty girl hand some boy என்ற தொடர்ச்சிகள் ஏற்றுக் கொள்ளப்படுபவை. சொல் தொடர்ச்சிகளை இலக்கண அடிப்படையிலும், பொருளின் அடிப் படையிலும் விளக்க முடியும். 'நல்ல பையன்' என்ற தொடர் இலக்கண அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்,. ஏனென்றால் தமிழில் பெயரெச்சம் + பெயர் என்ற இலக்கணத்தொடரை நாம் ஏற்றுக்கொள்கிறோம். '*வேகமாக பையன் என்ற தொடரை நாம் இலக்கண அடிப்படையில் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் வேகமாக' என்ற சொல் 'வினை அடையையும், 'பையன்' என்ற சொல் 'பெயரையும்' குறிக்கிறது. தமிழில் வினை அடை + பெயர் என்ற இலக்கணக்கூற்றுத் தொடர் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இதைப் போல் 'பொருள் அடிப்படையிலும்' ஏற்றுக் கொள்ளப் படும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படாத தொடர்ச்சிகளை நாம் விளக்க முடியும். (எ. கா. 1. பொருளடிப் படையில் ஏற்றுக் கொள்ளப்படும் சொல் தொடர்ச்சிகள்: நீல வானம், பசும் பால், நரைமுடி மண்ணெண்ணய் விளக்கு. ஏற்றுக் கொள்ளப் படாத

சொல் தொடர்ச்சிகள்: பச்சை வானம், காளைப்பால், நீலமுடி, தண்ணீர் விளக்கு) பலவகையான சொல் தொடர்ச்சி எடுத்துக் காட்டுகளை ஆராய்வதன் மூலம், பொருளடிப்படையிலான மற்றும் இலக்கண அடிப்படையிலான சொல் தொடர்க்சிகளைப் பிரித்து விளக்க முடியும். அசாதாரண சொல் தொடர்ச்சிகளை எழுத்தா ளர்களும், கவிஞர்களும் தங்களுக்கான தனி நடையை உருவாக்கும் நோக்கோடு கையாள்வர். 'மொழி நடை' என்பதைச், சிலர், மரபு வழியில் நின்று விலகிய வகையில் மொழியைக் கையாளும் விதம் என விளக்குவர். அசாதாரண சொற்றொடர்ச்சிகளில் சில மரபு வழியிலிருந்து விலகியனவாயும் இருக்கும். சொல் தொடர்ச்சிகள், சில குறிப்பிட்ட சொற்களின் உபயோகங்களை விளக்கவும், மிகத் தெளிவான சொல்லகராதிகளை உருவாக்கவும் பயன்படு கின்றன.

ஒரு சொல்லின் பொருளை அந்த சொல் குறிக்கும் மொழிய மைப்பினுள் வராத பொருள்களின் மூலமும் (சிலர் அத்தகைய பொருள்களை 'வெளியுலகப் பொருள்கள் 'என்றோ' 'எண்ணங் கள்' என்றோ கொள்வர், ஒரு சொல்லின் பொருளடிப்படையில் அமைந்த 'சொல் தொடர்ச்சி' அமைப்பின் மூலமும் விளக்க முடியும் என்பர்.

3.5 இலக்கண விவரணை

சொற்களின் இடையே நிலவும் தொடர்நிலைத் தொடர்பை ''சொல் தொடர்ச்சி' என விளக்கினோம். ஒரு மொழியின் இலக்கணக்கூறுகள் 'தொடர்நிலைத் தொடர்பில்' நின்றால் அந் நிலையை இலக்கணத் 'தொடர்ச்சி' எனலாம். ஒரு மொழிக்கூறை 'இலக்கணக்கூறு' எனக்கொள்ளவேண்டுமென்றால் அது எதாவது ஒரு இலக்கணப் பெயரால் அழைக்கப்படவேண்டும். 'இலக்கணப் பெயர்கள் தெளிவானவை என்றாலும், இலக்கணக்கூறுகள் காட்டும் இலக்கணத்தன்மைகள் ஸ்தூலமானவை அல்ல. இலக்கணத் தொடர்ச்சியைக்காட்டும் கூறுகள் இடைவெளியில்லாமல் அடுத் தடுத்தும், இடைவெளியுடனும் நிற்கும் தன்மை கொண்டவை. 'இசைவுக் கூறுகள்' (concord) இடை வெளியோடு நிற்கும் இலக்கணக்கூறுகள். (தமிழில் 'அவன் வந்தான்' என்ற வாக்கி

யத்தில் எழுவாயில் காணப்படும் -வன் உருபனும், பயனிலையில் காணப்படும் -ஆன் என்ற உருபனும் (படர்க்கை ஒருமை ஆண் பால் கூறு) இசைவுக் கூறுகள். இசைவு இலக்கணக் கூறுகளைப் போன்ற சில இலக்கணக்கூறுகளை 'வாக்கிய பரவல் கூறு') (sentence prosodies) என்பர் ஃபர்த். இந்த 'பரவல் (படர்) இலக்கணக்கூறு, இலக்கணக்கூற்றுத்தொடரில் படர்ந்து நிற்கும் கூறு என்று கொள்ளும் போது, ஒலியமைப்பில் பரந்து நிற்கும் 'பரவல் ஒலி' யை நம் நினைவில் கொண்டு வரும். எதிர் மறை இலக்கணக்கூறுகள், காலம் காட்டும் கூறுகள், பால், கண் கூறுகள் முதலியன மொழிகளில் 'வாக்கிய பரவல் இலக்கணக் கூறுகளாக வரும்.

இலக்கண அமைப்புகள் இலக்கணகூறுகளின் 'வரிசையையும் (order), கிரம வரிசையையும் [sequence] காட்டும். தொடர்ச்சி யாக நிறுத்தப்பட்ட இலக்கணக்கூறுகள் 'வரிசை' யை வெளிப் படுத்தும். வரிசையில் நிற்கும் இலக்கணக்கூறுகள் இடைவெளி யுடனோ, இடைவெளி இல்லாமலோ நிற்கக்கூடும். பேச்சுமொழி யிலும் எழுத்து மொழியிலும் தொடர்ச்சியாக நிற்கும் மொழிக்கூறு கள் 'கிரமவரிசையையும்' காட்டும். ஒரு வாக்கியத்தில் காணப் படும் 'இலக்கண கூறுகளின் தொடர்நிலை அமைப்பு' (வரிசை) ஒரு வகையாகவும், அவ்விலக்கண கூறுகளை பிரதிபலிக்கும் 'மொழிக் கூறுகளின் தொடர் நிலை அமைப்பு' (கிரம வரிசை) இன்னொரு வகையாகவும் இருக்கலாம். ('அவனுக்கு நான் பரிசளித்தேன் பேனாவை' என்ற வாக்கியத்தின் கிரமவரிசையில் அவனுக்கு" என்ற சொல் ('He-dative') முதலிலும் 'பேனாவை' என்ற சொல் ('Pen-Accusative) கடையிலும் நின்று ஒருவகை கிரம வரிசையைக் காட்டுகின்றன. இந்த வாக்கியத்தின் 'வரிசை' (இலக்கணக் கூறுகளின் தொடர்நிலை தொடர்பு) பின்வருமாறு:

N + N + N + V நான் + புத்தகத்தை + அவனுக்குப்

(S) (O) (D)

பரிசளித்தேன்). லண்டன் மொழியியலாரின் தொடர் அமைப்புக் கொள்கை (syntagmatic structure description) அமெரிக்க மொழி யியலாரின், கூறு-இணைப்பு தொடரமைப்புக் கொள்கையை ஒத்த

தாக இருக்கிறது. அதாவது பெருமொழிக்கூறான சொற்றொடர், வாக்கியம் முதலியனவற்றின் இலக்கண அமைப்பு, தொடரான சில இலக்கணக்கூறுகளை ஏற்கும் 'சட்டம்' அல்லது 'கூடு' (Frame) போன்றது. அத்தகைய தொடர்ச் சட்டங்களில் வெவ் வெறு தகுந்த மொழிக்கூறுகளை இடும் போது வாக்கியங்களும், சொற்றொடர்களும் உருவாகும். இத்தகைய வகையான அமைப்பு விளக்கம்தான் லண்டன் மொழியியலாரின் இலக்கண விளக்க மாகும்.

இலக்கண அமைப்பை விளக்குகையில் இலக்கணக் கூறுகளின் தொடர்நிலை அமைப்பையும், இலக்கண பெயற்சி நிலை அமைப் பையும் விளக்க முற்படுவோர் லண்டன் மொழியியலார். ஆகவே மரபு இலக்கணத்தாரும், இன்றைய சில இலக்கணத்தாரும் பிரிக்கும் சொல்நிலை சொற்றொடர்நிலை என்ற இருநிலைகளை யும் லண்டன் மொழியியலார் பிரித்துத் தனித்தனியே விளக்க முயல்வதில்லை.

குறிப்பாக, ஃபர்த்தின் இலக்கண ஆராய்ச்சியிலிருந்து, அவர் இலக்கண அமைப்பை விளக்க 'இலக்கண வர்க்கங்களையும் (grammatical categories), இலக்கண அளவைகளையும் (grammatical scales) ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையைக்கொண் டிருந்தார் என்பது தெளிவாகிறது. இலக்கண வர்க்கங்களில் கூறு (unit), அமைப்பு (structure), வகுப்பு (class), தொகுப்பு (system) முதலியன இடம்பெறும் எனவும், இலக்கண அளவையில் 'தரம்' (rank) ஆழம் (depth) நுண்மை (delicacy) ஆகியன அடங்கும் எனவும் ஃபர்த்தின் வழிவந்த 'ஹேலிடே' தெளிவாக விளக்கு வார்.

3.6 சூழ்நிலை விவரணை

மேலினோவ்ஸ்கி என்பார் 'சமுதாய கலாச்சார சூழல்களை 'சூழ்நிலை' (context)என அழைப்பார். மேலினோவ்ஸ்கியைப் பின்பற்றி, ஃபர்த், தன் பழைய கொள்கையில் சமுதாயச்சூழ் நிலைகளைப் 'பொதுச்சூழ்நிலை' (general context), குறிப்பான சூழ்நிலை (specifice context) என இருவகைகளில் பிரிப்பர். 'பொதுச் சூழ்நிலை' எனப்படுவது சமுதாய மற்றும் கலாச்சார சூழ்நிலை,

மொழி பேசுவோரின் வரலாறு, மொழி பேசுவோர் ஈடுபடும் பல வித செயல்கள் ஆகியனவற்றால் ஆவது. 'குறிப்புச்சூழ்நிலை' எனப்படுவது ஒரு குறிப்பிட்ட பேச்சைச்சார்ந்த சூழல். குறிப்புச் சூழ்நிலைகள், பேச்சில் தோன்றும் வாக்கியம் முதலான கூறுகளை வகைப்படுத்தவும், பேச்சு நடையை அறியவும் உதவும்.

தனது புது மொழிக்கொள்கையில் 'புறச்சூழ்நிலை' (பொதுச் சூழ்நிலை என்பதை ஒரு மட்டமாகக்கருதி, அதை, மொழிக் கூறுகளை அடக்கும் இடம் என்பார் ஃபர்த். மொழியில் காணப் படும் வெவ்வேறு மட்டக்கூறுகளான ஒலி, சொல், சொற்றொடர், வாக்கியம் முதலியன புறச்சூழ்நிலையில் பங்கேற்கும். புறச்சூழ் நிலையை விவரிக்கும் போது, பேச்சில் பங்கெடுப்பவரின் தன்மை கள் (அம்சங்கள்), அவர்களது சமுதாய நிலை, பேச்சில் தோன்றும் வாக்கியத் தொடரமைப்புகள், பேசுவோரின் சொந்தக் குணங்கள், பேச்சு வகைகள் ஆகியனவற்றை விளக்க வேண்டும். புறச்சூழ் நிலை என்பது ஆராய்ச்சிக்கு உதவும் பேச்சுக்கூறுகளை பிரித் தெடுக்கவும், பேச்சுக்கூறுகளின் அம்சங்களை புறச்சூழ்நிலை அம்சங்களான புறப்பொருள்கள், புற நிகழ்ச்சிகள், ஆகியன வற்றோடு இணைக்கவும் உதவும். புறச்சூழ்நிலைகளில்' அகப் புறச்சூழ்நிலை', 'வெளிப்புறச்சூழ்நிலை' என இருவகைகள் உண்டு. 'அகப்புறச்சூழ்நிலை'களில் பேச்சில் பங்கெடுப்பவரின் தன்மைகள், தொடர்பான வெளியுலகப் பொருள்கள். பேசுவதனால் ஏற்படும் விளைவுகள் ஆகியன அடங்கும். 'வெளிப்புறச்சூழ் நிலை'யில் (புறப்புறச்சூழ்நிலை) மொழி பேசுவோரின் சமுதாய நிலை, பேச்சுக்கூறுத்தொடர்களின் வகைகள், மொழி பேசுவோரின் சொந்தத் தன்மைகள், பேச்சு வகைகள் ஆகியன அடங்கும். மொழி பேசுவோரின் சமுதாயநிலை என்பதில், அவர்களுடைய சாதி, மதம், சமூகநிலை முதலியனவற்றை அடக்கலாம். பேச்சுக் கூறுத்தொடர்புகளின் வகைகளைக் கூறும்போது, பேச்சுவகை தனிஒருவர் தானே பேசும் வகையா, இருவர் ஈடுபடும் உரையாடல் வகையா, கதைசொல்லும் நிலையில் ஏற்படும் பேச்சு வகையா, விளம்பரப் பேச்சுவகையா என்பதை விளக்கவேண்டும். மொழி பேசுவோரின் சொந்தத் தன்மையினுள் அவர்களது வயது, இனம் முதலியன அடங்கும். பேச்சுவகையில் புரட்டல் பேச்சு, தூற்றல்

பேச்சு, போற்றல் பேச்சு முதலியன அடங்கும். மேற்கூறியவை களை எல்லாம் வெளிப்புறச் சூழ்நிலையை விளக்கும்போது தெளி வாக்க வேண்டும். ஃபர்த்தின் சூழ்நிலை விவரணை எவ்விதம் சமுதாய மொழியியல் வளர்ச்சிக்கு அடிப்படையானது என்பதைச் சமுதாய மொழியின் வளர்ச்சியை நோக்குபவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

4. ஹேலிடே (1925-)

மொழி பற்றிய விளக்கத்தையும், மொழியின் நிலைபேற்றைப் பற்றிய விளக்கத்தையும், மொழி விவரணையில் கைக்கொள்ள வேண்டிய கொள்கைகளையும், அதற்காக ஏற்படுத்தும் கலைச் சொற்களையும் தெளிவாக விளக்கி, ஃபர்த் கூறிச்சென்ற பல வகைக் கருத்துக்களையும் தொகுத்து, புது உருக்கொடுத்த பெருமை ஹேலிடேயைச் சாரும். ஹேலிடேயின் ஆராய்ச்சி விளக் கங்களில் மொழிக்கொள்கை, மொழி ஆராய்ச்சிக்கொள்கை மொழி விவரணைக்கொள்கை ஆகியன தெளிவாகப் பிரிக்கப்பட்டு விளக்கப் படும். மொழிக்கென 'சாராம்சங்களும்' (Substance), உருவமும் (Form) காணப்படும் எனவும், மொழியின் உருவம், அமைப்பு என் பன புறச்சூழலான 'சமுதாயச்சூழ்நிலையோடு தொடர்புடையது எனவும் விளக்குவார் ஹேலிடே. மொழி ஆராய்ச்சியும், விவரணை யும் மொழிகளில் காணப்படும் வெவ்வேறு இலக்கண வர்க்கங் களையும்' (Categories) 'இலக்கண அளவைகளையும்' (Scales) குறித்துப் பேசவேண்டும் என்பார். மொழியின் அமைப்பை மட்டு மன்றி, மொழியின் செயல், பயன் ஆகியனவற்றையும் விளக்கு வார் ஹேலிடே.

மொழியியல் கொள்கையின் முக்கிய நோக்கம், மொழி எவ்விதம் செயல்படுகிறது என்பதை விளக்குவதே. மொழியியல் கோட்பாடு வெவ்வேறு பொதுவான (தத்துவரீதியிலான) இலக் கண வர்க்கங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்விலக்கண வர்க்கங் கள் தாம் மொழியின் அமைப்பை விளக்கப் பயன்படும். மொழியியல் கோட்பாடு, இலக்கண அளவைகளையும் ஏற்படுத்தவேண்டும். இலக்கண அளவைகள் (Scales of grammar) இலக்கண வர்க்கங் களைத் தொடர்புபடுத்தவும், மொழியின் சில தன்மைகளை இலக்

கண வர்க்கங்களோடு இணைக்கவும் உதவும். மொழி விவரணை என்பது மொழிபற்றிய செய்திகளை மொழி வர்க்கங்களோடு இணைப்பதைத் தனது கடமையாகக்கொள்ளும்.

மொழி, சாராம்சங்களையும், உருவையும் கொண்டது. ஒலிச் சாராம்சம் (Phonemic substance) எழுத்துச் சாராம்சம் (graphic substance) என்பவை முறையே, மொழியின் ஒலி மற்றும் வடிவங்களை உருவாக்கும் 'கருப்பொருளாக' அமையும். சூழ் நிலை சாராம்சம் (situation substance) மொழிக்கூறுகள் குறிக்கும் 'பொருள்களை' (meaning) உருவாக்கும் கருப்பொருளாக நிற்கும் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு 'உரு' காணப்படும். மொழியின் மொத்த வடிவத்தில் (உரு) பலவகை அங்கவடிவங்கள் காணப்படும். அவையாவன ஒலி உரு, எழுத்து உரு, இலக்கண உரு, சொல் உரு, சூழ்நிலை உரு என்பன.

மொழி, பேச்சாக உருவெடுக்கும்போது 'ஒலிகள்' உச்சரிக்கப் படுகின்றன. இத்தகைய உச்சரிப்புகள் ஒலியை உருவாக்கும். உச்சரிப்பு ஒலிகளும், ஒலியமைப்புகளும் வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியனவற்றுடன் தொடர்பு உடையன. வெளியுல கப் பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் விவரிக்கும் வகையில்தான் நாம் மொழியைப் பயன்படுத்துகிறோம். வெவ்வேறு உச்சரிப்பு வகைகளும், வெளியுலகப் பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியனவும் மொழியின் புறத்தே இருக்கும் கருப்பொருள்கள். இவைகளையே சாராம்சங்கள் என்கிறோம். ஆனால் மொழி என்பதை 'உருப் பெற்ற செயல்' எனல் வேண்டும்.

மொழியில் வெவ்வேறு 'மட்டங்களையும்' (Levels) 'தொகுப் புகளையும்' (systems) காணலாம். இலக்கண மட்டத்தில் இலக் கணக்கூறுகளையும் (grammatical entities 'இலக்கணக் கூறுத் தொகுப்பு'களையும் (grammatical system) காணலாம். இலக் கணத் தொகுப்புகள் இரண்டு வகைப்படும். ஒரு குறிப்பிட்ட, குறுகிய, எண்ணிக்கை கொண்ட (எண்ணிக்கை ஏற்றமுடியாத) மொழிக்கூறுகளால் ஆன இலக்கணத் தொகுப்பு ஒருவகை பெயரீட்டுக்கூறுகள் (pronouns), எண் கூறுகள், காலக்கூறுகள் ஆகியன இத்தகைய 'அடை தொகுப்பில்' (closed system) பங்கு

கொள்ளும். எண்ணிக்கையில் அதிகமான, எண்ணிக்கையை ஏற்ற முடியும் வகையில் அமைந்த மொழிக்கூறு தொகுப்பு இன்னொரு வகை. இதைத் 'திறந்த தொகுப்பு' (open system) எனலாம். மொழியில் காணப்படும் தனித்தன்மை பெற்ற, குறி பொருள் கொண்ட சொற்கள் எல்லாம் 'திறந்த தொகுப்பின்' அங்கமாகத் திகழும். 'சொல் தொகுப்பில்' (lexical system), மேலும் மேலும் புதுச்சொற்களை அங்கமாக ஆக்க முடிகின்ற காரணத்தால் அவை களைத் 'திறந்த தொகுப்பு' எனலாம். சொற்தொகுப்புகள் மொழி யின் 'சொல்லுருவை' (lexicon) விளக்கும்.

மொழியின் ஒலி உரு பலவகை ஒலிகளைக் கொண்டதா யிருக்கும். மொழியின் ஒலிகள் 'ஒலிச்சாராம் சத்தால்' ஆனவை. இதைப் போல் ஒரு மொழியின் எழுத்துரு பலவகை எழுத்துருக் களைக் கொண்டது. எழுத்துக்கள், எழுத்து சாராம்சத்தால் உருவாக்கப்படும். எழுத்து சாராம்சங்களை எழுத்தில் அங்கம் வகிக்கும் வெவ்வேறு 'கோடுகள்' (strokes) எனலாம். சூழ்நிலை உரு என்பது சூழ்நிலைச் சாராம்சங்களால் ஆனது. வெளியுலகில் காணப்படும் பொருள்கள், நிகழ்ச்சிகள், அம்சங்கள் முதலியன வற்றைச் சூழ்நிலை சாராம்சங்கள் எலைாம். இத்தகைய சூழ்நிலை அம்சங்கள் மொழியின் சொற்களாலும், இலக்கணக் கூறுகளாலும் வெளிப்படுத்தப் படுகின்றன. 'சூழ்நிலை உரு' மூலமே, சூழ்நிலை அம்சங்கள் மொழியின் இதர உருக்களோடு தொடர்பு படுத்தப் படுகின்றன.

மொழியை ஆராயும் போதும், விளக்கும் போதும் 'இலக்கண வர்க்கங்களை' ஏற்படுத்த வேண்டும் என்பார் ஹேலிடே. இலக் கண வர்க்கங்கள் நான்கு வகைப்படும். அவையாவன 1. மொழிக் கூறுகள் (units) 2. மொழிக்கூறு அமைப்பு (structure) 3. மொழிக்கூறுத்தொகுப்பு (class) 4. மொழிக்கூறு பெருந் தொகுப்பு (system) என்பன.

மொழிக்கூறுகள் 'ஒலித்தொடர்'களால் ஆனவை. சில மொழி கள் 'எழுத்து வடிவம்' கொண்டவை. அத்தகைய மொழிகளில் மொழிக்கூறுகள் எழுத்துத்தொடராலும் குறிக்கப்படும். ஒலித் தொடர்களும், எழுத்துத் தொடர்களும் சில 'உருவமைப்பை'க்

கண மட்டத்தில் ஒருமையைக் குறிக்கும் கூறுகள் ஒரு தொகுப்பினுள் நிற்கும். பன்மையைக் குறிக்கும் கூறுகள் இன்னொரு தொகுப்பாக நிற்கும். இவ்விரண்டு தொகுப்புகளும் சேர்ந்து பெருந்தொகுப்பான 'எண் தொகுப்பை' உருவாக்கும். சொல் மட்டத்தில், பெயர்ச்சொல் தொகுப்பு, வினைச் சொல் தொகுப்பு என்ற பெருந்தொகுப்புகளைக் காணலாம். மொழிக்கூறுத் தொகுப்பை 'பெயற்சி நிலையால் ஒத்த மொழிக்கூறுகளின் தொகுப்பு எனலாம். மொழிக்கூறு பெருந்தொகுப்பை (பெரு, மொழிக்கூறுத்தொகுப்பை) மொழிக்கூற்றுத் தொகுப்பின் தொகுப்பு எனலாம்.

மொழியின் பொது அமைப்பை விளக்கும் வகையில் மொழியியல் கோட்பாடு இலக்கண அளவைகளையும் (Scales) ஏட்படுத்த வேண்டும் என்பார் ஹேலிடே. இலக்கண அளவைகளில் நான்கு வகை உண்டு. அவையாவன 1. (மொழிகூறு) நிலை (Rank) 2. குறிநிலை (பிரதிபலிப்புத்தன்மை, experience), 3. நுண்மை (நுண் தன்மை: delicacy) என்பன.

வெவ்வேறு மட்டக்கூறுகளையும் 'படிநிலை' (Hierarchical arrangement) யில் நிறுத்தும் போது அவை தனக்கென்றே ஒரு இடத்தைப் பெறும். படிநிலையில் மொழிக்கூறுகளின் நிலையைக் (ஸ்தானம்) குறிக்க 'மொழிக்கூறு நிலை' என்ற கருத்தை பயன்படுத்தி நின்றோம். படிநிலையில் நிற்கும் தன்மையைப் பொறுத்து மொழிக்கூறுகள் சிறியனவா, பெரியனவா என்று அளந்து கொள்ளலாம். ஆகவே மொழிக்கூறு நிலை ஒரு அளவை. இலக்கண மட்டத்தில் வாக்கியம், சொற்றொடர், சொல், உருபன் ஆகியன 'படிநிலையில்' நிற்கும். வாக்கியங்களில் சொற்றொடர்களும், சொற்றொடர்களில் சொற்களும், சொற்களில் உருபன்களும் பங்கெடுக்கும். ஒரு வாக்கியத்தில் காணப்படும் படிநிலையை பின்வரும் எடுத்துக்காட்டு விளக்கும்.

எ. கா



ஒரு சொல் (3ம்படி) வாக்கியமாகக் கருதப் படுகிறதென்றால் (முதல்படி) அதை சொற்றொடராகவும், வாக்கியமாகவும் கருத வேண்டும் (எ. கா. இல்லை). சிறு மொழிக்கூறுகள் பெரு மொழிக்கூறுகளின் அங்கமாக இருக்கும் நிலை 'சாதாரணமாக காணப்படும் நிலை'. சில சமயம் பெருமொழிக்கூறுகள் மாற்றங் களுக்கு உட்படுத்தப்பட்டு 'சிறு மொழிக்கூறுகளின் அங்கமாகத் திகழும். இதனை' படிநிலை இறக்கம்' (படிநிலை வழுகல்: Rank shift) என அழைக்கலாம். படிநிலை இறக்கத்தால் வாக்கியங்கள் சொற்றொடரின் அங்கமாகவும், சொற்றொடர்கள் சொற்களின் அங்கமாகவும் திகழலாம். 'அந்த பெண்' என்ற சொற்றொடரில் 'அவன் தோட்டத்தில் பெண்ணைப் பார்த்தான்' என்ற வாக்கியம் அங்கமாகத் திகழும் போது ,அந்த தோட்டத்தில் அவன் பார்த்த பெண்'... என்ற சொற்றொடர் உருவாவதைக் காணலாம்.

அந்த பெண் என் தங்கை
↑
தோட்டத்தில் அவன் பார்த்த (பெண்) ← தோட்டத்தில் அவன் பெண்ணைப் பார்த்தான். மொழியின் விவரணைக்காக மொழியிய லாரால் ஏற்படுத்தப்படும் கலைச்சொற்களுக்கும் (கலைச்சொற்கள்

பொதுவானவை; எல்லா மொழிகளின் அமைப்பையும் விளக்கப் பயன்படுத்தப்படுபவை.) அவைகளை வெளிப்படுத்தும் வகையில் மொழியில் காணப்படும்உண்மையான, ஸ்தூலமான மொழிக்கூறு களுக்கும் இடையே நிலவும் தொடர்பை 'பிரதிபலிப்புத் தன்மை' exponence) எனலாம். தமிழில் 'ஓரசைச் சொற்களில் மெய்$_1$+ உயிர்+மெய்$_2$ என்ற ஒலித்தொடர் ஒருவகை அசையின் அமைப்பு' எனக்கூறுவது ஒரு பொதுவான விவரணை, 'கண்' என்ற ஒலித் தொடர் அத்தகைய ஓரசையைப் பிரதிபலிக்கிறது. ஒரு வகை ஓரசையின் பிரதிபலிப்பு 'கண்'; அசையின் அங்கங்களான 'மெய் + ஒலி+மெய்' எனும் பொதுத்தொடரை க்+அ+ண் என்னும் ஒலித் தொடரைப் பிரதிபலிக்கும். ஆகவே 'மெய்+உயிர்+மெய்' என்ற பொதுத்தொடருக்கும், 'க்+அ+ண்' என்ற உண்மையான மொழி ஒலித்தொடருக்கும் இடையே நிலவும் தொடர்பு' பிரதிபலிப்பு தொடர்பு எனப்படும்.

ஒரு மட்டக்கூறு இன்னொரு மட்டத்தில் எவ்விதம் குறிக்கப் படுகிறது என்பதனையும் 'பிரதிபலிப்பு நிலை' யினுள் கொண்டு வரலாம். இலக்கணக்கூறுகளான 'ஒருமை', 'தன்மை இடம்' என்பன எழுதது மட்டத்தில் 'நான்' என குறிக்கப்படும் தமிழில். 'படி' என்ற எழுத்துத்தொடர் 'கல்' என்ற வினையிலக்கணக் கூறையும், 'அளவு' என்ற பெயர் இலக்கணக்கூறையும் குறிக்கும்' இரண்டு மட்டங்களில் காணப்படும் 'பிரதிபலிப்பு தொடர்பினுள் (குறிநிலை? மட்டக்கூறுகளின் 'ஒடுக்கம்' (convergence), விரிப்பு (divergence) ஆகியனவற்றையும் காணலாம்.

மொழிக்கூறுகளின் 'நுண்மையைக் குறிக்க பயன் படுத்தும் அளவை 'நுண்மைத்தன்மை' (delicacy) எனப்படும். நுண்மைத் தன்மை என்ற கருத்தை, மொழியின் மொழிக்கூறுகள், மொழிக் கூறமைப்பு, மொழிக்கூறுத்தொகுப்பு ஆகியனவற்றோடு இணைக்க முடியுமா என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை லண்டன் மொழி இயலார். மொழிக்கூறுகளின் அமைப்பின் அடிப்படையில் மொழிக்கூறுகளின் நுண்மை நிலையைக் குறிக்க முடியும். ஒரு 'பெயர்த்தொடரின் முக்கிய அங்கங்கள் 'பெயர்ச்சொல்லும்' 'பெயரடைச் சொல்லும்' (அடை+பெயர் : நல்லகுழந்தை). அடை+பெயர் என்ற பெயர்த்தொடர் அமைப்பு நுண்மையான

தல்ல. 'அடை' என்ற கூறு நிற்கும் இடத்தில் இரண்டு அல்லது மூன்று அடைக்கூறுகளை இடுவதன்மூலம் உருவாகும் 'பெயர்த் தொடர்' நுண்மையானது எனக்கொள்ள முடியும்.

எ.கா பள்ளிக்கூடங்கள்
உயர்நிலை பள்ளிக்கூடங்கள்
—நுண்மையற்ற பெயர்த்தொடர்

பழைய உயர்நிலை பள்ளிக்கூடங்கள்
மூன்று பழைய உயர்நிலை பள்ளிக்கூடங்கள்
இந்த மூன்று பழைய உயர்நிலை பள்ளிக்கூடங்கள்
மிக நுண்மையான பெயர்த்தொடர்
(அடை - அடை + அடை + அடை + பெயர்)

மேற்கூறிய வகையில் நோக்கினால் இணைப்பு வாக்கியங்கள் (embedded sentences) பலவற்றைக் கொண்ட வாக்கியங்கள், பழநிலை இறக்கம் காட்டும் மொழிக்கூறுகள் அனைத்தும் 'நுண் கூறுகள் ஆகும் தண்மையதாக மாறும்.

மொழியின் அக அமைப்பில் ஒலி, எழுத்து, சொல் ஆகியன வற்றைப்பற்றி பேச வேண்டும். ஒலிமட்டம், எழுத்துமட்டம், இலக்கண மட்டம் சொல் மட்டம் ஆகியன மொழியின் அகமட்டங் கள், மொழியின் புற அமைப்பில் 'சூழ்நிலை' பற்றி பேசவேண்டும். மொழியின் ஒலி, எழுத்து, இலக்கணகூறு ஆகியனவற்றை விவரிக்கையில் இலக்கண வர்க்கங்களையும் [1](இலக்கண இனங் கள்?) இலக்கண அளவைகளையும் விளக்க வேண்டும்.

1. ஒரு மொழியின் சொற்கள் எல்லாம் அம் மொழியின் சொல் மட்டத்தை உருவாக்கும். சொற்றொகுதிகள் பெரியனவாகவோ சிறியனவாகவோ காணப்படும். சில சொற்கள் இணைந்து பெயர்சி நிலையில் சொல் தொகுதியில் உண்டாகும். சிறு சொல் தொகுதி களில் இரண்டு வகைகளைக் காணலாம். அவையாவன பின் வருமாறு; 1. வெளியுலகப் பொருள் குறிக்கும் சொல் தொகுதி 2. இலக்கண அம்சம் காட்டும் சொல் தொகுதி

ஒரு சொல்லோடு தொடர்நிலையில் இணையும் சொற்களும், அக்குறிப்பிட்ட சொல்லோடு இணைந்து சொல் தொகுதிகளை உருவாக்கும். அத்தகைய தொகுதிகளின் சொற்களை 'முதற் சொல்' (Node) தொடர் உறவுச்சொல் (Collocates) என பிரிக்க முடியும். 'பால்' என்ற சொல்லோடு தொடர்புடைய சொற்கள் அடங்கிய தொகுதியில் 'ஆடை, சங்கு, கோவா, காய்ச்சு, புட்டி, என்ற 'தொடர் உறவுச் சொற்களும் (எ.கா. பால் ஆடை, பால் சங்கு, பால் கோவா, பால் காய்ச்சி' பால் புட்டி) பசு, எருமை, கள்ளி என்ற 'தொடர் உறவுச் சொற்களும்' பசும் பால், எருமைப்பால், கள்ளிப்பால், பங்கெடுக்கும். ஒரு சொல்லோடு தொடர்புடைய 'தொடர் உறவுச் சொற்களின் தொகுதிகள்' ஒரு சொல்லின் 'பொருளை' (meaning) அறியவும், ஒரு சொல்லோடு சம்பந்தப்பட்ட 'சொற்களங்களை' உருவாக்கும் (Lexical Field) பயன்படும்.

ஹேலிடேயின் மொழிக்கருத்துகளையும், மொழி வி‍ெ கருத்துக்களையும் பின் வருமாறு தொகுத்து கூறலாம்.

மொழியில் மொழி சாராம்சங்களும், மொழி உருவும் படும். சாராம்சங்கள் மூன்று வகைப்படும். அவையாவ‍ெ சாராம்சம், வரி (எழுத்து) சாராம்சம், வெளிச்சூழ்நிலை சம் என்பன. மொழி உருவில் மொழி ஒலிகள், மொழி எ‍ கள், இலக்கணக் கூறுகள், சொற்கள், சூழ்நிலை ஆகி அவற்றின் அமைப்பும் இடம்பெறும். மொழி உருவில் கணக் கூறுகளும், சொற்களும் அவற்றின் அமைப்புகளும் மானவை. இவைகளோடு ஒலி மற்றும் எழுத்து ஒருபு சூழ்நிலை மற்றொரு புறமும் தொடர்பு கொண்டு நிற்கும். ஒலிகள் ஒலிச்சாராம்சங்களால் ஆனவை. மொழி எழுத் எழுத்து சாராம்சங்களால் ஆனவை. மொழி உருவின் சங் சூழ்நிலை. வெளிச்சூழ்நிலை சாராம்சத்தோடு தொடர்பு கெ ருக்கும். இலக்கண மற்றும் சொல் உருக்களோடு எழுத்து சாராம்சங்கள் எழுத்துக்கள் மற்றும் ஒலிகள் மூலமும், வெள நிலை சாராம்சங்கள், சூழ்நிலை மூலமும் தொடர்பு ப படும். பின் வரும் படம் இதனை விளக்கும் (ஹேலிடே. 1



மொழி விவரணையின் 5 அங்கங்கள் உண்டு. இவ்வங்கங்கள், அவை விவரிக்கும் பொருளைப்பொறுத்து மொழி ஒலி விவரணை, மொழி வரி விவரணை, இலக்கண விவரணை, சொல் (அகராதி) விவரணை, சூழ்நிலை விவரணை என ஐந்து வகையாகும்.

மொழிவிவரணையில் மொழிக்கென அமைந்த ''இலக்கண வர்க்கங்களைக்'' கண்டு பிடித்து விளக்கவேண்டும். இலக்கண வர்க்கங்கள் மொழிக்கூறு, கூறமைப்பு, கூறுத் தொகுப்பு, கூறுப் பெருந்தொகுப்பு என்பன. இவைகளை மொழியின் வெவ்வேறு மட்டங்களான ஒலி, எழுத்து இலக்கணக்கூறு, சொல், சூழ்நிலை மட்டங்களில் காணலாம். இலக்கண வர்க்கங்களை விளக்கும் வகையில் ''இலக்கண அளவைகளான'' பழநிலைத்தன்மை, பிரதி பலிப்புநிலை, நுண்தன்மை, ஆகியனவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

ஃபர்த் ஹேலிடே என்பாரின் கொள்கைகள் எவ்விதம் வெவ்வேறு இலக்கணச் கொள்கைகள் உருவாகக் காரணமா யிருந்தன என்பதை தற்போதைய லண்டன் மொழியியல் கொள்கைகளை ஆராய்வோர் புரிந்து கொள்ள முடியும்.

துணை நூல்கள்

1. Bazell, C,E., Catford, J C. etal (Ed) 1966. In memory of J R. Firth Longman : London.

13. Lyons, J. 1965 Firths' theory of meaning in Bazell etal 1966.

14. Malinowsky, B. 1920 Classificatory particles in the language of Kiriwina BSOS 14: 33-78.

15. ,, 1922 Argonuats of Western Pacific, London.

16. ,, 1923 The problem of meaning in primitive languages in C.K. Ogdon & I.A. Richards "The meaning of meaning", Routledge Kesgan Paul.

17. ,, 1935 Coral Gardens and their magic (Vol.2) Allen & Unwin: London.

18. Mathews, P.H. 1966 The concept of rank in Neo-Firthian grammar, S.L: 101-10

19. Mitchell, T.F. 1957, The language of buying and selling in Cyrenaia: Hesperis 44. 31-71

20. Parret, H. 1974 Discussing language: Janua Liguarum naior 93. Mouton

21. Robins, R.H. 1953 The Phonology of nasalized verb in Sundanese, BSOAS 15: 138-45.

22. ,, 1961 Obituary to J. R. Firth: Lg.37: 191-200

23. ,, 1969 Review of D.T. Longdendoen 1968: Lg. 45. 109-16

24. ,, 1971 Malinowsky, Firth and Context of Situation: in Ardener (Ed.) Social Anthropology and language, Tavisoe Publ. 34–45

25. Sampson, G. 1980 Schools of Linguistics; Hutchinson

2. Bender Samuel, J T. 1960 Some Problems of Segmentation in the phonological analysis of Ferena: Word. 16: 348-55.

3. Catford, J C. 1965 Linguistic Theory of Translation, (Chap.1): OUP: Cambridge.

4. Dinnen, F.P. 1967 An Introduction to General Linguistics Holt, Rhinehart E Winston.

5. Firth, J.R. 1957 (a) Synopsis of Linguistic Theory, 1930-55: Studies in Linguistics, Oxford.

6. „ 1957(b) An ethnographic theory of language in R W. Firth (Ed.) 'Man and Culture', London.

7. „ 1957 Papers in Linguistics, 1934-51 OUP: Cambridge.

8. Halliday, M A.K. 1961 Categories of the theory of Grammar, Word. 17: 241-92

9. „ 1970 Language Structure and Language Function in J. Lyons (Ed.) 'New Horizons in Linguistics Penguin: London.

10. Harris, Z.S. 1944 Phonemic long components, Language 20: 181-205

11. Henderson, E J.A. 1949 Prosodics of Siamese Asia Minor (New) 1

12. Longendoen, D.T. 1968 London School of Linguistics MIT: Cambridge, Mass.

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல்-வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் க. புஷ்பவல்லி

பக்கம் 458) (விலை ரூ 16/-

2. கிளை மொழியியல் (Dialectology)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 226) (விலை ரூ 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. கருணாகரன்

பக்கம் 165) (விலை ரூ 7/-

4. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-1

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 250) (விலை ரூ 12/-

5. உலக மொழிகள்-திராவிட மொழிகள்-2

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 265) (விலை ரூ 15/-

6. நரிக்குறவப் பழங்குடிமக்கள்

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 96) (விலை ரூ 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 240) (விலை ரூ 12-50/-

8. ஒலியியல் (Phonetics)

டாக்டர் சு. இராசாராம்

பக்கம் 180) (விலை ரூ 15/-

9. எழுத்திலக்கணக் கோட்பாடு

(Phonological Theories in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 306) (விலை ரூ 20/-

10. சொல்லியல் - 1 (Morphology) - பெயரியல் (Noun)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 280) (விலை ரூ 21/-

11. Linguistic Convergence

Dr. K. Karunakaran

pp. 188) (Price Rs. 10/-

12. இருமொழியம் (Bilingualism)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 152) (விலை ரூ 15/-

13. Study of Social Dialects in Tamil

Dr. K. Karunakaran

pp. 141) (Price Rs. 12/-

14. சொல்லியல் (Morphology) - வினையியல் (Verb-1)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 212) (விலை ரூ 16/-

15. சங்கத் தமிழ்

டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அச்சில்)

16. பாடல் பயிற்றுமுறை

டாக்டர் மா. சு. திருமலை (அச்சில்)

17. **Studies in Applied Tamil Sociolinguistics**

Dr. K. M. Irulappan (in press)

18. **Aspects of Language Use**

Dr. M. S. Thirumalai

pp. 140) (Price Rs. 18/-

19. **Aspects of Language Development**

Dr. S. V. Shanmugam

pp. 112) (Price Rs. 14/-

20. Sociolinguistic Patterns of Language Use

Dr. K. Karunakaran (in press)

21. நீலகிரி மொழிகள்

டாக்டர் இரா. பாலகிருஷ்ணன் (அச்சில்)

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பானஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரை களைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழி யியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1. வெளியீட்டாளர் & ஆசிரியர்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற் கழகம்,
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608 002.

2. அச்சிட்டோர்:

சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608 002.

மொழியியல்

தொகுதி 6 ஜனவரி – மார்ச் 1983 எண் 3

உள்ளுறை

வ. எண்		பக்கம்
1.	பழந்தமிழ் நூல்களின் தொகுப்பு வரிசைமுறை — ச. அகத்தியலிங்கம்	1 - 98
2.	லண்டன் மொழியியல் கோட்பாடு — செ. சண்முகன்	99 - 146